பாண்டிச்சேரி சிறப்பிதழ்

கல்கி

KALKI 27.12.92 ரூ. 3.00











பிரெஞ்சு கலாசாரத்துக்கு ஒரு பலகணி!

Safety with world-class quality

ATUL offers Non-Benzidine Dyes. In Blacks, Browns and a variety of hi-fashion shades.



The world is switching on to non-Benzidine Dyes, as these dyes are safe both to human health and the environment.

In the interest of safety, the Government of India too has issued a Notification to dyestuff manufacturers, to discontinue the manufacture and use of Benzidine Dyes.

Conscious of their social responsibility and sensitive to the needs of the leather industry, ATUL offers a range of world-class non-Benzidine Dyes.

Available in a variety of trendy, popular shades.

- Non-Benzidine Direct Dyes.
- Non-Benzidine Acid Dyes.
- Metal Complex Dyes.
- Solubilised Sulphur Dyes.

ATUL® PRODUCTS LTD.

Post Atul 396020, Dist. Valsad, Gujarat State.
Tel. : (02632-83) 261 to 265 ; 466 to 469 ; (02632) 3737
Telex : 0180-212 ATUL IN / 0180-218 ATUL IN. Fax : 02632-2197.

ATUL
In the service of the leather

வழியவிட்ட காட்சிகளும் ரீப்ளே அவமானங்களும்!



* 'கருக்' முன்னுரை

●● சுஜாதாவின் 'என் இனிய இயந்திரா.' ஆரம்பம் அமர்க்களமாகத்தான் இருக்கிறது. 'புரியலையே, புரியலையே' என்று முனகுபவர்களுக்காக சுஜாதாவின் 'கருக்' முன்னுரை. பாத்திரப் பொருத்தம், இசை, ஒலிப்பதிவு எல்லாவற்றிலும் கவனம் தெரிகிறது. வசனம் மட்டும் நிரடல். ஜீனோ, அடுத்த வாரம் வருவதாகச் சொல்லி விட்டது. காத்திருக்க வேண்டியதுதான்!



* அடுத்த ஆட்டத்தில முட்டை!

●● பெரும்பாலான நிகழ்ச்சிகளை, கிரிக்கெட் விழுங்கி விட்டது. லட்டான கேட்ச்களைக் கூடப் பெருமாள் கோவில் புளியோதரை வாங்குவது போல நம்மவர் வாங்கி வாங்கி வழிய விட்டது போதாதென்று ரீப்ளே அவமானம் வேறு! மூன்றாவது மேட்ச் ஜெயித்ததில், மூன்றில் இரண்டு பங்கு புண்ணியம் 'ஊர்க்கேரி' ராமனுக்கு. சிற்சில ஸ்ட்ரோக்களில் கிளைவ் லாயிடைப் பெரிதும் ஞாபகப்படுத்துகிறார். அனாயாசமான அந்த நாற்றுப் பதிமூன்றை அத்தனை வேகில் மறந்து விட முடியாது என்றாலும் அடுத்த ஆட்டத்தில் முட்டையா போட வேண்டும்!



* சர்வாங்க சேஷ்டை!

●● செவ்வாய்க் கிழமை நாடகம் இல்லை. (அப்பாடா!) பதிலாக குன்னக்குடியின் மெல்லிசை. பிரசித்தி பெற்ற தன் 'சர்வாங்க' சேஷ்டைகளின் மூலம் நிகழ்ச்சியை ரசிக்கச் செய்து விட்டார்.

●● மத்தியான ஒளிபரப்பை, எத்தனை பேர் பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. போன வியாழன் பிற்பகல் பார்க்க நேர்ந்ததில் (நன்றி : பந்த்) - 'பரிணய்' என்றொரு நிகழ்ச்சி. தமிழ்நாட்டுத் திருமணம் என்று ஐயர் வீட்டுக் கல்யாணத்தைச் செயல்முறை விளக்கத்தோடு ஒளிபரப்பினார்கள். பொழுது போனது தெரியாத சுவாரஸ்யம்.

●● கடந்த இரு வாரங்களாக, தன்னால் இயன்ற அளவுக்கு, வெவ்வேறு நூதன முறைகளில் பாரதியாரைப் பழிவாங்கி வந்த தூர்தர்ஷன், அவற்றுக்கெல்லாம் சிகரமாய், வெள்ளி 'இலக்கியச் சோலை'யை அமைத்து விட்டது. அதில் இடம்பெற்ற வேழவேந்தனின் 'பாரதி கண்ட பெண்மை' பற்றியதான சூயிங்கம் உரை, அளவுக்கு மீறிப் பொறுமையைச் சோதித்து விட்டது.


* ஃபீல்டிலிருந்து தூரத்த...



●● ஞாயிறு படம் 'நெஞ்சமெல்லாம் நீயே'. மோகனை ஃபீல்டை விட்டுத் துரத்திய கைங்கர்யத்தில் இதன் பங்கு மகத்தானதாக இருந்திருக்கும் என்பது பார்க்கையில் புரிந்தது. கிளைமாக்ஸில் தியாகியாகி, செத்துப் போவதற்கென்றே வரும் காதலிகளை இன்னும் எத்தனை படத்தில்தான் பார்ப்பது?

– கிச்சா

அகழ்வாராய்ச்சி முதல்





* சுப்ரமணியம்



* ஏ. குணசம்பந்தம்



* துணை வேந்தர் ஞானம்


* சண்டே மார்க்கெட்

கணிப்பொறி விஞ்ஞானம் வரை...

●● பாண்டிச்சேரியில், ஞாயிறன்று பெரும்பாலான கடைகளுக்கு ரஜா. என்றாலும் ஷாப்பிங் போகத் தடையில்லை. காலணியிலிருந்து காதணிகள் வரை என்ன வேண்டுமானாலும் வாங்கலாம்; அதுவும் பேரம் பேசிக் குறைந்த விலைகளில் வாங்கலாம். வீதிகளில் நடக்கும் இப் பேரத்துக்கு 'சண்டே மார்க்கெட்' என்று பெயர்.

●● சில ஏ.ஸி. தியேட்டர்களில் ஏ.ஸி. போடமாட்டார்கள். ஏன் போடவில்லை என்று சம்பந்தப்பட்டவர்களிடம் போய்க் கேட்டால், உடனே போடுவார்கள்! ஏ.ஸி.யை அல்ல; உங்கள் முதுகில்!

●● போனஸ் பிரச்னை, ஆலை மூடப்படும் நிலை என்று மற்ற இடங்களில் பரபரப்பு நிலவும்போது, பாண்டி ஆங்கிலோ - பிரெஞ்சு டெக்ஸ்டைல்ஸில் ஏராள வசதிகளை அரசு நிர்வாகம் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. வேலை பார்க்கும் சுமார் 6,500 தொழிலாளர்களும் தங்கள் எல்லாக் குழந்தைகளையும் கல்லூரிகளில் சேர்த்துவிட்டு விட்டுக் கவலையில்லாமல் ஹாய்யாக இருக்கலாம். +2 விலிருந்து மேற்கொண்டு, படிக்கும்போது ஏற்படும் கல்லூரிக் கட்டணம், ஹாஸ்டல் செலவு ஆகியவற்றை நிர்வாகமே தந்து விடுகிறது! (மருத்துவக்கல்லூரி, பொறி இயல் கல்லூரி உள்பட!) ஒரு தொழிலாளி அப்போலோ போன்ற பெரிய மருத்துவமனைகளில்தான் மருத்துவம் பார்த்துக் கொண்டாக வேண்டும் என்றாலும் கவலையில்லை; அந்த மருத்துவச் செலவையும் நிர்வாகமே தந்து விடுகிறது. திடீரென்று ஒரு தொழிலாளி இறக்க நேரிடும் போது, பொதுக்காப்பீட்டு வசதி மூலம் அந்தக் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும்; கூடவே தொழிலாளர்கள் அனைவருடைய அரைநாள் சம்பளமும் நன்கொடையாகக் கிடைக்கும். ஓய்வு பெறும் போது மற்ற வசதிகள் போக, நிர்வாகம் 25,000 ரூபாயை அன்பளிப்பாகத் தருகிறது. வாரிசுகளுக்கு வேலை தருகிறது. ஆண்டுதோறும் 31.5 சதம் போனஸும் தருகிறது. தொழிலாளர்களுக்கு இப்படி தாராளமாக அள்ளிக் கொடுக்கிற நிலையில் லாபம் கிடைக்குமா? ''கிடைக்காமல் என்ன....? இத்தனை வசதிகளையும் வரும் லாபத்தில் தான் செய்கிறோம்! நஷ்டமென்ற பேச்சுக்கே இடமில்லை!'' என்கிறார், ஜாயிண்ட் மானேஜிங் டைரக்டர் ஏ. ஞானசம்பந்தம்.



✱ மாத்ரி மந்திர்

●● பிரசித்தி பெற்ற ரோமெய்ன் ரோலான் நூலகத்தில், எந்தெந்தத்துறைப் புத்தகங்கள் எந்தெந்தப் பகுதிகளில் இருக்க வேண்டுமோ அந்தந்தப் பகுதிகளில் சரிவர அடுக்கி வைக்கப்படுவதில்லை; அதனால் வாசகர்களுக்குப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதாக ஒரு வாசகர் நமக்குக் கடிதம் எழுதியிருந்ததால் நூலகத்திற்குள் சென்று பார்த்தோம். அவர் எழுதியிருந்தது உண்மையாகவே இருந்ததால் நூலகரைத் தேடினோம். அவர் விடுப்பில் இருந்ததால் உதவி நூலகரிடம் விசாரித்தோம். அதற்கு வரும் வாசகர்கள் தான் காரணம் என்றார். அதாவது, ''ஒருவர் தமக்குத் தேவையான நாலு புத்தகங்களைக் காண்கிற போது, இரண்டைத்தான் வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியும் என்பதால், மற்றவற்றை என்ன செய்வது? எடுத்துச் செல்லும் இரு புத்தகங்களைத் திருப்பித் தந்துவிட்டு, மற்ற இரண்டையும் எடுத்துச் செல்வதற்குள் வேறு யாராவது அவற்றை எடுத்துச் சென்று விட வாய்ப்பிருக்கிறதல்லவா! எனவே, அந்த இரு புத்தகங்களையும் எங்காவது ஓரிடத்தில் மற்றவர்கள் கண்களில் படாதவாறு ஒளித்து வைத்துவிடுகிறார்.. அதனால்தான் நூல்கள்

✱ ஆல்வா



✱ பூமிநாதன்





● டெம்போ



● கௌசல்

[illegible] போகின்றன. இது எங்களுக்கும் தெரிந்துதான் இருக்கிறது. என்றாலும் புத்தகங்களைச் சேதப்படுத்தாத வரை வாசகர்களிடம் நாங்கள் எதுவும் கண்டிப்புக் காட்ட முடியாது; இதுதான் நூலக விதி!'' என்றார் உதவி நூலகர் பரிதாபமாக!

●● டவுன் பஸ்களைப் பற்றிப் பாண்டிச்சேரி வாசிகள் கவலைப்படத் தேவையில்லை. காரணம், டெம்போக்கள். ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய்ச் செலவிலேயே ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குச் சென்று விடலாம். கூண்டுக்குள் அடைக்கப்படுகிற நெருக்கடியில்தான் டெம்போக்களில் பயணம் செய்ய வேண்டுமென்றாலும் பாண்டிச்சேரியின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடி என்பது, ஏறக் குறையக் கூப்பிடு தூரம்தான் என்பதால், அதுவொரு பெரிய பிரச்னையாகப் படாது. பிரச்னை என்பது ஆட்டோக்களில்தான். அவர்கள் மீட்டரை வெறும் அலங்காரப் பொருள் போலவே கருதுவதால் சகட்டுமேனிக்குக் கேட்கிறார்கள்.

●● பாண்டிச்சேரி என்ற பெயர் பிரெஞ்சுக்காரர்கள் காலத்தில் ஏற்பட்ட பெயர்தான். ''முன்பு வேதவனம் என்றும் வேதபுரி என்றுமே அழைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் இங்கு மிகப்பெரிய அளவில் சம்ஸ்கிருத கலாசாலை ஒன்றும் இருந்திருக்கிறது. அதாவது வேதம் படித்தவர்கள் இங்கு ஏராளமாக இருந்ததால் அப்பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது!'' என்றார் சம்ஸ்கிருதத்தில் புலமை பெற்றிருக்கும் சுப்ரமண்யம்.

●● முன் காலத்தில் சம்ஸ்கிருதப் பல்கலைக் கழகம் என்றால் இப்போது மத்திய பல்கலைக் கழகம். இதற்கு இன்னும் கட்டட வசதிகள் முழுமையடையவில்லையென்றாலும் கல்வி முறையில் புதுமைகளைப் புகுத்தியிருக்கிறது. இதற்குத் 'தெரிவுசார் சேர்மதிப்பு முறை' என்று பெயர். பெயரைப் போல் அந்த முறையும் கஷ்டப்படுத்துமோ? ''இல்லை, மாணவர்களின் விருப்பத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யும் முறை அது!'' என்று அதுபற்றி விளக்கினார் துணை வேந்தர் ஞானம். ''அதாவது தமிழ் இலக்கியத்தை முக்கிய பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவன் கணிப்பொறி பற்றியும் வேதியல் பற்றியும் படிக்கலாம். அவரவர் விருப்பப்படி எது வேண்டுமானாலும் படிக்கலாம். முதுகலைத் தமிழ் இலக்கியம் படித்த மாணவனுக்குத் தமிழ் இலக்கியம் மட்டும்தான் தெரிந்திருக்கும் என்பதில்லை. மற்ற பாடங்கள் பற்றியும் தெரிந்திருக்கும். இந்த முறையிலுள்ள இன்னொரு வசதி, முதுகலைப் பட்டம் பெறுவதற்காக ஒரு மாணவன் இப்போது போல் ஐந்தாண்டுகள் காத்திருக்க வேண்டியதில்லை; திறமையும் கறுகறுப்பும் இருந்தால் ஒன்றரை ஆண்டுகளில் கூட அவற்றைப் படித்துத் தேறிப் பட்டம் வாங்கிச் சென்று விடலாம்.''

●● பாண்டிச்சேரியிலுள்ள நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் சந்தித்த சுவாரஸ்யமான வழக்குகளைப் பற்றிச் சொன்னார், அதில் ஒரு நீதிபதியாக இருக்கும் ஆல்வா. உதாரணத்துக்கு ஒன்று : ஆறு லிட்டர் பால் கறக்கும் என்று மாட்டுக்காரர் கொடுத்த உறுதி மொழியால் வாங்கி வந்து விட்டார் ஒருவர். அதன்படி மாடு கறக்கவில்லை. அவ்வளவுதான்! மாட்டுக்காரர் மீது வழக்குத் தொடுத்து நஷ்ட ஈடு பெற்று விட்டார் வாங்கி வந்தவர்!

●● பாண்டிச்சேரி கடற்கரை சென்னைக் கடற்கரையைப் போல் மணல் வெளி கொண்டது அல்ல என்றாலும் மக்களைக் கவர்ந்திழுக்கிறது. காரணம், சனி, ஞாயிறு தினங்களில் கடற்கரைச் சாலையில் போக்குவரத்தை முழுவதுமாகத் தடை செய்து மக்கள் சுதந்திரமாக உலாவ வசதி செய்து கொடுத்திருக்கிறது அரசு. அந்த நேரங்களில் சைக்கிளைக் கூட அந்தப் பகுதிக்குள் ஓட்டிச் செல்லக்கூடாது!

சில குழந்தைகள் மற்றவர்களை விட நன்றாக எடை போடுகிறார்களே எப்படி ?

குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது. மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக்கூடிய புரோட்டீன்கள் தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆன பிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திடஉணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி?

செரிலாக். ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த, உங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கமான பாலின் எல்லா நற்பயன்களும் அடங்கிய திட உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த பால் புரோட்டீன்கள் இதில் உள்ளன. மேலும், கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைட்ரேட்ஸ், இரும்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்கள் சரியான அளவிலே கலந்த உணவு செரிலாக். வைட்டமின்கள் A, D, E, B காம்ப்ளெக்ஸ் மற்றும் C இதற்கும் பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லேன் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன் கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால் இதில் பாலின் எல்லா நற்பயன்களும் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை சரியான அளவு எடை போடுவதற்கு வேண்டிய ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு செரிலாக்.



உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்.

இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம்.
உங்கள் குழந்தையின் வயது/பிறக்கக் கூடிய தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எமக்கு எழுதுக: செரிலாக், தபால் பை எண் 11, புது தில்லி - 110 025.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.



தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி விநியோகஸ்தர் : சாந்திலால் பிரதர்ஸ், 7, காசி செட்டி சந்து, 2-வது மாடி, சென்னை - 600 079. தொலைபேசி : 569986/560414/569826.


●● புதுவைப் பகுதிக்குள் சுமார் ஐயாயிரம் இருளர்கள் வசித்த போதும் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய - மலை ஜாதியினருக்குண்டான சலுகைகள் புதுவை அரசில் கிடைப்பதேயில்லை என்பதில் தென்னிந்திய ஆதிவாசிகள் (இருளர்) சம்மேளனத்தின் தலைவர் பூமிநாதனுக்கு ஏகப்பட்ட வருத்தம். ஆனால், முதல்வர் வைத்திய லிங்கமோ, ''புதுவைப் பகுதியில் மலைகளே இல்லை என்கிற நிலையில் மலைவாசிகள் எப்படியிருக்க முடியும்? அதனால்தான் நாங்கள் யாருக்கும் மலை ஜாதியினருக்கான சான்றிதழ்கள் கொடுப்பதில்லை. ஆனாலும் அவர்கள் தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த பகுதிகளிலிருந்து - தமிழ்நாட்டிலிருந்து சான்றிதழ்கள் வாங்கிக் கொண்டு வந்தால் நாங்கள் அதற்கான சலுகைகள் காட்டத் தயார்!'' என்கிறார்.

●● புதுவையிலுள்ள அரிக்கமேடு பகுதியில் செய்த அகழ்வாராய்ச்சியின் மூலம் இங்கும் ஒரு மிகத் தொன்மையான நாகரிகம் இருந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் முழுமையாக அகழ்வாய்ந்தால் அந்த நாகரிகம் சிந்து சமவெளி நாகரிகத்துக்கு ஈடான தொன்மை வாய்ந்ததாக இருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

●● புதுவைக்கு அருகிலுள்ள ஆரோவில்லில் கட்டப்பட்டு வரும் மாத்ரி மந்திர் (தியான மண்டபம்) உருண்டை வடிவில் உள்ளது. இது கட்டி முடிக்கப்பட்டவுடன் அமைதியான சூழ்நிலையில் மனத்தை ஒருமுகப்படுத்திக் கட்டுப்படுத்த ஆசைப்படுவோருக்கு ஒரு வரப் பிரசாதமாக இருக்கும். முற்றிலும் சலவைக் கற்களால் கட்டப்பட்டு வரும் மாத்ரி மந்திர் மன அழுக்குகளையும் கலபமாகச் சலவை செய்யும் என்பதில் சந்தேகமென்ன!

●● ''மன அழுக்குகளில் மிகவும் பிரதானமானது மத அழுக்கு!'' என்கிறார் கௌஸ். ஒரு முஸ்லீமான இவர் கட்டியிருப்பது முருகன் கோயில். முஸ்லீம் பழமைவாதிகளின் எதிர்ப்பையெல்லாம் பொருட்படுத்தாமல் 72 - ல் இந்த ஆலயத்தைக் கட்டி முடித்திருக்கிறார். விழாக்களை முன்னின்று நடத்துகிறார். இவரது பரந்த மனப்பான்மையையுணர்ந்த காஞ்சி பரமாச்சாரியார், ''அந்தக் கோயில் உன் பெயரையும் சேர்த்து, 'கௌசிக சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில்' என்றே அழைக்கப்படட்டும்!'' என்று ஆசி வழங்கினாராம்! இவரும் சரி, இவரது குடும்பமும் சரி. அசைவ உணவைத் தொடுவதுகூட இல்லை. எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் சுப்ரமண்யர் கோவிலை இவர் கட்டினாலும் தாம் ஓர் முஸ்லீம் என்பதையும் அவர் மறக்காமல் நடந்து கொள்கிறார்.

●● புதுவையில் சமூகப் பிரக்ஞையுள்ளவர்களுக்குக் குறைவில்லை. அகில இந்திய சுகாதாரச் சங்கம், சுமைதாங்கி சேவை மையம், புதுவை மக்கள் உரிமைச் சங்கம், திரி ஸ்டார் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்று ஏகப்பட்ட சமூக நல அமைப்புகள். கலையுணர்வுகளுக்கு நாலந்தா நுண்கலைக் குழு, தலைக்கோல் போன்றவை செயல்படுகின்றன. சில மாதங்களுக்கு முன்பு சென்னைத் தொலைக்காட்சியினர் 'கருஞ்சுழி' என்ற புதுமையான நாடகத்தை ஒளிபரப்பி நம்மையெல்லாம் திணறடித்தார்களே, அந்த நாடகம் தலைக்கோலின் தயாரிப்புதான்!


★ ரோமெய்ன் ரோலான் நூலகம்

●● இலக்கிய அமைப்புகளும் ஏராளம். அதில் ஒன்று, 'வெளிச்சம்' என்கிற மக்கள் கலை-இலக்கிய அமைப்பு. அதை நடத்திவரும் பாரதி வசந்தன் 'உள்நாட்டு அஞ்சலில் ஓர் இலக்கிய ஊர்வலம்' என்கிற தலைப்பில் இன்லாண்ட் லெட்டரிலேயே கவிதைகளை அச்சிட்டுப் பலரும் படிக்கும் படி தபாலில் அனுப்புகிறார். அதில் கவிதைகளை எழுதுவதற்குப் போதுமான ஆளில்லாமல் புதுப்புது இளம் கவிஞர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார் அவர்!

- பிரின்ஸ்



“தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை!”

பாண்டி கவர்னர் ஹர் ஸ்வரூப்சிங்

பாண்டிச்சேரி துணை நிலை ஆளுனர் டாக்டர் ஹர் ஸ்வரூப் சிங் பற்றி பாண்டிச்சேரி ஆளும் கட்சி வட்டாரத்தில் பல வருத்தங்கள் உண்டு. அதில் குறிப்பிடத்தக்க ஒன்று, நிர்வாகத்தில் அவர் தலையிடுகிறார் என்பது. மகன்கள், மனைவி, அமெரிக்காவில் இருக்க, பிரம்மாண்டமான ராஜ் நிவாஸில் தற்போது தனியாக இருந்து வரும் கவர்னரை, ஒரு முன் இரவில் சந்தித்தோம்.

“அன்றாட நிர்வாகத்தில் நீங்கள் தலையிடுவதாக ஒரு பேச்சு இருக்கிறதே?”

“இது போல் பேசுபவர்கள் அரசியல் சட்டம் தெரியாதவர்கள். பாண்டிச்சேரி என்பது முழு மாநிலமல்ல. மத்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசம் இது. இங்குள்ள ஆளுனர் பதவியும் தமிழ்நாடு கவர்னரைப் போன்றதல்ல. சட்டப்படி துணை நிலை ஆளுனர் என்பவர், இந்த மாநிலத்தின் தலைமை நிர்வாகியுமாவார் (Chief Administrator). ஆகையால் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பு எனக்குண்டு; அது என் கடமை. எனவே, தலையிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.”

“சமீபத்தில் தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில், முதல்வர் வைத்திய லிங்கத்துடன் நீங்களும் கலந்து கொண்டது கூட ஒரு சர்ச்சையை உண்டாக்கியது....”

“மறுபடியும் தவறான கருத்து. நடந்தது முதல்வர்கள் மாநாடு அல்ல; தென் மாநில கவுன்சில் கூட்டம். தென் மாநில கவுன்சில் உருவாக்கப்பட்ட போது பாண்டியில் ஜனாதிபதி ஆட்சி இருந்தது. ஆதலால் அப்போது கவர்னர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மேலும் முதல்வர்கள், நான் உட்பட மொத்தம் ஏழு பேருக்குத்தான் அழைப்பிதழ் வந்தது. இதை ஒரு வழக்கமான அழைப்பிதழ் என்று ஒதுக்கிவிட முடியாது. இது தவிர, நான் இந்த கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறேன் என்று தெரிந்தும் கூட, இங்குள்ள முதல்வரோ அல்லது மற்றவர்களோ நான் அதில் கலந்து கொள்ள வேண்டிய

* தாமது ஓவியங்களைக் காட்டுகிறார் கவர்னர்...



அவசியம் இல்லை என்று சொல்லவில்லையே!''


''பாண்டிச்சேரியில் நீங்கள் பதவியேற்றதும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க, பல புதிய சட்டங்கள் கொண்டு வந்ததாகக் கேள்விப்பட்டோம்...''

''ஆமாம், உண்மைதான். குறிப்பாக நிலத்தடி நீரைக் காப்பதற்கு நாம் முழு முயற்சி செய்ய வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் பாண்டியில் நிலத்தடி நீர் மட்டம் ஐந்து மீட்டரில் இருந்து 22 மீட்டர் இறங்கிப் போய் விட்டது. கடல் நீர் ஊடுருவும் அபாயம் இருக்கிறது. பாண்டிச்சேரியைச் சுற்றி ஏகமாகத் தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்றன. தண்ணீரை அடிப்படை மூலப் பொருளாகக் கொண்டு செயல்பட இருக்கும் அல்லது தண்ணீர் நிறைய உபயோகமாகும் தொழிற்சாலைகள் துவங்கக் கடற்கரையில் இருந்து ஆறு கி.மீ. தூரம் வரை இனி அனுமதி மறுக்கப்படும். அதே போல் இந்த ஆறு கி.மீ. தூரத்தில் குழாய்க் கிணறுகளுக்கும் அனுமதி கிடையாது. கிராமப்புறங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்தால், இரண்டு குழாய்க் கிணறுகளுக்கு மத்தியில் 150 முதல் 500 மீ இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் பவுண்டேஷன் கூட்டுறவோடு இரண்டு கிராமங்களை மாதிரி கிராமங்களாக எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்!'' என்று சொல்லும் கவர்னர் ரியோ டி-ஜெனிரோவில் நடந்த சுற்றுச்சூழல் மாநாட்டுக்கு இந்தியக் குழுவில் ஒருவராகச் சென்று வந்தவர்.

ஹர்ஸ்வரூப் சிங் நல்ல ஓவியரும் கூட. வாஷிங்டனில் பணிபுரிந்த போது முறைப்படி ஓவியம் வரையக் கற்றுக் கொண்டாராம். ராஜ் நிவாஸில் ஓர் ஓவியக் கூடத்தை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். அந்த ஓவியக் கூடத்தின் சிறப்பு என்னவென்றால், அங்கு வைக்கப்பட்டுள்ள ஓவியங்கள் அனைத்துமே, அந்த மாநில ஓவியர்களே வரைந்தவை. கவர்னர் தீட்டிய ஓவியங்களும் அங்கு உள்ளன. தற்சமயம் தாம் வரைந்து கொண்டிருக்கும் ஓவியங்களை நம்மிடம் சந்தோஷமாகக் காட்டிய கவர்னர், ''கூடிய விரைவில் தனியாகவே ஓர் ஓவியக் கண்காட்சியை நடத்த இருக்கிறேன்!'' என்றார்.

– ஸ்ரீநிவாசன்





பொது ஜனம்
ஆஹா! என்ன அழகு, என்ன கவர்ச்சி... என்ன சுத்தம்!... ஒன்னரைக் கோடி ரூபாய்ல அரசியல் தலைவர் சமாதி ரெடி... வாங்க, வந்து பாருங்க...
அதெல்லாம் சரிதான்!... இந்தக் குப்பைக் கூளங்க- ளுக்கு ஒரு வழிபண்ணக் கூடாதா?
அர்ஜுன் சிங்
ராஜினாமா
அதில கையெழுத்துப் போட்டீங்களோ, பொழச்சீங்களோ... இல்லேன்னா இதில கையெழுத்துப் போடும் படியா ஆகியிருக்கும்!...
ஆர். எஸ். எஸ்ஸின் உடற்பயிற்சி சாகசமெல்லாம் பண்ண முடியுமா என்ன? பதவியில நீடிக்க- ணும்னா
பண்ணியாக- ணும்... வழி... வழி...
பவார்
திவாரி
அர்ஜுன் சிங்
ஜெ.



கல்கி



1992
டிசம்பர் 27
மலர் : 51
இதழ் : 22
ஆங்கீரச
மார்கழி 12

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

அர்ஜுன்சிங்கின் டிஸ்மிஸ் அரசியல்!

கரசேவை என்று ஊரை ஏமாற்றி பாபர் மசூதியைத் தகர்த்த துரோகச் செயலைத் தொடர்ந்து நாடு தழுவிய அளவில் நடந்த கலவரங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் செத்துப் போனார்கள். மடிந்தவர்களை விடக் குற்றுயிரும் கொலையுயிருமாகத் துடிப்பவர்களும், வீடு வாசல் இழந்து தவிப்பவர்களும் அதிகம் என்பதோடு இவர்கள் அனுபவிக்கும் துன்பமும் மிகுதி. வோட்டுப் பிடிக்கும் ஆசையில் வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். வலையில் சிக்கி இன்று பி.ஜே.பி. தீராப் பழியைச் சுமக்கிறது. ''கல்யாண்சிங் அரசு இரண்டு ஏக்கர் சொச்சம் நிலத்தைக் கையகப்படுத்தியதே செல்லாது'' என்ற நீதி மன்றத் தீர்ப்பு, பி.ஜே.பியின் கண்மூடித்தனமான செயல்பாடுகளை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

பி.ஜே.பி. தலைவர்களுள் ஓரளவு நிதானத்துடன் பேசுபவர் வாஜ்பாயி ஒருவரே. ''கரசேவைக்கு இத்தனை கூட்டம் சேர்க்க வேண்டாம் என்றேன்; கேட்கவில்லை. பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்து பி.ஜே.பி. கட்சி சார்பாக அறிக்கை விட வேண்டும் என்றேன். இதையும் சக தலைவர்கள் ஏற்கவில்லை'' என்று வருந்தியிருக்கிறார். ''கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போக மசூதி இடிபட்டதும் அத்வானி கண்ணீர் விடுவது போன்ற நிலையில் இருந்தார்'' என்று சாட்சியம் கூறுகிறார்.

இவ்வாறு பி.ஜே.பி. தலைவர்கள் தர்மசங்கடப்பட்டுக் கையைப் பிசைந்து கொண்டிருக்கும் நிலை மாறி, இப்போது காங்கிரஸ் தர்மசங்கடத்துடன் நெளியும் நிலைமை தோன்றி இருக்கிறது என்றால், காரணம், பிரதமர் மட்டுமல்ல, அவருக்கு ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்தி விட்ட அர்ஜுன்சிங்கும் தான். காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டு மத்திய அமைச்சரவையே கவிழ்ந்து விடாதிருக்க நரசிம்மராவ், அர்ஜுன்சிங்குக்கு விட்டுக் கொடுக்க நேர்ந்து விட, இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது!

பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக உ.பி.யில் பி.ஜே.பி. அரசு டிஸ்மிஸ் ஆனதும் சில பி.ஜே.பி., வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் கைதானதும் சரி. ஆனால் தொடர்ந்து, வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளுக்கும் தடை என்று ஆரம்பித்து, இப்போது பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களின் அரசுகளும் டிஸ்மிஸ் என்று முடிந்திருப்பது தேவைக்கு அதிகமான எதிர்நடவடிக்கைகள். இதனால் காங்கிரஸ் அனுதாபம் இழக்கும்; பி.ஜே.பி. இழந்த செல்வாக்கையும் அனுதாபத்தையும் திரும்பப் பெறும். உபயம் : அர்ஜுன் சிங்.

தடை செய்யப்பட்ட மதச் சார்புள்ள இயக்கங்களின் தொண்டர்களும் தலைவர்களும் தலைமறைவாகி விடுவார்கள்; அவர்களுக்கு பி.ஜே.பி. அரசுகள் அடைக்கலம் தரும் என்பது உண்மைதான். ஆனால் இதனால் பெரிய விபரீதம் ஏதும் நடந்து விடாது. பார்க்கப் போனால் மற்ற பல மாநிலங்களை விடவும் பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களிலேயே அதிக அமைதி நிலவி வந்தது. இது இயல்பும் கூட. ஏனெனில், அங்கே பி.ஜே.பி. ஆண்டதால் ஹிந்து தீவிரவாதிகள் அந்தக் கட்சிக்கு மேலும் கெட்ட பெயர் ஏற்படுவதைத் தவிர்ப்பார்கள்; முஸ்லிம் தீவிரவாதிகளோ, ஆள்வது பி.ஜே.பி. அரசு என்பதால் சற்று பயம் கலந்த தயக்கம் காண்பிப்பார்கள். எனவே டிஸ்மிஸ் உத்தரவு தேவையற்றது.

மதச் சார்பின்மை என்பது இறையுணர்வைப் புறக்கணிப்பது அல்ல. எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் அரசு இயங்குவதுதான். எனவே எந்த ஒரு மதச்சார்புள்ள அமைப்புக்கும் அரசு தடைவிதிப்பது புதிய பிரச்னைகளையே தோற்றுவிக்கும். 'அகாலி தளம், முஸ்லிம் லீக் - போன்றவற்றை ஏன் தடை செய்யவில்லை?' என்ற கேள்வி எழும். சட்டப்படி இத்தகைய தடை உத்தரவு (தாற்காலிகமானது என்றாலும் கூட) செல்லுபடியாகுமா என்பதும் சந்தேகம்.

எனவே, மதச் சார்புள்ள அமைப்புகள் இருந்தாலும் அவை ஆட்சி அமைக்க முடியாது என்றும் ஆட்சிக்கு வர விரும்பும் கட்சிகளுக்குப் பிரசாரம் செய்து உதவ முடியாது என்றும் அப்படி உதவினால் அந்தத் தேர்தல் செல்லாது என்றும் சட்டம் இயற்றுவதுதான் சிக்கல் தீர வழி. மதத்தின் பெயரால் வோட்டுப் பெற முடியாது என்றாலே எல்லாம் சரியாகி விடும். இது நமது அரசியல் சாசனத்துக்கு உகந்ததாகவும் இருக்கும்.

இந்த நோக்கில் சிந்தித்து, சட்ட நிபுணர்களின் உதவி பெற்று மத்திய அரசு செயலாற்றட்டும்.

கண் பயிற்சி செய்யுங்கள்; மூக்குக் கண்ணாடியைத் தூக்கியெறியுங்கள்!


* ஸ்யாம் குமார் ராய்

இப்போதெல்லாம் சிறு வயதிலேயே பார்வைக் கோளாறுகளுக்காகக் கண்ணாடி அணிவது சர்வ சாதாரணமாகி விட்டது. இப்படிக் கண்ணாடி அணிவது தவிர்க்க முடியாத ஓர் அம்சம் என்றுதான் அனைவரும் நம்பிக் கொண்டிருக்கிறோம். ''இது முற்றிலும் தவறான நம்பிக்கை!'' என்கிறார் பாண்டிச்சேரி ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமத்திலுள்ள 'கண்ணின் சரியான பார்வைப் பள்ளிக் கூடத்தில் (School for perfect Eyesight) பயிற்சியாளராகப் பணியாற்றும் ஸ்யாம் குமார் ராய்.

''பெரும்பாலும் கிட்டப் பார்வைக் கோளாறு (Myopia) காரணமாகத்தான் சிறு வயதுக்காரர்களுக்குக் கண்ணாடி அணிவிக்கப்படுகிறது. சில பயிற்சிகளின் மூலம் கண்களைத் தளர்ந்த (Relax) நிலைக்குக் கொண்டு வந்தாலே பலர் கண்ணாடி அணிய வேண்டிய அவசியம் இருக்காது. கண்ணாடி அணிந்தே ஆக வேண்டிய நிலை வெகு சிலருக்கு ஏற்பட்டாலும் அவர்களுடைய கண்ணாடியின் ... திறை (Power) ஓரளவு குறைக்கலாம்; மேலு கொண்டு கண்ணாடியின் சக்தி அதிகரிக்காமலிருக்குமாறு பார்த்துக் கொள்ளலாம்!'' என்கிறார் ஸ்யாம் குமார் ராய்.

''இது மாத்திரமல்ல; தூரப் பார்வை (Hypermetropia) வயோதிகப் பார்வை (Presbyopia) இயல்பாகவே உள்ள குறைபாடுகள் (Organic Error), கண்பிறை (Cataract), மாறு கண் (Squint) கண்விழி இங்குமங்கும் செல்லுதல் (Nystagmus) கண்கோளம் இறுகுதல் (Glaucoma) போன்ற பலவிதமான கண் கோளாறுகளுக்கும் நாங்கள் சொல்லித் தரும் பயிற்சிகளைத் தவறாமல் செய்து வந்தால் நிரந்தரமாகவே தீர்வு காணலாம்!''

அவர்கள் சொல்லித் தரும் சில எளிமையான பயிற்சிகளையும் விளக்குகிறார் அவர்.

* ஊஞ்சல் பயிற்சி



* சூரிய ஒளிச் சிகிச்சை



1. சூரிய ஒளிச் சிகிச்சை :

காலையிலோ அல்லது மாலையிலோ சூரியனை நோக்கி நின்று கொண்டு கண்களை மூடிக் கொள்ள வேண்டும். (இறுக்கமாக மூடக் கூடாது) மூடிய நிலையிலேயே படத்தில் காட்டியுள்ளதுபோல உடம்பை இங்குமங்குமாகப் பக்கவாட்டில் அசைக்க வேண்டும். (சூரிய ஒளி அதிகமாக உள்ள மதிய வேளைகளில் இதைச் செய்யக் கூடாது) இப் பயிற்சியை இரண்டு முதல் ஐந்து நிமிடங்கள் வரை செய்யலாம். சூரியன் இல்லாத மழைக் காலங்களில் வீட்டுக்குள்ளேயே ஒரு நாற்பது வாட் பல்பை எரிய விட்டுக் கொண்டு, அதற்கு ஓரடி



*கண்களைக் குளிர்வித்தல்

தூரத்தில் நின்று கொண்டு இப் பயிற்சியைச் செய்யலாம்!

2. கண் குளியல் :

சூரிய ஒளிச் சிகிச்சைக்குப் பிறகு இதைச் செய்ய வேண்டும். அதாவது குளிர்ந்த நீரைக் கண்களில் தெளிக்கலாம். அல்லது கண் அளவுக்கான ஒரு சிறிய பாத்திரத்தில் சுத்தமான குளிர்ந்த நீரை நிரப்பி, அதற்குள் கண்ணை மூழ்க வைத்துச் சுமார் அரை நிமிட நேரம் ஒவ்வொரு கண்ணையும் இமைக்கச் செய்யலாம். இப்படிச் செய்வதால் கண்களைச் சுற்றியுள்ள திசுக்கள் செம்மைப்படுத்தப்பட்டு இதமான தென்புடன் கூடிய ஒய்வு கண்களுக்குக் கிடைக்கிறது.

3. உள்ளங்கைப் பயிற்சி :

சாதாரணமாகக் கண்கள் களைப்புற்றிருக்கும் சமயத்தில் சிறிது நேரம் கண்களை மூடி வைத்திருந்து விட்டுத் திறந்தாலே கண்களில் ஒரு புத்துணர்ச்சியையும் பார்வையில் ஒரு தெளிவையும் உணருகிறோம். ஆயினும் அப்போது மூடிய இமைகளின் வழியாகவும் சிறிது ஒளி கண்களுக்குச் செல்கிறது என்பதால் அதன் பயன் நமக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை. அந்த ஒளியையும் தடுப்பதுதான் உள்ளங்கைப் பயிற்சி. அதாவது மூடிய கண்களின் மேல் படத்தில் காட்டியுள்ளது போல் உள்ளங்கைகளைப் பதிய வைத்துக் கொள்வதுதான் இப்பயிற்சி. அப்படி மூடிக் கொண்ட பிறகு அவரவர் விருப்பம் போல் மனத்தில் ஏதாவதொரு பொருளை நினைத்துக் கொள்ளலாம். (வாய்ப்புள்ளவர்கள் காதலியின் முகத்தையும் நினைத்துக் கொள்ளலாம்) இதைப் பத்துப் பதினைந்து நிமிடங்கள் வரை செய்யலாம்.

4. சிறிய எழுத்துக்களை மெழுகுவர்த்தி ஒளியிலும் நல்ல ஒளியிலும் படித்தல் :

கிட்டப் பார்வையுள்ளவர்களுக்கு மிக உபயோகமான பயிற்சி இது. முதலில், சிறிய எழுத்துக்களை மெழுகுவர்த்தி ஒளி




* கண் குளியல்


யிலும் பிறகு சாதாரண நல்ல ஒளியிலுமாக மாறி மாறிப் படிக்க வேண்டும். சுமார் ஐந்து நிமிடங்கள் வரை இப்பயிற்சியைத் தொடரலாம்.

5. ஊஞ்சல் பயிற்சி :

இப் பயிற்சியைப் படத்தில் உள்ளது போல் செங்குத்தான இடைவெளிகளைக் கொண்ட அட்டையின் முன் அல்லது இதே போல் செங்குத்தான கம்பிகளைக் கொண்ட உங்கள் வீட்டு ஜன்னலின் முன்னால் நின்று கொண்டு செய்யலாம். கால்களைச் சிறிது அகற்றி நின்றபடி ஜன்னலின் ஒருமுனையில் ஆரம்பித்து மறுமுனை வரை கடிகாரத்தின் பெண்டுலம் போல் தலையை இப்படியும் அப்படியுமாக அசைக்க வேண்டும். இப்படிச் செய்யும் போது கம்பிகளின் ஊடே தெரிவதைப் பார்க்க வேண்டும். ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை இதைச் செய்வதன் மூலம் காட்சியில் ஒருவிதப் பொய்த் தோற்றம் ஏற்படும். இதன் மூலம்



* உள்ளங்கைப் பயிற்சி



* பந்து விளையாட்டுப் பயிற்சி


கண்கள் முழுமையான ஓய்வைப் பெறுகின்றன.

6. பந்து விளையாட்டுப் பயிற்சி :

ஆரஞ்சுப் பழ அளவுள்ள சாதாரண ரப்பர் பந்தை எடுத்துக் கொண்டு படத்தில் காட்டியபடி நின்று கொண்டு இப்பயிற்சியைச் செய்யலாம். இடது கையிலுள்ள பந்தைத் தரையில் போட்டு வலது கையால் பிடிக்க வேண்டும். பிறகு வலது கையிலிருந்து கீழே போட்டு இடது கையால் பிடிக்க வேண்டும். ஒவ்வொரு முறை பந்தைப் பிடிக்கும் போதும் கண்களை இலேசாக மூடித் திறக்க வேண்டும். பந்தை மேல் நோக்கிப் போட்டும் பிடிக்கலாம். இப்பயிற்சியைச் சுமார் ஐந்து நிமிடம் செய்யலாம்.

7. கண் சோதனை அட்டைப் பயிற்சி :

சுவரில் ஸ்னெல்லன் கண் சோதனை அட்டையை மாட்டிவைத்துக் கொண்டு இதைச் செய்யலாம். அட்டையிலுள்ள மூன்று வரிகள்தான் தெளிவாகத் தெரிகின்றன என்கிற நிலையில் நாலாவது வரியைப் படிப்பதற்குக் கண்களைச் சிமிட்டியும் ஊஞ்சல் போல் தலையை அசைத்துக் கொண்டும் முயற்சி செய்ய வேண்டும். இதை ஐந்திலிருந்து பத்து நிமிடங்கள் வரை செய்யலாம். இப்பயிற்சியை விடாமல்



பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்   துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை-600 003. ☎ : 582676

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5	19%	20%

தனயோகம் டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ.20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5-ம் ஆண்டு முடிவில் ரூ.6000/-ஐத் திரும்பப் பெறுவீர்
10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ.50,000/- பெறுவீர்

பென்ஷனர் நலத்திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்
சேமிப்பு ரூ.10000/- வட்டி வீதம் - 19.5%கால வரம்பு 12 மாதங்கள் மட்டுமே
முன்னதாகவே பெறும் காசோலைகள், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும்
மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ.25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ.100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ.7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,20,000/- பெறலாம்
ரூ.9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள், நகைக்கடன் சவரனுக்கு ரூ.2400/- வட்டி விகிதம் ரூ.1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

(Friday Weekly Holiday.)

கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை-3

இயக்குநர் குழுத் தலைவர்
R. விவேகாநந்தன், B.Com.


பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

— சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி —

SURESH



MASS/KCPL/92



ஒவ்வொரு இரவும் ஆழ்ந்து உறங்க கர்ல்-ஆன் மெத்தைகள் மற்றும் கர்லோ-பில்லோ தலையணைகள் உத்தரவாதம் அளிக்கின்றன. இவைகள் இந்தியாவிலேயே அதிகமாக விற்பனையாகின்ற ஜதைகள் என்பதில் ஆச்சரியம் இல்லை.

Kurl-on®

மெத்தைகள்

Kurlopillo®

தலையணைகள்

இந்தியாவிலேயே
அதிகமாக விற்பனையாகும் ஜதைகள்

அசலான கர்ல்-ஆன் வாங்க அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடம் மட்டுமே வாங்கவும்.

Karnataka Consumer Products Ltd.

Marketing Division: III Floor, North Block, Manipal Centre, No. 47 Dickenson Road, BANGALORE-560 042, Ph: 587132/168/235/238/262.

Area Sales Offices: **MADRAS:** 158, Pycrofts Road, Royapettah, Ph: 831710; **COIMBATORE:** 46, Sen Gupta Street, Ramnagar, Ph: 26921; **MADURAI:** Room No. 2, Hotel Midland, 70, Dhanappa Mudali Street, Ph: 22491 (PP).

செய்யச் செய்ய முதலில் தெளிவில்லாத வரிகளெல்லாம் படிப்படியாகத் தெளிவான நிலையில் தெரியக் காணலாம்!

8. நீராவிப் பயிற்சியும் கண்களைக் குளிர்வித்தலும் :

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு ஆவி வரும் வரை கொதிக்கச் செய்ய வேண்டும். பிறகு அதில் நீலகிரித் தைலத்தைச் சில சொட்டுகள் விட்டு அதன் ஆவியை நன்றாக இழுத்து மூச்சு விட்டுக் கொண்டு முகர வேண்டும். அப்போது கண்களைச் சிமிட்டிக் கொண்டிருக்க வேண்டும். இரண்டு மூன்று நிமிடங்கள் இதைச் செய்த பிறகு, மென்மையான பஞ்சைச் சிறிதளவு எடுத்து, நீரில் நனைத்து இலேசாகப் பிழிந்து விட்டுப் படத்தில் காட்டியுள்ளது போல் கண் இமைகளின் மேல் பரப்பி வைத்துச் சுமார் பத்து நிமிடங்கள் வரை ஓய்வில் இருக்க வேண்டும். (ஜலதோஷம், சைனஸ் வியாதிக்காரர்கள் இதைச் செய்ய வேண்டிய அவசியமில்லை.)

"மேற் சொன்ன எல்லாப் பயிற்சிகளையும் சுமார் முக்கால் மணி நேரத்திலேயே செய்து முடித்து விடலாம். இந்தப் பயிற்சிகளைத்தான் கண் கோளாறுகளுக்குத் தகுந்தபடி மாறி மாறிச் சொல்லித் தந்து செய்கிறோம்!" என்கிறார் ராய்.

"இந்தப் பயிற்சிகளெல்லாம் மிகவும் எளிமையானவைதான் என்றாலும் ஆரம்பத்தில் தவறு நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, எங்கள் பயிற்சிப் பள்ளிக்கு நேரடியாக வந்து ஏழு நாட்கள் தங்கியிருந்து பயிற்சி முறைகளை நேரடியாகக் கற்றுக் கொண்டு செல்வது நல்லது. இதற்காக நாங்கள் வாங்கும் கட்டணம் வெறும் இருபத்தைந்து ரூபாய்தான்! (தங்கும் செலவுகள் தனி.) இப்படி பயிற்சிக்கு வருபவர்களில் பலர் இந்த ஏழு நாள் பயிற்சியிலேயே அணிந்திருந்த கண்ணாடியைக் கூடத் தூக்கி எறிந்து விட்டுச் செல்கிற அளவுக்குப் பலன் பெற்றிருக்கிறார்கள்!" என்கிறார் அவர்.

மேலும் பெரிய பெரிய ஊர்களிலுள்ள பொது நல அமைப்புகள் ஒன்று சேர்ந்து, இவர்கள் வந்து போகும் செலவுகளை ஏற்றுக் கொண்டு, ஓர் இடத்தையும் ஏற்பாடு செய்து கொடுத்தால் அந்த ஊர்களிலெல்லாம் தாங்கள் இலவசமாகவே கண் பயிற்சி முகாம்கள் நடத்திக் கொடுப்பதற்குத் தயார் என்கிறார் ராய்!

– சாங்கிருத்தியாயன்

HOW BUSY IS TODAY'S CHILD?



GOKULAM

The monthly magazine for children

* JANUARY ISSUE NOW ON SALE

* A GLIMPSE INTO THE WORLD OF OUR CHILDREN

* STORIES * PUZZLES
* JOKES

BUY YOUR CHILD A COPY TODAY!

96 PAGES FOR JUST Rs. 3!

GOKULAM,
EKKADUTHANGAL,
MADRAS - 600 097.

பாண்டிச்சேரி பாலிடிக்ஸ்!



முதல்வர் வைத்தியலிங்கம் : ஊசலாட்டத்தினிடையிலும் நிலைப்படுத்திக் கொள்கிறார்!



சபாநாயகர் கண்ணன் : "என் பணியை என் நண்பர்கள் செய்கிறார்கள்!"



சண்முகம் : "நேர்மையை வலியுறுத்துகிறேன்."

பாண்டிச்சேரி அரசியலில் மற்ற எல்லாக் கட்சிகளிலும் இரண்டு கோஷ்டிகள் என்றால், ஆளுங்கட்சியான காங்கிரஸில் மூன்று கோஷ்டிகள். பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சண்முகம், சபாநாயகர் கண்ணன், மத்திய அமைச்சர் பரூக் மரைக்காயர் என்று முக்கோண குடுமிப் பிடி.

பாண்டிச்சேரி அரசியலில் முதல்வர் பதவியைத் தவிர மற்ற அனைத்துப் பதவிகளையும் வகித்துப் பார்த்துவிட்ட சண்முகம், அந்தப் பதவியையும் வகித்துப் பார்த்து விட ஆசைப்பட்டார். அதனால்தான் பதினைந்தாண்டுகால எம்.பி. பதவியை விட்டு விட்டுக் கடந்த தேர்தலில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார். அப்படியொரு மலர்ப் பாதையைச் சண்முகத்திற்குப் போட்டுத்தர மற்ற கோஷ்டியினருக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? அதனால் வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்து, அவர் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியாமலே செய்து விட்டார்கள்.

பரூக் எம்.பி. யாகி விட்டதால், எம்.எல்.ஏ. வான கண்ணன்தான் முதலமைச்சர் என்கிற சூழ்நிலை உருவானது. ஆயினும் அவர் முதலமைச்சராவதை எம்.பி.யாக வெற்றி பெற்ற பரூக்கும் விரும்பவில்லை; அவமானகரமாகத் தோற்றுப் போன சண்முகமும் விரும்பவில்லை. காரணம், கண்ணன் முதல்வர் பதவி என்கிற பொறுப்பானதொரு பதவிக்கு வந்து விட்டால், அவர் தமது கோஷ்டியின் வேர்களைப் பலமான முறையில் ஊன்றிக் கொண்டு, தங்களது செல்வாக்கை மிகவும் பலவீனப் படுத்திவிடுவார் என்று அந்த இருவருமே நம்பினார்கள்.

அப்படியானால் நம்பிக்கைக்குரிய நபர் யார் என்று முதலில் அவசரமாக யோசித்துப் பார்த்தார் பரூக். அந்த யோசனையில் அகப்பட்டவர்தான் இன்றைய முதல்வர் வைத்தியலிங்கம். இவர் தமது ஆள் மாத்திரமல்ல; தம்மை மீறி எதுவும் செய்து விடமாட்டார் என்று பரூக்குக்குத் தெரியும். அதனால் வைத்தியலிங்கத்தைச் சிபாரிசு செய்தார்.

வைத்தியலிங்கம் சுயமாக எதையும் செய்து தம்மைத் தனியாக வளர்த்துக் கொண்டு விடமாட்டார் என்பதால் தமக்கும் பிரச்னை வராது என்று சண்முகமும் நினைத்தார். அதனால் அவரும் வைத்தியலிங்கத்தையே ஆதரித்தார். விளைவு? வைத்தியலிங்கம் முதல்வரானார். கண்ணன், நேரடி அரசியலில் ஈடுபட முடியாதபடி சபாநாயகர் என்கிற கௌரமான பதவிக்குள் 'அரசியல் சிறை' வைக்கப் பட்டு விட்டார்!

ஆயினும், கண்ணன் இதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ''சபாநாயகர் என்ற பதவியின் கண்ணியத்தைக் காப்பாற்ற விரும்பும் நான் நேரடி அரசியலில் ஈடுபட முடியாது என்பது உண்மைதான். அதனால் என்ன? எனது பணிகளையும் சேர்த்து எனது நண்பர்கள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்!'' என்கிறார் கண்ணன்.

இந்த கோஷ்டி மனப்பான்மைக்கு என்னதான் காரணம்? இந்தக் கேள்வியைப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் என்கிற முறையில் மாத்திரமல்ல; இப்போது நினைத்தாலும் வைத்தியலிங்கம் அமைச்சரவையைக் கவிழ்த்து விடுகிற அளவுக்கு எம்.எல்.ஏக்களின் ஆதரவைக் கொண்டுள்ளவர் என்று பலராலும் சொல்லப்படுகிற சண்முகத்திடம் கேட்ட போது, முதலில் யோசித்தார். பிறகு, ''நான் அனைவரிடமும் நேர்மையை வலியுறுத்துவது தான் காரணம்!'' என்றார்.

கடைசியில், ''பாண்டிச்சேரி ஆட்சி என்பது பணங்காய்க்கும் ஒரு மரம் என்பதை முதன் முதலாகக் கண்டு பிடித்து அமோக அறுவடையை ஆரம்பித்து வைத்தவர்கள் தி.மு.க. வினர்தான். இதை நான் பொதுப் படையாகத்தான் சொன்னேன்; வேறு விதமாக அல்ல!'' என்று சிரித்துக் கொண்டே முத்தாய்ப்பு வைத்தார் சண்முகம்.

எது எப்படியானாலும் வைத்தியலிங்கம் தன்விச்சையாக எதையும் செய்து தமக்கென்று ஓர் அரசியல் முகத்தை அமைத்துக் கொள்ளமாட்டார் என்று பருக் நினைத்ததும் அதற்கு அப்படியே சண்முகம் ஒத்துப் பாடியதும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு வருகிறது. தாம் எப்போதும் ஊசலாட்டத்திலேயே இருக்கிற நிலையை வைத்தியலிங்கம் உணர்ந்து கொண்டு விட்டதால், இப்போது தமக்கென்று சில ஸ்திரமான வேர்களைப் படர விட்டுக் கொண்டிருக்கிறார் என்பதே உண்மை!

- இளங்கோவன்

அசத்தியது அரசு அங்காடி!

தீபாவளி சமயத்தில் அத்தியாவசியப் பொருட்களை சகாய விலையில் விற்க பாண்டி அரசு ஓர் அங்காடி நடத்தியதைப் பாராட்டாத மக்களே இல்லை. இதனால் பீதி அடைந்தவர்கள் தனியார் வியாபாரிகள். இதுபோல் ஓர் அங்காடியை நடத்தும் எண்ணம் எப்படி ஏற்பட்டது என்றும், நிரந்தரமாக இதுபோன்ற அங்காடியை நடத்தும் நோக்கம் உண்டா என்றும் தெரிந்து கொள்ள மாநில வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அரங்கசாமியைச் சந்தித்தோம்.

''கேரளாவில் ஓணத்தின் போது இதுபோன்ற அங்காடியை அரசு நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். சென்ற வருடம் சமையல் எண்ணெய் மட்டும் விநியோகித்தோம். நல்ல வரவேற்பு இருந்தது. இந்த வருடம் மற்ற அத்தியாவசியப் பொருட்களான காய்கறி, மளிகை, துணி ஆகியவற்றையும் சேர்த்து விற்கலாம் என்று தீர்மானித்துச் செயல்பட்டோம்; அதில் பட்டாசும் உண்டு.''

''இதுபோன்ற இடங்களில் காலப் போக்கில் பொருட்கள் வாங்கும்போது ஊழல்கள் உருவாக வாய்ப்புண்டு...!''

''நீங்கள் சொல்வது ஓரளவுக்கு உண்மையாக இருந்தாலும், நாங்கள் தீவிரமாகக் கண்காணிக்கிறோம். மேலும் புளி, மிளகாய், பருப்பு போன்றவற்றைச் சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாகத்தான் வாங்குகிறோம். இதுதவிர, வாங்கிய சரக்கு முழுமையாக வந்ததா என்பதைத் தெரிந்து கொள்ள, வாங்கியது, பெற்றது, இருப்பில் இருப்பது ஆகியவற்றைக் கணக்கெடுத்துச் சரிபார்க்கிறோம்.



''தீபாவளி அங்காடியைத் தொடர்ந்து நடத்தும் எண்ணம் உண்டா?''

''அதற்குத்தான் அமுதசுரபி சிறப்பங்காடி இருக்கிறதே! மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆயினும் வரும் பொங்கலுக்கு அதுபோல் நடத்தவுள்ளோம்.''

'' 'அமுதசுரபி' அங்காடியைப் பற்றிப் பல குறைபாடுகள் சொல்லப்படுகின்றன...''

''நீங்கள் சொல்வது போல் குறிப்பிட வசதி இல்லை. 24 மணி நேர மருந்துக்கடை கிடையாது. பார்க்கிங் வசதி இல்லை. இதற்கெல்லாம் காரணம் இடநெருக்கடிதான். கூடியவரை 24 மணிநேர பார்மஸி ஆரம்பிக்கப்படும். மற்ற குறைகளும் படிப்படியாகத் தீர்த்து வைக்கப்படும்!'' என்று சொல்லும் அரங்கசாமி அமைச்சர் என்ற பந்தா எதுவுமின்றிச் சுதந்திரமாக மோட்டார் பைக்கில் சுற்றுவார். அரசியலே வாழ்க்கையாகிப் போய் விட்டதால் நாற்பதை நெருங்கும் நிலையிலும் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் கடத்துகிறார்.

- ஆர். எஸ்.

முற்றுகை 22

இளமதியத்துக்கும் மேலாகி விட்டது. என்ன இழவோ... இன்றைக்குச் சாப்பிடவே தோன்றவில்லை வேலாயிக்கு. அங்கும் இங்குமாய் உட்கார்ந்து... கோழிச் சிந்தனையாய் யோசித்து, அப்படியும் இப்படியுமாய் பொழுது கரைந்து மாயமாகி விட்டது.

சொர்ணத்தைச் சுற்றி மூத்த மருமகன் எழுப்பியிருக்கிற சூறாவளி, என்ன கதியில் போகுமோ... என்னவாகி முடியுமோ என்கிற திகில். ஈரச் சேலை முள்ளுப் புதரில் விழுந்த மாதிரியிருக்கிறது.

உதறிச் சொல்லி... மூத்த மகள் வாழ்க்கையில் புயலைக் கிளப்பி விட்டு விடவும் கூடாது. சம்மதம் என்று சொல்லி சொர்ணத்தின் எதிர்காலத்தைப் பலியிட்டு விடவும் கூடாது.

எப்படித்தான்... இதிலிருந்து மீளப் போகிறோமோ என்று நினைக்க நினைக்க மலைப்பாக இருக்கிறது. பயத்தில் கிடந்து தவித்துப் போகிறது.

கழுந்தாம்பிடியாக இருக்கிறது. மீள முடியாத முற்றுகையாக இறுக்குகிறது.

சொர்ணமும் நெருப்புக் கோழியாய்ச் சிலுப்புகிறாள். நிகரில்லாமல் வார்த்தையை விடுகிறாள். அவள் இருக்கிற வேகமும், வெடிக்கிற வெடிப்பும் பார்த்தால்... வண்டி குடைசாய்ந்து விடுமோ என்று திகிலாகக் கிடக்கிறது.

நொடித்துப் போய்... நொம்பலப்பட்டு... சிறுமைப்பட்டுக் கிடக்கிற குடும்பத்தில் - வயிற்றுப்பாட்டுக்கே வரட்டிழுப்பு இழுக்கிற கொடுமையில்... இது வேறா?

'பட்ட இடத்திலேயே படும்; கெட்ட குடியே கெடும்' என்பது நிஜம்தானா?

சனீஸ்வரன் பிடித்தாலே... ஏழரை வருஷத்தில் விலகி விடுமே. பன்னிரண்டு வருஷத்துக்கு மேலாகி விட்டதே. இன்னும் குடும்பத்தைப் பிடித்த சனியன் விட்டுத் தொலைய மாட்டேன் என்கிறதே...

போதாதென்று... இப்போது இந்தச் சனியன் வேறு!

எல்லாம்... அந்த ஓழுக்கரிசிச் சீவன்.

உயிரோடு இருந்திருந்தால்... இன்றைக்கு இப்படி இருக்குமா? இந்த மனிதருக்குத்தான் இப்படிக் கேட்கிற தைரியம் வருமா?

சிங்கம் போல இருப்பாரே. நிமிர்ந்து நடந்தால்... எந்த தேசத்து ராசாவோ என்று நினைக்க வைக்குமே...

அந்த ராசா கண்ணை மூடி விட்டதால்... கண்ட கண்ட நாய்களுக்குக் கூட பயமற்றுப் போயிற்று.

இன்னும் என்னென்ன ஆகுமோ... ஏதேது நேருமோ... அடக் கூத்துவனே... எங்களை இப்படியா சீரழிக்க கூத்துப் பாக்கணும்?

நாங்க யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்? ஒரு கோழிக் குஞ்சைக் கூட 'சூ' என்று பற்றியிருக்க மாட்டோமே... மறந்தும் ஒரு ஈ, காக்கைக்குக் கூட இடைஞ்சல் செய்திருக்க மாட்டோமே...

எங்களுக்கா... இந்தக் கதி? என் வயிற்றில் வந்து பிறந்த தங்கப் பெட்டிக்கா... இந்த விதி? அடக் குருட்டுப் பய தெய்வமே!



திண்ணை விளிம்பில் முந்திச் சேலையை விரித்துக் கண்ணை மூடிக் கிடந்தாள், வேலாயி. இருப்புக் கொள்ளாமல் அலைபாய்கிற நினைவுகள். புகை காட்டப்பட்ட தேனீக்களாக... எங்கும் உட்காராமல் ரீங்காரமிடுகிற நினைவுகள்.

மனசின் சோகங்கள் கிளறிக் கிளறி விடப்பட்ட நெருப்புக் கங்குகளாகக் கனன்று கனன்று தகிக்கின்றன.

வீட்டு முற்றத்தில் யாரோ வருகிற காலடிச் சப்தம் வேற்றுச் சப்தமாக இருக்கிறது. யாரது, இந் நேரம்? இந்த வீட்டுக்கும் விருந்தாளா? நாதியற்ற வீட்டுக்கும் ஒரு விருந்தாளா?

திகைப்போடு கண்ணைத் திறந்தாள். சங்கடத்துடன் எழுந்தாள். அயர்ச்சியைச் சுமந்து கொண்டு வெளியேறிய பெருமூச்சு. முந்திச் சேலையைச் சரிப்படுத்திக் கொண்டாள். அவிழ்ந்து கிடந்த கட்டை முடியை தட்டி உதறி முடிந்து கொண்டாள்.

அதற்குள் வாசலில் நிழல்.

செருப்பைக் கழற்றுகிற அரவம். நிமிர்ந்து பார்த்த கண்கள் இடுங்கின.



ஊர் நாட்டாண்மை வெங்கடாசலம். எப்பவும் வெள்ளைக் கதர்தான். வெள்ளை வேட்டிதான். பனியன்தான். வெள்ளைக் கதர்த் துண்டுதான். புதுநிறம். எப்பவும் மழுங்கச் சிரைத்த முகம்.

“அக்கா... எப்படியிருக்கே?”

“தம்பீ... நீயா? எப்பவும் வராத ஆளு, வந்துருக்கியே... உக்காருயா... ஏதோ இருக்கோம்... சாக மாட்டாம...”

அவளுக்குள் சின்னச் சந்தோஷம். ஊர் நாட்டாண்மை தேடி வீடு வருவது என்றால்... பரபரத்தாள். உபசரிக்க ஆசைப்பட்டாள்.

“தம்பி... திண்ணையிலே இரு. காப்பித் தண்ணி கொதிக்க வைக்கட்டா?”

“ஒண்ணும் வேண்டாக்கா. உங்க கையாலே ஒரு சொம்புத் தண்ணி குடுங்க. போதும்க்கா...”

விருட்டென்று எழுந்தாள். காலையிலிருந்து சாப்பிடாத கிறக்கம். சட்டென்று ஓர் இருட்டு கண்களைக் கவ்வி விலகியது. சமாளித்துக் கொண்டாள்.

வெங்கடாசலம் விஷயமான ஆள். வயது ஐம்பதைச் சுற்றி இருக்கும். வாய்ச் சாமர்த்தியம் ரொம்ப. மனிதரைப் பேசிச் ஜெயிக்க ஆள் கிடையாது. நாலா காடு போய் வந்தவர். அனுபவம் பேச்சில் தெரியும். ரொம்ப வினயமானவர். யாரிடம் என்ன பேசினால் காரியம் ஆகும் என்பது அத்துபடியாகிப் போனவர்.

இப்படிக் கிடக்கிற துரும்பை எடுத்து, அப்படிப் போட மாட்டார். விரலில் அழுக்குப்பட்டதில்லை. வியர்வை சிந்தி வேலை செய்ததில்லை. வெள்ளை வேட்டி எப்பவும் அழுக்கானதேயில்லை. ஆனால், குடும்பம் 'ஜேஜே' என்று நடக்கிறது என்றால்... முழுக்க முழுக்க வாய்ச் சாமர்த்தியம்தான்.

நாராயணசாமி நாலு யூரியா உப்பு மூட்டைகளை நாட்டாண்மை வீட்டில் கொண்டு போய்ப் போட்டு விட்டான். இதோ... வெங்கடாசலம் அஸ்திரங்களோடு வியூகம் வகுத்து வந்து விட்டார்.

அவரது மனச்சாட்சி, அவரது நியாயத்திற்கேற்ப நெளியும். வளையும். நெளிவு சுளிவாய் நடந்து கொள்ளும். வம்பு பண்ணாது.

வேலாயி கொண்டு வந்து நீட்டிய செம்பை வாங்கிக் கொண்டார். அண்ணாந்து குடித்தார். பாதி குடித்து விட்டுச் செம்பைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு,

மேலாண்மை பொன்னுச்சாமி

'அக்கா'வை உட்காரும்படி சொல்லி மரியாதை காட்டினார்.

''தம்பி... ஊருக்குத் தலைமையான ஆளு. வீடு தேடி வந்துருக்கே... காரியம் என்ன ஏதுன்னு தெரியாம, மனசு அடிச்சுக்குது... தம்பி...''

சிரித்தார். நம்பிக்கையூட்டுகிற சிரிப்பு. பல விஷயங்களைப் பொதிந்து வைத்திருக்கிற அர்த்தமான சிரிப்பு.

இவளும் அசட்டுத்தனமாய்ச் சிரித்தாள்.

''அக்கா... நா என்னக்கா தலைமையான ஆளு? ஊரு கூடி நாட்டாமைன்னு புடிக்க வைச்சிருக்கு. புள்ளையாரு மாதிரி நா இருக்கேன். என் திறமையிலே நா இல்லியே... ஆனா... நம்ம மாமா எப்படி இருந்தாரு? இதே ஊர்லே, அவர் சொல்லைத் தட்டிச் சொல்ல யாரும் இல்லாத அளவுக்கு.... ராசா மாதிரி இருந்தாரே? அவரு, அவரோட திறமையிலே, செல்வாக்குலே, சொந்த வழுவுலே - அப்படியிருந்தாரே... அந்த மாதிரியான மலையை நெனைச்சா... நானெல்லாம் ஒரு தூசுக்குச் சமானம்க்கா''

அவ்வளவுதான். வேலாயியின் முகமே மாறி விட்டது. ஒரு வாட்டம். கண்களின் ஓரத்தில் ஈரக் கசிவு. உதடுகள் வருத்த நினைவுகளோடு சூள் கொட்டின.

''மாமாவோட 'கருமாந்தர'த்தன்னைக்கு இந்த வீட்லே உக்காந்தது. இதே எடத்துலே உக்காந்துருந்தேன் - அதுக்கப்புறம் இன்னைக்குத்தான் இந்த வீட்லே காலடி எடுத்து வச்சிருக்கேன்...''

''ராசா இருந்தா... ஊரு கூடும். இல்லேன்னா, இந்த நாதியில்லா நாய்களை யாரு வந்து பாப்பாக?''

''அப்படிச் சொல்லாதீக அக்கா! யானை படுத்தாலும் குதிரை மட்டம்னு சொல்லுவாக. உங்களை மாதிரி உசந்த குடும்பத்து ஆளுக கோபுரம் மாதிரி. தூரத்துலேயிருந்து நாங்க கையெடுத்துக் கும்புடுறது, கோபுரத்துக்குத் தெரியாதுக்கா....''

''என்னமோ தம்பி, உங்களுக்குத் தெரியுது, எங்க அருமை. ஆனா... நொடிச்சுப் போன குடும்பம், தலைதூக்க முடியலே தம்பி. இப்ப வவுத்துப்பாடு கழியுறதே, பெரும்பாடா இருக்கு. இதுலே குடும்பப் பெருமையை நெனைச்சு ஆகப் போறதென்ன தம்பி?''

''நல்ல காலம் வர்றப்போ... வராத ஆளுக எல்லாம், தானா வருவாகக்கா.''

வேலாயிக்குள் ஓர் இன்ப அதிர்வு. ஏதோ நல்ல சகுனம் எதிர்ப்படுகிற மாதிரி மனசுக்குள் ஆழத்தில் ஒரு குரல். விசுக்கென நிமிர்ந்தாள்.

''என்ன சொல்றே, தம்பி?''

''அக்கா... நா இதே இடத்துலே உக்காந்துருந்தப்போ, இந்த வீடு எப்புடி இருந்துச்சு? 'ஜே,ஜே'ன்னு இருந்துச்சு. கொடி கட்டிப் பறந்துச்சு. ஈடு சொல்ல யாருமில்லைங்கிற மாதிரி ஓசந்து நின்னுச்சு. இல்லியா?''

''ஆமா...''

''பன்னெண்டு வருஷம் கழிச்சு, நா வந்து இதே இடத்துலே உக்காருதேன்னா, என்ன அர்த்தம்? மறுபடியும்... இந்த வீடு 'ஜேஜே'ன்னு ஆகப் போவுதுன்னு அர்த்தம். மறுபடியும் நீங்க கொடிகட்டிப் பறக்கப் போறீகன்னு அர்த்தம். நீங்க ஊருக்கே மகாராணி மாதிரி இருக்கப் போறீகன்னு அர்த்தம்க்கா...''

வேலாயிக்குள் ஒரு மாய உலகம். மனசின் சகல மூலைகளையும் மயிலிறகால் நீவி விடுகிற மாதிரி ஒரு புல்லரிப்பு. குறி சொல்லுகிறவன் ஒரு நல்ல வார்த்தையைக் கூறி விட்டால் கூட மயங்கி விடுகிற மனம், இவரது பேச்சில் சொக்காமல் இருக்குமா?

பேச வார்த்தை வராமல்... நா தடுமாற, வெங்கடாசலத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் சொல்லுக்கேற்ப, தலையைத் தலையை அசைத்துக் கொண்டிருந்தாள்.

''மாமா இருக்குறப்போ... இந்த வீடு, ஓகோன்னு இருந்துச்சுன்னா... அதுக்கு ரெண்டு காரணம். ஒண்ணு, இந்த வீட்லே ராச ராஜ்யம் இருந்துச்சு. ரெண்டு, காடு கரைக 'திடுமுருடா' வெளைஞ்சது. என்னக்கா, நாஞ் சொல்றது?''

''நாக்குலே ஒரு வார்த்தை தம்பி.''

''இன்னிக்குக் காலம் ரொம்ப மாறியிருக்கு. அன்னிக்கு எவ்வளவு வெளைஞ்சதோ... அதே வெளைச்சலை, இப்ப உங்க கிட்டேயிருக்குற காடுகள்லேயே எடுத்துரலாம். ஒட்டுக் கம்பு வந்துருக்கு. எல்.ஆர்.ஏ. பருத்தி வந்துருக்கு. பம்ப் செட் மோட்டாரு, டிராக்டரு... இப்படி நிறைய மாறியிருக்கு.''

பாண்டியிலும் ஓர் நல்லாட்சி இயக்கம்?

பாண்டிச்சேரி அரசின் சமூகநலத் துறைச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற வாசுதேவராஜ் அங்கே ஒரு பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். ''நமது திட்டங்கள் கிராம அளவில் மக்களைச் சென்று அடையவில்லை. இதற்குக் காரணம், அதிகாரங்கள் பரவலாக்கப்படாததுதான்'' என்கிறார் அவர்.

''தமிழகத்தில் க. சுவாமி துவங்கியிருப்பது போல் நல்லாட்சி இயக்கம் ஒன்றைப் பாண்டியில் துவங்கும் உத்தேசம் உங்க


ளுக்கு இருக்கிறதாமே?''

''அந்த மாதிரி எண்ணமெல்லாம் எனக்குக் கிடையாது. இருந்தாலும் பாண்டிச்சேரி மாநிலத்தில், சமுதாயத்தில் பின் தங்கியவர்களுக்கான எந்தத் திட்டமும் சரிவர நிறைவேறவில்லை. உதாரணமாக 3000 கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் கிடையாது. ஆனால் ஆங்கிலோ பிரெஞ்சு மில்லில் அரசு, பணத்தை ஏராளமாகக் கொட்டுகிறது. இதைப் போலவே செருப்புத் தைக்கும் தொழிலாளிகள், சலவைத் தொழிலாளிகள் ஆகியோருக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் எதுவும் கிடையாது...''

''பாண்டி அரசு மீது ஏதாவது ஊழல் குற்றச்சாட்டுக்கள் உண்டா?''

''கிலோ ஒன்றரை ரூபாய் வீதம் தக்காளி வாங்கி ஐந்து ரூபாய்க்கு அங்காடிகளில் விற்கிறார்கள். ஸ்டேட் பாங்கில் இருக்கும் அரசு டெபாசிட்டுகளை எடுத்து மற்ற வங்கிகளில் போடுகிறார்கள். மத்திய அரசு கொடுக்கும் பணத்தை முழுக்கச் செலவிடாமல் நிதியாண்டின் இறுதியில் அரசு நிறுவனங்களுக்கு (Govt. Corporations) மாற்றிவிடுகிறார்கள். இது சரியல்ல!'' என்று சொல்லும் வாசுதேவராஜ், தமது பதவிக் காலத்தில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருந்ததற்காகவே அரசியல்வாதிகளால் தாம் பழிவாங்கப்பட்டதாகக் கூறுகிறார்.

– கௌசல்யா



''வாஸ்தவந்தா தம்பி. முந்தி குறுக்கத்துக்கு மூணு கோட்டை வெளையுறது அதிசயம். இப்ப, குறுக்கத்துக்கு பதினைஞ்சு மூட்டை வர்றது ரொம்பச் சாதாரணமாப் போச்சு.''

''ஆங்... அதான் வெஷயம். அது மட்டுமில்லே, உங்க எறவைத் தோட்டத்துக்கு மேற்காலே இப்ப கண்மாய் ஒண்ணு வெட்டியாச்சு. அதனாலே உங்க கெணத்துலே ஆழப்படுத்தாமலேயே... தரிசாக் கெடக்குற புஞ்சையை வெள்ளாமை பண்ண முடியும். இப்ப தேவையெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். இந்த வீட்டுக் காடுகளுக்கு உசுர் தரக்கூடிய ஒரு ஆம்பளை.''

வேலாயிக்கு இப்போதுதான் விஷயமே பிடிபட்டது. இந்தச் சோழியன் குடுமி எதற்காக ஆடுகிறது என்கிற சூட்சமம் தெரிந்து போயிருந்தது.

மருமகனுக்குத் தூதாகத்தான் வந்திருக்கிறான். தெரிந்து விட்டது.

ஆனால், மனசில் பயம் வரவில்லை. தெளிவு வருகிறது. நம்பிக்கை ஒளி மனசுக்குத் தெரிகிறது.

''என்னக்கா... நாஞ் சொல்றது?''

''வெளங்குது. சொல்லுய்யா.''

''வெறும் ஆம்பளையாயிருந்தா, பத்தாது. வெவசாயம் தெரிஞ்ச ஆம்பளையாயிருக்கணும். நிலத்தை மதிக்கப் பாடுபடுற ஆம்பளையாயிருக்கணும். மண்ணுலே பொன்னெடுக்க வேர்வை சிந்த ஆசைப்படுற ஆம்பளையாயிருக்கணும். இல்லியா?''

''ம்...ம்...''

''ஏக்கா, நாங் கேக்கேன்? இப்படி ஒரு ஆம்பளை உங்க வீட்டுக்கு வலிய வாரான்னு வையுங்க. வேண்டாம்பீகளா? வாசல்லே வந்து நிக்குற சீதேவியை காறித் துப்பி வெரட்டிருவீகளா? சொல்லுங்கக்கா...''

எதுவும் சொல்லத் தெரியாமல் தலையை அசைத்தாள்.

''மாமா செத்தும் தெய்வமாயிருந்து... நீங்க கரையேற ஒரு வழி காட்டுறார்னு வையுங்க. அதை ஒதறியெறிஞ்சுருவீகளா? உங்க மூத்த மகளும், எளைய மகளும் தேவானையும் வள்ளியுமா சந்தோஷமாய் வாழ்றதுக்கு ஒரு வாய்ப்புக் கெடைச்சா... வேண்டாம்பீகளா?''

வேலாயிக்குள் பழைய வசந்த காலம். வில்வண்டியில் வந்து இறங்கி, ராஜ கம்பீரமாய் வருகிற ராமானுஜம். வீடு முழுக்க செல்வம். தான்ய வகைகள். தொழு நிறைய மாடுகள். வீடு முழுக்க ஆட்கள்.

அந்த ஆட்களுக்கெல்லாம் ராணிகளாக நின்று உத்தரவிடுகிற கிருஷ்ணம்மாவும், சொர்ணமும்.

அவர்களைக் கும்பிடுகிற ஆட்கள். அதைப் பார்த்துப் பெருமிதப்படுகிற வேலாயி.

இன்னும் ரொம்ப நேரம் வெங்கடாசலம் பேசிக் கொண்டிருந்தார். செம்பில் மிச்சமிருந்த தண்ணீரையும் குடித்து முடித்தார்.

அப்புறமும் பேசிக் கொண்டிருந்தார். கனவும் நனவுமாய் வேலாயி...

அவர் மதியத்திற்குப் பிறகுதான் வீட்டை விட்டுப் புறப்பட்டார். வலையில் சிக்கிய பறவைகளைச் சாக்குக்குள் அள்ளிப் போட்டுக் கொண்டு போகிற வேடனின் மனத்திருப்தி, அவருக்குள்.

வேலாயிக்கும் வயிறு நிறையச் சாப்பிட்ட மாதிரியான திருப்தி.

சொர்ணத்தின் ஆவேசப்பட்ட முகம், நினைவுக்கு வந்த போது, தொண்டைக்குள் விக்கலெடுத்தது.

(தொடரும்)

மறுபடி ஜனனம்

சூர்யதீபன் லஞ்ச் ப்ரேக்கின் போது யோசித்துக் கொண்டிருந்தான். அடுத்த காட்சியின் காமிரா கோணம் பற்றி.

அவன் குருநாதரான ராஜா டைரக்டர் டெலிபோனில் வாழ்த்துத் தெரிவித்து, கைப்படக் கடிதமும் எழுதி இருந்தார்.

தினசரிப் பத்திரிகையில், கவிதை நடையில், படத்தின் முழுப் பக்க விளம்பரம்.

முழுக்க முழுக்கப் புதுமுகங்கள், முழுக்க முழுக்க அவுட்டோர் ஷூட்டிங், ஞானியின் இசை அமைப்பு, பிரபல காமிரா மேனின் காமிரா இயக்கம் என்பதால் இண்டஸ்ட்ரியே ஆவலோடு எதிர்பார்க்கும் படம்.

கலா அவனைத் தேடி வந்தாள்.

கலா - இரண்டாம் கதாநாயகி. தயாரிப்பாளரின் மகன் இரண்டாம் கதாநாயகன். மெயின் கதைக்கு உதவும் ஜோடி.

சூர்யதீபனுக்கு நம்பிக்கை கொடுத்து இந்த தயாரிப்பாளரிடம் அறிமுகப்படுத்தியவள் - கலாதான்!

மற்ற சினிமா நடிகைகள் மாதிரி கான்வெண்ட் படிப்பு, பாம்பே பூர்வீகம் என்று கதை விடாமல், சினிமாவைக் காதலித்து இங்கு வந்ததாய்க் கூறும் மதுரைப் பெண்.

''சொல்லு கலா...'' நாற்காலியை நகர்த்திப் போட்டான்.

நெல்லையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தள்ளி தாமிரபரணி தீரத்தில், ஒரு சிறு கிராமத்தில் ஷூட்டிங்.

தயாரிப்பாளர் ஊர்ப் பக்கம் என்பதால் அங்கேயே இரவு தங்க வசதி செய்யப்பட்டிருந்தது.

சாப்பாடு வேனில் வந்தது. மரத்தடியில் ஒரே கும்பலாய் உட்கார்ந்து சாப்பிட்டுப் பழகும் போது ஸ்டுடியோவின் செயற்கை பரபரப்புகள். அந்தஸ்து வித்தியாசம் காணாமல் போனது.

இத்தனை சந்தோஷத்திற்கும் திருஷ்டிப் பொட்டு - விஜய்ராஜ்.

தயாரிப்பாளரின் பையன்.

பெரிய பந்தா பண்ணினான்.

படத்தில் கனவு சீனையும், மான் கொம்புச் சண்டையையும், தீ மிதிப் பாட்டையும் சேர்க்கச் சொன்னான்.

மழையில் நனைந்தபடி கலாவுடன் பாட்டு ஒன்றும் வேண்டுமாம்.

சூர்யதீபன் பிடிவாதமாகத் தயாரிப்பாளரிடம் மறுத்துப் பேச வேண்டி வந்தது.

''இது இலட்சியப் படம் சார். பெண் சிசுக் கொலை பத்தி. பெண் அடிமையாய் நடத்தறதைப் பத்தின கதை. உங்க பையன் கதைப்படி கட்டட வேலை செய்யறவன். கொம்புச் சண்டை ஏன் போடணும்...?''



தயாரிப்பாளர் மையமாகப் பார்த்தார். இத்தனை நாள் சினிமா டிஸ்ட்ரிப்யூஷன் பார்த்த அனுபவம் இருந்தாலும் சொந்தமாய் இந்த மாதிரி புது டைரக்டரைப் போட்டு இயக்குவது இப்போதுதான்.

முதலில் சூர்யதீபன் சொன்ன கதை நன்றாக இருந்தது.

புதுமுகங்களின் படம் ஓடிக் கொண்டு இருந்த சமயம்.

டைரக்டரே ஞானியின் இசைக்கான சம்மதத்தையும் பெற்றபின் ஷூட்டிங் பிரச்னை இல்லாமல் தொடர்ந்தது.

நா. நாகராஜன்

ரஷ் போட்டுப் பார்த்த போது அவருக்கே பிரமிப்பாக இருந்தது.

இந்த மண்ணிற்கு இப்படி ஓர் அழகா...! நதியும் மேகமும் கவிதை பாடி இருக்கிறதே என்று.

அம்மன் கோயில் செட், பஞ்சாயத்துக்கு நடிக்க உள்ளூர் நபர்கள், நதி கழித்து ஓடும் ஆலமரம் என்று படம் ரம்யமாகத் தொடர்ந்திருந்தது.

கிராமத்து மனிதர்களும், அவர்கள் பேச்சும் அதே எளிமையில் படம்பிடிக்கப் பட்டிருந்தன.

''பாட்டே கிடையாதா சூர்யா?'' கலா கேட்டாள்.

''பெரிய பிரச்னை அதுதான் கலா. கதா நாயகன் நாற்பதைத் தொட்டவன். நாயகி நான்கு பெண் குழந்தைகளுக்குத் தாய். பிரச்னையே பெண் குழந்தைகளின் பிறப்பு தான். இதுல பாட்டு எங்க அமைக்க...?''


''ரெண்டாவது ஜோடி இருக்கே...''

''இருக்கு. அதுக்கும் பின்னணியில தான் பாட்டு வைச்சிருக்கேன். மற்றபடி டைட்டில் சாங் ஒண்ணு. கடைசில க்ளை மாக்ஸ்ல ஒரு பாட்டு - போதுமே.''

''ம்...'' கலா கண்களைச் சுழற்றினாள்.

''அடுத்த படம் நகரத்திலயா... கிராம சப்ஜக்டா...''

''முதல்ல இது முடியட்டும் கலா. இதுவே இழுக்குது. தயாரிப்பாளர் பையனை எப்படி சமாளிக்க படத்தை முடிக்கப் போறேன்னு தெரியலை. ரெண்டாவது ஹீரோவா அந்த இன்ஸ்டிடியூட் பையனைப்



போட்டிருக்கணும். என்ன இம்ப்ரசிவ் ஜூஸ்...''

சூர்யதீபன் கனவுகளில் ஆழ்ந்தான். ஒரு ஷெட்யூல் முடிந்த பின் ஊர் திரும்பினார்.

கதை மனதில் காட்சிகளாக வரிக்கு வரி உயிர்பெற்று உலவிற்று.

வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. வெள்ளைத் தாளில் பின்னர் எடுக்கப்பட வேண்டிய காட்சிகளை, காமிரா கோணத்தை, நாயகன் நாயகி நிற்க வேண்டிய இடங்களை வரைந்து பார்த்தான்.

வீட்டிற்கு வந்த கலாவுக்கு அந்தப் படங்களைக் காட்டினான்.

''தீபாவளிக்கு வருமா படம்?''



"உச்சஸ்தாயியில் ரொம்ப நேரம் கண்ணை மூடிக்கிட்டு ஆலாபனை செய்யாதீங்கன்னு சொன்னா கேட்டாத்தானே!"

"ஏன், என்ன ஆச்சு?"

"ஆடியன்ஸ் அவ்வளவு பேரும் தைசா எழுந்து வெளியே போயிட்டாங்க."

''தீபாவளி ரேஸ்ல வேண்டாம். நமக்கு ஜனவரி 26 போதும். நிறைய நேரம் வேணும் யோசிக்க...''

கலா சூர்யாவைப் பார்த்தாள். பிரமிப்பாக இருந்தது அவளுக்கு.

இந்த இருபத்தி நான்கு வயதில் டைரக்டர் பொறுப்பு.

எத்தனை படிப்பு... எத்தனை அடக்கம்.. எவ்வளவு நம்பிக்கை அவன் கண்களில்..

''கலா இந்தப் படம் ப்ரிவ்யூவின் போது உனக்கு நான் ஒரு பிரைஸ் தரப் போறேன்...'' என்றான் முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு.

''என்ன.... என்னது அது?''

''சஸ்பென்ஸ்...'' என்று சொல்லிச் சிரித்தான்.

பிறகு அவர்கள் எதிர் வரிசையில் இருந்த ரெஸ்டாரெண்டில் நுழைந்தனர்.

கூட்டம் அதிகமில்லை.

கறுப்பும் பச்சையும் கலந்த சேலையில் கலா குளிர்ச்சியாக இருந்தாள்.

அவள் சந்தன நிறத்திற்கு எது கட்டினாலும் எடுக்கும்.

கிராமத்துப் பெண்ணாக கங்கடிப் புடைவையில் அசத்துகிறாள்.

எத்தனை எளிதாக நெல்லைத் தமிழைப் பேசுகிறாள். கலா நல்ல நடிகைதான்.

டைப் எடுத்துக் கொண்டு பத்திரிகை நண்பர்களைப் பார்த்து வந்தான்.

'கலாவுக்கும் உனக்கும் இதுவாமே' என்று கேட்ட நண்பர்களுக்குப் புன்னகையைப் பரிசளித்தான்.

அவர்களின் பேச்சு அவனுக்குள்ளும் பூ மழையைப் பொழியச் செய்தது.

மழைக் காலம் முடிந்தபின் மறுபடியும் ஷூட்டிங் தொடங்க வேண்டும்.

நெல்லை மாவட்ட எளிமையான மனிதர்களும், காரசாரமான சாப்பாடும் தாமிரபரணியின் ருசியான தண்ணீரும் சூர்யதீபனை ஏங்க வைத்தன.

கணையாழியின் குறுநாவலில் அவன் எடுத்துக் கொண்டு வரும் படத்தோடு தொடர்பான பிரச்னை வந்தது.

மூன்று மணி நேர முயற்சியில் க்ளைமாக்ஸில் ஒரு சிறு திருப்பமாய் அது சேர்ந்து கொண்டது.

இரண்டு மாத இடைவெளிக்குப் பின் தயாரிப்பாளரைச் சந்திக்கச் சென்றான் சூர்யா.

தயாரிப்பாளர் சிரித்துக் கொண்டே இவனை வரவேற்றுப் பேசினார்.

கலாவும் கூட வந்தாள்.

மேஜை மேலே இருந்த ரம் பாட்டில் கீழே இறக்கி வைக்கப்பட்டது.

''சொல்லு...'' என்றார் தன் நரைத்த பெரிய கிருதாவைத் தடவி விட்டபடி.

''க்ளைமாக்ஸில ஒரு சின்னத் திருப்பம் செய்யலாம்னு இருக்கேன்...''

அவர் அவன் சொன்னதைக் கவனிக்காதவர் மாதிரி இருந்தார்.

''தம்பிக்கு ஒரு அஸிஸ்டெண்ட் இருந்தானே. பேரு கூட மனோகரோ என்னமோ...''

''மனோகர் இல்ல சார். மதன்...''

''ஆமாம். ஞாபகம் வந்திடுத்து. என் ஃப்ரண்ட்கிட்டே படத்தைக் காட்டினேன். மரம் மட்டை எல்லாம் நல்லாத்தான் படம் பிடிச்சிருக்கே. நாம டாகுமெண்டரியா எடுக்கறோம். எம் பையனைப் பொடி சாக்கிட்டியே...?''

''ஐயா அது வந்து கதைப்படி.... கதையோட மெயின் பிரச்னையே வேற.''



குழந்தைக்குச் சிறந்த உணவு தாய்ப்பால்.

தாய்க்குச் சிறந்தது எது?

புதிய காம்ப்ளான் - விட்டாமில்க் தாய்ப்பாலூட்டும் தாய்மார்களின் உணவின் குறை நிரப்ப விஞ்ஞான ரீதியாக தயாரிக்கப்பட்டது.

தாய்மையடையும் பருவத்தை விட, தாய்ப்பாலூட்டும் இப்போது உங்களுக்கு அதிக ஊட்டச் சத்துக்கள் தேவை. குழந்தைக்கு ஒழுங்காகவும் போதுமான அளவும் தாய்ப்பால் கிடைக்கச் செய்வதற்கு...



நித்தம் மூன்று கப் காம்ப்ளான் - விட்டாமில்க், காம்ப்ளானின் எல்லா நற் பயன்களையும், அதோடு, இந்த கூடுதல் ஊட்டச் சத்துக்களையும் உங்களுக்கு வழங்கிடும்:

கூடுதல் ஃபாலிக் ஆஸிடு
கூடுதல் பால் புரதம் (22.2 கிராம்)
கூடுதல் வைட்டமின்கள் **A, B_6 C,** கூடுதல் இரும்புச்சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மங்கனீஷியம்.

இது உங்களுக்கும், சிசுவின் ஆரோக்கியத்திற்கும் அத்தியாவசியமானது.

நித்தம் பருகுங்கள்

புதிய காம்ப்ளான்®

விட்டாமில்க்®

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ.

GL/92/402 c TM



அறிவொளி இயக்கம் என்ன ஆனது?

"பாண்டிச்சேரி மாநிலத்தில், நூறு சதவீத கல்வியறிவு கொடுத்து விட்டோம்" என்று அரசு பெருமையடித்துக் கொள்வதற்கு அறிவியல் இயக்கமும் ஒரு காரணமாகும். இதன் அங்கத்தினர்கள், அறிவொளி இயக்கத்தில் முழுமூச்சுடன் பங்கு கொண்டு உழைத்தார்கள். ஆனால் தற்போது அறிவியல் இயக்கத்துக்கும், பாண்டி அரசுக்கும் இடையில் ஏதோ தகராறு. என்னவென்று அறிய கல்வி அமைச்சர் காந்திராஜை சந்தித்தோம்.

"நடந்தது என்னவென்றால், முழுக் கல்வியறிவு கொடுத்தபின், அதற்கு அடுத்த இரண்டாவது நிலைக்கு அந்த மக்களைத் தயார்ப்படுத்த, ஒரு பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தப் பாடத் திட்டத்தில், இந்தியாவை வறுமைமிக்க ஒரு நாடாகவும் அதில் வாழ்வதே அவமானகரமானது போலவும் சித்திரிக்கப்பட்டிருந்தது. இதற்கு அறிவியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் காரணம் என்று தெரிய வந்தது. உடனே ஒரு கமிட்டி அமைத்துப் பாடத் திட்டத்தை மாற்றினோம், அவ்வளவுதான்! மற்றபடி அறிவொளி இயக்கம் என்பது முழுக்க முழுக்க ஓர் அரசு இயக்கம்தான். எந்த ஒரு தனிப்பட்ட கட்சியும், அமைப்பும் இதன் வெற்றிக்கான பெருமையைத் தட்டிச் செல்ல முடியாது."

"கிட்டத்தட்ட எழுநூறு ஆசிரியர் பதவி காலியாக இருப்பதாகவும், ஆனால் அவற்றை நிரப்பக் கவர்னர் தடையாக உள்ளதாகவும் கூறப்படுகிறதே?"

"கவர்னர் எதற்கும் தடையாக இல்லை! 88 ஆம் ஆண்டிலிருந்து கணக்கெடுத்துக் கணித்த காலியிடங்கள் இவை. இந்தக் காலியிடங்களில் முப்பது சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம். ஆனால் இதுபோன்ற இட ஒதுக்கீடுகளை மாநில அரசே முடிவெடுக்க முடியாது என்றும், மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்றும் எங்களுக்குச் சொல்லப்பட்டது. இதுதான் கால தாமதத்துக்குக் காரணம். தற்போது 205 இடங்களை உடனடியாக நிரப்பவும் இருக்கிறோம்."

– பி. எஸ்.

"என்னய்யா பிரச்னை. படம் என்னோடது. பையன் நல்லா வரக்கூடிய மாதிரி க்ளோசப்புல ரெண்டு பைட்டு, ரெண்டு சாங் எடுத்தா என்னய்யா...."

அவர் பேச்சில் முரட்டுத்தனம் இருந்தது. கலா சூர்யாவின் கையை அழுத்தினாள்.

"ப்ளீஸ் சூர்யா. கூல் டவுன்..."

"என்ன செய்யப் போறீங்க சார்?"

"கதையை மாத்தணும். அடுத்த ஷெட்யூல்ல நான் சொல்ற சமாசாரம் எல்லாம் வரணும். பழைய ஹிட்டான பாட்டைக் கூட விலைக்கு வாங்கி வைச்சிருக்கேன்."

அவர் உற்சாகத்தில் இருந்தார்.

மேஜையில் தாளம் போட்டார்.

"படத்தோட பேரை மாத்திடலாம். அதென்ன "உள்ளேயும் சில காயங்கள்?'

"சார் அது என் கனவு..."

"வேண்டாம் கண்ணு. இஷ்டம் இல்லேன்னா தின்னுக்கோ. மனோகரா மதனா அவனை வைக்கக்கலாம்."

சூர்யா ஆத்திரத்துடன் வெளியே வந்தான்.

கலாவைப் பிறகு வந்து பார்க்கச் சொல்லி, தயாரிப்பாளர் சிரித்தார்.

மதனைச் சந்திக்க முடியவில்லை. பிறகு கலாவைக் கூட சந்திக்க முடியவில்லை.

படம் நெல்லையில் வளருவதாக 'வளரும் படங்கள்' வரிசையில் செய்தி வந்தது.

'அசோசியேஷனில் சொல்லு;' 'கேஸ் போடு' என்று ஆளாளுக்கு நம்பிக்கை கொடுத்தார்கள்.

சூர்யாவுக்கு சென்னை கசந்தது. ஏமாற்றுக்காரர்களின் பட்டணமாகிப் போன மாதிரி இருந்தது.

சூர்யா சிதைந்து போனான்.

ப்ரிவியூ போய் விட்டு வந்து நண்பன் சொன்னதைக் கேட்டதும் அந்தப் படத்தைக் கண்டிப்பாகப் பார்க்கக் கூடாது என்ற எண்ணம் வலுத்தது.

இஷ்டத்திற்கு மாற்றிய கதையை மக்கள் இஷ்டப்பட்டு ஏற்றுக் கொள்ளவில்லை.

இரண்டாவது வாரம் படம் தூக்கப்பட்டது.

RBF

★நகைக் கடன் கிடைக்கும்

நகை கடன் பெறுவதற்கு R.D கட்டத் தேவையில்லை

எவ்வளவு வேண்டுமானாலும் நகை கடன் காலை 8.30 முதல்
மாலை 4.00 வரை வழங்கப்படும்.

நகைகளை காலை 9 முதல் மாலை 4 மணிக்குள்
(அனைத்து நாட்களிலும்) மீட்டுக் கொள்ளலாம்.

புதுப்பிக்க கட்டணம் கிடையாது

வீட்டு அடமானம் பெயரில் கடன் வழங்கப்படும்

இராயப்பேட்டை பெனிபிட் பண்டு லிமிடெட்

(மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற "நிதி" கம்பெனி)

கிளை அலுவலகம்:
"பார்க் சென்டர்", 14, வெங்கடநாராயணா ரோடு,
தி.நகர், சென்னை-600017, போன்: 443703, 446137.

ஞாயிற்றுக்கிழமை: காலை 8.30 முதல்
மதியம் 12.30 வரை

செவ்வாய்க்கிழமை விடுமுறை

மேற்கண்ட கடன்கள் எங்களது பதிவு அலுவலகத்திலும் கிடைக்கும்.

பதிவு அலுவலகம்

கோகலே பவன், 8, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-600 014.
போன்: 831180, 846445, 831755
தபால் பெட்டி எண். 5555

வெள்ளிக்கிழமை விடுமுறை

★ பங்குதாரர்களுக்கு மட்டும்

தங்கள் முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும்.

உங்கள் ஜாதக பலனை கேட்டறியுங்கள்

ஜோதிட போன்

வார பலன்கள்

☎ 001 609 936 34 + ☐☐

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன்
உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் சேர்த்து
டயல் செய்யவும்

51 மேஷம்	52 ரிஷபம்	53 மிதுனம்	54 கடகம்	55 சிம்மம்	56 கன்னி
57 துலாம்	58 விருச்சிகம்	59 தனுசு	60 மகரம்	61 கும்பம்	62 மீனம்

டாரட் பலன்கள்

ஒரு பண்டைய ஆருட முறை.
உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு
பதிலளிக்கிறது.

அழையுங்கள்:

0016099363450

பொருத்தம்

நீங்களும் உங்கள் துணையும்
எவ்வாறு ஒத்துப்போக
முடிகிறது?

அழையுங்கள்:

0016099363474

Anthem

பத்திரிகை விமர்சனம் வந்த போது படம் டூரிங் டாக்கீஸை எட்டிப் பார்த்தது.

அங்கும் எடுபடாமல் பந்தாடப் பட்டது.

சென்னையை மறந்து சொந்த கிராமத்தில் வந்து மலையை துள்ளி ஓடும் வாய்க்காலை, கிராமத்து மக்களைக் கவனிக்கும் போது இதுவரை பட்ட காயங்கள் ஆறிய மாதிரி இருந்தது.

இரவு அம்மாவோடு பேசும் போது அம்மா இந்த ஊரில் நடந்ததாய்ச் சொன்ன காதல் பிரச்னை மனதில் சின்னக் கரு வானது.

ஒரு வாரம் தொடர்ந்து தூக்கத்தை மறந்து யோசித்த போது, அதுவே ஒரு தரமான திரைப்படத்தின் கதையாக வளர்ந்தது.

அம்மா மொட்டை மாடிக்குச் சிரமப் பட்டு ஏறி வந்தாள்.

''என்னம்மா...?'' என்றான் சூர்யா.

''மெட்றாஸ்ல இருந்து ஒரு பொண்ணு உன்னைத் தேடி வந்திருக்கு. சினிமா நடிகை மாதிரி சிவப்பா அழகா இருக்கு...''

''என்னவாம்?''

''உன்கிட்டே பேசணுமாம்...''

''பேர் கேட்டியா...''

''கலாவாம்....''

அம்மா அந்த பெயரைச் சொன்னதும் புதிய உற்சாகம் மனதில் அலையடித்தது. இதுவரை டெவலப் செய்து வைத்திருந்த கதைக்கு ஒரு நம்பிக்கை கொடுக்க அவள் வந்த மாதிரி இருந்தது.

கீழே இறங்கி வந்தான்.

கலாவைப் பார்த்து ரொம்ப நாள் ஆன மாதிரி இருந்தது.

இந்த இடைப்பட்ட காலத்தில் அவள் அழகு கூடிவிட்ட மாதிரி இருந்தது.

''வா... கலா... கங்கிராட்ஸ். உன் படம் பத்திரிகை எல்லாத்திலேயும் வந்தது.''

''என்ன சூர்யா... இண்டலா... உனக்குத் துரோகம் பண்ணின தயாரிப்பாளருக்குப் படமும் துரோகம் பண்ணிடுத்து. படத்தைப் பார்த்தியா...''

''பார்க்க மனசு வரலை கலா. ஆரம்ப காட்சிகளையெல்லாம் எத்தனை கஷ்டப் பட்டு எடுத்தோம். ராட்சச பலூன்ல காமிராவைக் கட்டி ஷூட் பண்ணினோமே...''

''சில காட்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது சூர்யா. வேற எதாவது கதை இருக்கா...''

''மீண்டும் ஏமாறணுமா...'' விரக்தியுடன் கேட்டான்.

''இந்தத் தடவை நானும் ஒரு பார்ட்னர் சூர்யா. விவரம் கேட்காதே. உன் இஷ்டப் படி படம் எடுக்கலாம். எல்லா விஷயத்துக்கும் உடனே கோபப்படாதே சூர்யா. முதல்ல நீ உன்னை நிரூபிக்க ஆகணும். பிறகுதான் சண்டை, கோபம் எல்லாம்....'' கலா உரிமையுடன் கண்டித்தாள்.

''தயாரிப்பாளர் ஆயிட்டீங்க இல்லே. இனிமே அப்படித்தான் பேசுவீங்க...'' என்று சூர்யா கோபத்துடன் சொன்னதும் அவளுக்கும் சிரிப்பு வந்தது.

''நீங்க சீக்கிரமே தயாரிப்பாளரையும் இயக்குகிற டைரக்டரா ஆவீங்க சூர்யா...'' என்று சொல்லி விட்டு அவன் கையை மென்மையாகப் பற்றினாள்.

அந்தக் கையை விடவே மனசில்லை சூர்யாவுக்கு!





''நீங்க என்னைக் காதலிச்சுக் கை விட்டுட்டதாக ராத்திரி கனவு கண்டேன்.''

''உன் பாடுதேவலை. நல்ல கனவா வந்தது. எனக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டுக் குடும்பம் நடத்தறதா வந்தது!''

- ஆர். வடிவேலு.

சிவகாமியின் சபதம்

நாற்பத்தாறாம் அத்தியாயம்
பௌர்ணமி சந்திரன்

இந்த மண்ணுலகம் படைக்கப்பட்ட காலத்திலிருந்து மாதம் ஒரு தடவை பூரண சந்திரன் உதயமாகி நீல வானத்தில் ஜொலிக்கும் வைர நக்ஷத்திரங்களிடையே பவனி சென்று வருகிறது.

ஒவ்வொரு பௌர்ணமியன்றும் வான வீதியில் பவனி வரும் பூரண சந்திரன் கடந்த ஒரு மாதத்துக்குள்ளேயே பூவுலகில் எத்தனையோ அதிசயமான மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதைப் பார்த்துக் கொண்டு வருகிறது.

எனவே, மண்ணுலகில் அடிக்கடி நிகழும் மாறுதல்கள் பூரண சந்திரனுக்கு, அதிகமான ஆச்சரியத்தை அளிக்க முடியாது தான்.

என்ற போதிலும், *இன்றைக்குச் சுமார் ஆயிரத்து முந்நூற்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் (கி. பி. 642-ல்) மார்கழி மாதத்தில் உதித்த பூரண சந்திரன் வாதாபி நகரம் இருந்த இடத்துக்கு மேலாக வந்த போது சிறிது நேரம் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்று விட்டு ஒரு பெருமூச்சுடனே தான் அப்பால் நகர்ந்திருக்க வேண்டும்.

சென்ற பௌர்ணமியன்று அந்த வாதாபி நகரத்தின் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் சந்திரனையே தொட்டு விட முயல்வதைப் போல் கம்பீரமாக எழுந்து நின்றன. வானத்து நக்ஷத்திரங்களோடு போட்டியிடுவன போல் நகரெங்கும் தீபங்கள் ஜொலித்தன. ஐசுவரியத்தில் பிறந்து ஐசுவரியத்தில் வளர்ந்த ஆடவரும் பெண்டிரும் சகலாபரண பூஷிதர்களாக அந்தப் பெரு நகரின் விசாலமான வீதிகளில் மதோன்மத்தங் கொண்டு உலாவினார்கள். அலங்கரித்த யானைகளும் அழகிய குதிரைகளும் தந்தச் சிவிகைகளும் தங்க ரதங்களும் மோகன வெண்ணிலவிலே ஒளிவீசித் திகழ்ந்தன. விண்ணை எட்டும் மாளிகைகளின் உப்பரிகைகளில் வெண்ணிலாவுக்கு இன்னும் வெண்மையை அளித்த தவள மாடங்களில் மன்மதனையும் ரதியையும் ஒத்த காளைகளும் கன்னியர்களும் காதல் புரிந்து களித்தார்கள். தேவாலயங்களில் ஆலாசிய மணிகள் ஒலித்தன. அரண்மனையில் கீதவாத்தியங்களின் இன்னிசை கிளம்பிற்று. நடன மண்டபங்களில் சதங்கைகள் சப்தித்தன. கடை வீதிகளில் பொது ஜனங்களின் கலகலத்தொனி எழுந்தது. அகில் புகையின் மணமும் சந்தனத்தின் வாசனையும் நறுமலர்களின் சுகந்தமும் எங்கெங்கும் பரவியிருந்தன.

ஒரு மாதத்துக்கு முன்பு மேற்கண்டவாறு கந்தர்வபுரியாகக் காட்சியளித்த வாதாபி நகரம் இருந்த இடத்தில் இன்றைக்குச் சிற்சில குட்டிச் சுவர்கள் நின்றன. மற்ற இடத்திலேயெல்லாம் கரியும் சாம்பலும் புகையேறிய கல்லும் மண்ணும் காணப்பட்டன. சில இடங்களில் அவை கும்பல் கும்பலாகக் கிடந்தன; சில இடங்களில் அவை பரவிக் கிடந்தன.

இடிந்து விழாமல் புகையினாலும் தீயினாலும் கறுத்துப் போய் நின்ற குட்டிச் சுவர்களின் ஓரமாகச் சிற்சில மனிதர்கள், - உயிர் பெற்று எழுந்த பிரேதங்களையும் பேய் பிசாசுகளையும் ஒத்த மனிதர்கள், - ஆங்காங்கே திரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் எங்கே போகிறோம் என்ற

அமரர் கல்கி

---

* 1946 இல் சிவகாமியின் சபதம் எழுதப்பட்டது.

காவேரித் திருநாட்டில் செங்காட்டாங்குடி கிராமத்தில் மாமாத்திரர் குலத்தில் பிறந்த பரஞ்சோதியார் காஞ்சி பல்லவ சக்கரவர்த்தியின் சேனைத் தலைவராக வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று, அந் நகரை அடியோடு அழித்து விட்டுத் திரும்பியது பழந் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் மிகப் பிரசித்தி பெற்ற சம்பவமாகும். மேற்படி சம்பவத்தைக் குறித்துப் பெரிய புராணம் பின்வருமாறு குறிப்பிடுகிறது :-

மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்.

(தண்டுபோய் : சேனையுடன் படையெடுத்துச் சென்று; துளைநெடுங்கை வரையுகைத்து: நீண்ட துதிக்கைகளையுடைய மலைபோன்ற யானைப் படைகளை ஏவி; பகட்டினமும் பரித் தொகையும்: ஏராளமான யானைகளையும் குதிரைகளையும்; இகலரசன்: போரிற் சிறந்த அரசன் மாமல்லன்.)

வாதாபிப் பெரும் போருக்குப் பிறகு பரஞ்சோதியார் சிவபக்தி பூண்டு சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு 'சிறுத்தொண்டர்' என்னும் காரணப் பெயரையும் அடைந்தார்.

திருச்செங்காட்டாங்குடி கிராமத்தில் இன்றைக்கும் சிறுத்தொண்டர் கோயில் இருக்கிறது. அவர் வாதாபியிலிருந்து கொண்டு வந்த விநாயகர் கோயிலும் இருக்கிறது.

ஹம்ஸத்வனி ராகத்தில் பாடப்படும் ''வாதாபி கணபதிம் பஜேஹம்'' என்னும் பிரசித்தி பெற்ற தீக்ஷிதர் கீர்த்தனத்தில், செங்காட்டாங்குடியிலுள்ள வாதாபி விநாயகர்தான் தோத்திரம் செய்யப்படுகிறார் என்பது ஆராய்ச்சியாளரின் கொள்கை.

சித்திரக் கலைஞர் ''சந்திரா'' திருச்செங்காட்டாங்குடி கிராமத்துக்குச் சென்று தீட்டிக் கொண்டு வந்த அவ்வூரின் அழகிய தோற்றமும், அங்கேயுள்ள வாதாபி விநாயகரின் விக்கிரகமும் அருகில் சோபை அளிக்கின்றன.

எண்ணமே இல்லாமல் பிரமை கொண்டவர்களைப் போல் நடந்தார்கள். வேறு சிலர் ஆங்காங்கே உட்கார்ந்து கரியையும் மண்ணையும் கிளறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரைத் தேடினார்களோ அல்லது எதைத் தேடினார்களோ, யாருக்குத் தெரியும்?


வாதாபி நகரம் இருந்த இடத்துக்குச் சற்று தூரத்தில் இடிந்தும் தகர்ந்தும் கிடந்த கோட்டை மதிலுக்கு அப்புறத்தில் அந்த மார்கழிப் பௌர்ணமி சந்திரன் முற்றிலும் வேறுவிதமான மற்றொரு காட்சியைப் பார்த்தது. லட்சக்கணக்கான பல்லவ பாண்டிய வீரர்கள் வெற்றிக் கோலாகலத்திலும் களியாட்ட ஆரவாரங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் படையெடுத்து வந்த காரியம் யாரும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சுலபமாக நிறைவேறி மகத்தான வெற்றி கிடைத்த காரணத்தினால் அவர்களுக்கேற்பட்ட மதோன்மத்தம் ஒரு பக்கம்; வாதாபி நகரத்தின் கொள்ளையில் அவரவருக்குக் கிடைத்த பங்கினால் ஏற்பட்ட உற்சாகம் ஒரு பக்கம்; இவற்றோடு கூட இந்தப் பாழாய்ப் போன மயான பூமியில் - அவர்களாலேயே மயானமாக்கப்பட்ட பிரதேசத்தில் - இன்னும் ஒரு தினந்தான் இருக்க வேண்டும்; அதற்கு அடுத்த தினம் சொந்த நாட்டுக்குப் புறப்படப் போகிறோம் என்ற எண்ணமானது அவர்களுக்கு அளவில்லாத எக்களிப்பை உண்டுபண்ணி இரவெல்லாம் தூக்கமின்றிக் களியாட்டங்களில் ஈடுபடும்படி செய்திருந்தது.

அந்த வெற்றி வீரர்களிலே சிலர் ஆடிப் பாடினார்கள்; சிலர் இசைக் கருவிகளிலிருந்து பல வகை அபஸ்வரங்களைக் கிளப்பினார்கள். சிலர் கும்பலாக உட்கார்ந்து கதை கேட்டார்கள். சிலர் வாதாபி யுத்தத்தில் தாங்கள் செய்த வீர பராக்கிரமச் செயல்களைப் பரஸ்பரம் சொல்லிப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். சிலர் மார்கழி மாதத்துக் குளிரைப் போக்கிக் கொள்வதற்காக எரிகிற வீடுகளிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்த கட்டைகளைப் போட்டுக் கொளுத்திக் கொண்டும் தீயைச் சுற்றி உட்கார்ந்து கொண்டும் குளிர் காய்ந்தார்கள்.

அநேகர் வாதாபியிலிருந்து அவரவரும் கொள்ளையடித்துக் கொண்டு வந்திருந்த செல்வங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு பூதங் காப்பது போல் காத்து வந்தார்கள். இப்படிக் கொள்ளை கொண்ட பொருளை அதி ஜாக்கிரதையாகப் பாதுகாத்தவர்களுக்குள்ளே, - சற்று கவனித்துப் பார்த்தோமானால் - நமக்குத் தெரிந்த வயோதிக வீரர்

ஒருவரைக் காணலாம். சோழ மன்னர் பரம்பரையைச் சேர்ந்த செம்பியன் வளவன் - மங்கையர்க்கரசியின் அருமைத் தந்தை தான் அவர். தாம் காஞ்சியிலிருந்து புறப் பட்டு வந்த பிறகு தமது மகளுக்கு நேர்ந்த அரும்பெரும் பாக்யெத்தை அறியாதவராய் அவளுடைய திருமணத்தின் போது ஸ்திரீ தனம் கொடுப்பதற்கென்று எரிந்து கொண் டிருந்த வாதாபி நகரிலிருந்து மிக்க பரபரப் புடனும் கறுகறுப்புடனும் ஏராளமான முத்துக்கள், மணிகள், ரத்தினங்கள், தங்கம், வெள்ளி ஆபரணங்கள் ஆகியவற்றை எடுத் துக் கொண்டு வந்து சேர்த்திருந்தார்.

இவ்விதம் கிழவர் அரும்பாடுபட்டுச் சேகரித்திருந்த பொருள்களுக்கு ஒரு நாள் ஆபத்து வரும்போலிருந்தது. இரவு



நேரங்களில் சில சமயம் மாமல்லர், தமது சேனா வீரர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு, சமயோசிதமான பாராட்டு மொழிகள் கூறி உற்சாகப்படுத்தி விட்டுப் போவது வழக்கம். ஊருக்குப் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கி விட்டபடியால் சென்ற நாலு தினங்களாகச் சக்கரவர்த்தி தினந்தோறும் இரவு வெகு நேரம் வரையில் வீரர்கள் தங்கியிருந்த இடங்களுக்குச் சென்று அவர்களைப் பார்த்தும் பேசியும் சந்தோஷப்படுத்தி வந்தார்.

அந்த வெற்றி வீரர்களைத் தம்முடன் நிரந்தரமாகப் பந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு கூட, போர்க்களத்திலும் கோட்டைத் தாக்குதலிலும் அரும் பெரும் வீரச் செயல்கள் புரிந்தவர்களை நேரில் தெரிந்து கொண்டு அவர்களுக்கு விசேஷ சன்மானவம் அளிக்க வேண்டுமென்னும் விருப்பமும் மாமல்லரின் மனத்திலே இருந்தது.

மேற்சொன்ன நோக்கங்களுடன், மானவன்மன், ஆதித்தவர்மன், சத்ருக்னன் ஆகியவர்கள் பின்தொடர, படைவீரர்களைப் பார்த்துக் கொண்டு வந்த நரசிம்ம சக்கரவர்த்தி நமது சோழ வம்சத்து வீரக் கிழவரின் அருகில் வந்ததும் சிறிது நின்று அவரை உற்றுப் பார்த்தார். "ஆ! இந்தப் பெரியவரை நாம் மறந்தே போய் விட்டோமே?" என்று மெல்லச் சொல்லி விட்டு, வெளிப்படையாக, "இது என்ன, ஐயா, இவ்வளவு பொருள்களை நீர் எப்படிச் சேர்த்து வைத்துக் கொள்ளத் துணிந்தீர்? ஒவ்வொருவரும் தம்மால் தூக்கிக் கொண்டு போகக்கூடிய அளவுதானே வைத்துக் கொள்ளலாம் என்பது நமது கட்டளை!" என்று கேட்டார்.

"சக்கரவர்த்தி! நூறு வீரர்களுடன் வந்தேன்! என்னைத் தவிர அவ்வளவு பேரும் வாதாபிப் போரில் உயிர் துறந்தார்கள்."

"ஆகா! சோழ நாட்டு வீரந்தான் வீரம்!... ஆனால் இதைக் கேட்பதற்கு நமது சேனாதிபதி இங்கில்லையே?" என்று சக்கரவர்த்தி அருகிலிருந்தவர்களிடம் சொல்லி விட்டு, "இருக்கட்டும், ஐயா, நூறு வீரர்களும் போரில் இறந்திருந்தால் வீர சொர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு இந்தப் பொருள்களினால் ஒரு பயனுமில்லையே?" என்றார்.

"பல்லவேந்திரா! எனது ஏக புதல்விக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். புராதன சோழ வம்சத்தின் பெருமைக்கு உகந்த முறையில் ஸ்திரீதனம் கொடுக்க வேண்டுமென்று விரும்பி...." என்று கிழவர் தயங்கினார்.

மாமல்லர் புன்னகையுடன் மானவன்மரைப் பார்த்து, "இவருக்கு விஷயமே தெரியாது போலிருக்கிறது. சொல்லட்டுமா?" என்று கேட்க, "வேண்டாம், பிரபு! இப்போது திடீரென்று சொன்னால் சந்தோஷ மிகுதியால் கிழவரின் பிராணன் போனாலும் போய் விடும்!" என்றார் மானவன்மர்.

உடனே மாமல்லர், "மானவன்மரே! இந்த பெரியாருடைய பெண்ணின் ஸ்திரீதனத்துக்காக நூறு யானையும், அந்த நூறு யானை சுமக்கக்கூடிய திரவியங்களும் கொடுங்கள்!" என்று சொல்லி விட்டு மேலே நடந்தார்.

செம்பியன் வளவன் தமது செவிகளையே நம்ப முடியாதவராய்ப் பிரமித்துப் போய் நின்றார்.

இதையெல்லாம் பார்த்துக் கேட்டுக் கொண்டு அக்கம் பக்கத்தில் நின்ற வீரர்கள், "வள்ளல் மாமல்லர் வாழ்க! வாழ்க!" என்ற கோஷங்களைக் கிளப்பினார்கள்.

சக்கரவர்த்தியும் அவருடைய கோஷ்டியும் அப்பால் சென்று வெகு நேரம் ஆன வரையில் அந்த வீரர்களில் பலர் மாமல்லரின் வீர பராக்கிரமங்களைப் பற்றியும் அவருடைய அரும்பெருங் குணாதிசயங்களைப் பற்றியுமே பேசிக் கொண்டிருந்தார்கள். எனினும், இடையிடையே உற்சாகக் குறைவை உண்டுபண்ணிய பேச்சு ஒன்றும் எழுந்தது. அது என்னவெனில், முன்னெல்லாம் போல் சக்கரவர்த்தியுடன் ஏன் சேனாதிபதி பரஞ்சோதி தொடர்ந்து வரவில்லை என்பதுதான்.

வீரமாமல்லரும் வீரர் பரஞ்சோதியும் நகமும் சதையும் போலவும் பூவும் மணமும் போலவும் பிரிக்க முடியாத நண்பர்கள் என்பதாக இத்தனை நாளும் அவர்களை அறிந்தவர்கள் எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இது விஷயம் தமிழகத்து வீரர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்து வந்தது. இராஜகுலம் எதிலும் பிறவாதவரும், இராஜ வம்சத்தோடு உறவு பூணாதவருமான ஒருவர், தமது வீரம், ஒழுக்கம், ஆற்றல் இவை காரணமாகவே சேனாதிபதிப் பதவியையடைந்திருந்ததும், அவருக்கும் சக்கரவர்த்திக்கும் அத்தகைய நெருங்கிய நட்பு ஏற்பட்டிருந்ததும் மற்ற வீரர்களுக்

அருள்வாக்கு

ஒரு மரத்திலே புஞ்பத்திலிருந்து தான் காயும் பழமும் உண்டாகின்றன. புஞ்பமாக இருக்கும் போது மூக்குக்கும் பழமாக இருக்கும் போது நாக்குக்கும் ரஸமாக இருக்கின்றன. பழம் நல்ல மதுரமாக இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் ஆகிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால் எல்லாப் பற்றும் போய் விடுகிறது. பழத்தில் மதுரம் நிரம்பின உடனே கீழே விழுந்து விடுகிறது. அதுபோல் இருதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்து விட்டால் தானாகவே எல்லாப் பற்றும் போய் விடும். புளிப்பு இருக்கும்வரை பற்று இருக்கும். அப்போது காயைப் பறித்தால் காம்பில் ஜலம் வரும். காயிலும் ஜலம் வரும். அதாவது மரமும் காயை விட்டுவிட விரும்பவில்லை; காயும் மரத்திலிருந்து விடுபட விரும்ப வில்லை. ஆனால் நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால் தானாகவே பற்றும் போய் விடும்; பழம் தானே இற்று விழுந்து விடும். மரமும் பழத்தை விடுகிறது; பழமும் மரத்தை விடுகிறது. இரண்டும் ஜலம் விடாமல் - அதாவது அழாமல் - ஆனந்தமாகப் பிரியும். படிப்படியாக வளர்ந்து மனம் முழுதும் மதுரமான ஒவ்வொருவனும் இப்படியே ஆனந்தமாக சம்ஸார விருட்சத்திலிருந்து விடுபட்டு இருப்பான். பழமாக ஆவதற்கு முன் ஆரம்ப தசையில் எப்படிப் புளிப்பும் துவர்ப்பும் வேண்டியிருக்கின்றனவோ அதுபோலக் காமம், வேகம், துடிப்பு எல்லாமும் வேண்டியவைதாம் போலிருக்கிறது! புளிப்பு இருக்க வேண்டிய சமயத்தில் புளிக்க வேண்டும். துவர்ப்பு இருக்க வேண்டிய சமயத்தில் துவர்க்க வேண்டும். ஆனாலும் அந்தந்த நிலையோடு நிற்காமல், பிஞ்சு அனவரதமும் பழமாகிக்



கொண்டே இருப்பது போல் நாமும் மேலும் மேலும் மாதுரியமான அன்பை நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் நாமாகப் போய் மோக்ஷத்தைத் தேட வேண்டாம். எந்தக் காலத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தால் தானாக மோக்ஷம் என்கிற மதுரநிலை வந்துவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கெல்லாம் மிக்க பெருமையை அளித்து வந்தது.


ஆனால், அப்பேர்ப்பட்ட என்றும் அறியாத சிரஞ்சீவி சிநேகம் என்று எல்லோரும் நினைத்திருந்த சேர்க்கைக்கு, - இப்போது ஊறுநேர்ந்து விட்டதாகத் தோன்றியது. மாமல்லருக்கும் பரஞ்சோதிக்கும் மனவேற்றுமை ஏற்பட்டு விட்டதாகக் காணப்பட்டது. வாதாபிக் கோட்டையைத் தாக்கலாமா வேண்டாமா என்ற விவாதத்திலிருந்து அந்த வேற்றுமை உண்டானதாகச் சிலர் சொன்னார்கள். சிவகாமி தேவி விஷயத்தில் மாமல்லர் மிகக் கடுமையாக நடந்து கொண்டதே சேனாதிபதிக்கு ஆறாத மனப்புண்ணை உண்டாக்கி விட்டதாகச் சிலர் ஊகித்தார்கள். இலங்கை இளவரசரும் ஆதித்தவர்மனும் சேர்ந்து போதனை செய்து மாமல்லருடைய மனத்தில் களங்கம் உண்டுபண்ணி விட்டதாகச் சிலர் கூறினார்கள். "அதெல்லாம் ஒன்றுமில்லை! எல்லோரும் வீண்வம்பு வளர்க்கிறீர்கள்! சேனாதிபதிக்கு இடைவிடாத உழைப்பினால் தேக சுகம் கெட்டு விட்டது. அதனால் சக்கரவர்த்தி அவரை வெளியே வராமல் கூடாரத்துக்குள்ளே இருந்து இளைப்பாறும்படி கட்டளையிட்டிருக்கிறார்" என்று ஒரு சிலர் நல்ல காரணத்தைக் கற்பித்தார்கள்.

"நாளைக் காலையில் கொடியேற்றத்துக்குச் சேனாதிபதி வருகிறாரா, இல்லையா என்று பார்க்கலாம். கொடியேற்றத்துக்குச் சேனாதிபதி வந்தால் எல்லாச் சந்தேகமும் தீர்ந்து விடும்!" என்று சிலர் மத்தியஸ்தமாய்ப் பேசினார்கள்.

(தொடரும்)

"பிரெஞ்சுக் கலாசாரத்தின்

பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட போது, "பிரெஞ்சு கலாசாரத்தின் ஜன்னலாகவே பாண்டிச்சேரி விளங்கும்" என்று சொன்னார் ஜவாஹர்லால் நேரு. பிரெஞ்சு கலாசாரம் என்பது என்ன? பலரையும் சந்தித்துப் பேசினோம்.



★ பிரெஞ்சுக்காரர்களின் சாப்பாட்டு அறை. (வரவேற்பு அறை, படுக்கையறை, அலுவலக அறை ஆகியவற்றை அட்டையில் காணலாம்.)

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து 1954 - ல் பாண்டி விடுபட்டாலும், 1962 - ல் தான் உண்மையான அதிகார மாற்றம் நடைமுறைக்கு வந்தது. அப்போது இந்திய அரசுக்கும் பிரெஞ்சு அரசுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கைப்படி மக்கள் தங்கள் விருப்பப்படி குடியுரிமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு சொல்லப்பட்டது.

பிரான்ஸிலும் பாண்டியிலும், ராணுவம் மற்றும் அரசுத் துறைகளில் பணி புரிந்து வந்தவர்கள் தாங்கள் தொடர்ந்து பிரெஞ்சுக் குடிமக்களாகவே வாழ விரும்புவதாகச் சொல்லி விட்டார்கள். அப்படிப் பட்டவர்களின் வாரிசுகளும் பிரெஞ்சுக் குடிமக்களாகவே அங்கீகரிக்கப்பட்டார்கள். இன்று கிட்டத் தட்ட 15,000 பேர் பிரான்ஸ் தேசத்துக் குடியுரிமை பெற்று பாண்டியில் வசித்து வருகிறார்கள். இவர்களது வாரிசுகள் பிரான்ஸ் தேசக் குடிமக்கள் என்ற முறையில் கல்வி, வேலை வாய்ப்பு போன்ற சலுகைகளை அனுபவிக்க அந்நாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஓய்வு பெற்றவர்கள் இருபதாயிரம், முப்பதாயிரம் என்று பென்ஷன் வாங்குகிறார்கள்.

"இவர்களிடம் ஏகப்பட்ட பணப் புழக்கம் இருப்பதால், பாண்டிச்சேரி மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்து விட்டது. மீன், காய்கறிகள் போன்றவற்றின் விலை ஏறியதற்கு இவர்கள்தான் காரணம். இவர்கள் வியாபாரிகள் கேட்ட விலையை, எந்த வித பேரமும் இன்றிக் கொடுத்து விடுவதால், அவர்கள் இஷ்டத்துக்கு விலையை உயர்த்தி விடுகிறார்கள். மிகக் குறைந்த சம்பளத்தில் காலம் தள்ளும் நம்மவர்களால் சமாளிக்க முடியவில்லை" என்று சொன்னார் பத்திரிகையாளர் தணிகைத்தம்பி.

"ஆமாம்! அது சரிதான்" என்கிறார் ஓய்வு பெற்ற பாண்டிச்சேரி தலைமை நீதிபதி எஸ். ராமலிங்கம். "பென்ஷன் மட்டுமல்ல; அங்குள்ள இவர்களது வாரிசுகளும் இவர்களுக்கு ஏகமாகப் பணம் அனுப்புகிறார்கள். இது தவிர, வேலையில்லா இளைஞர்களுக்கும், விதவைகளுக்கும் கூட பிரான்ஸ் உதவிப் பணம் கொடுக்கிறது. அவர்கள் நாட்டு நாணயப்படி பெறுவது குறைவாக இருந்தாலும் இந்திய மதிப்பில் அந்த உதவித் தொகை கூட மூவாயிரம் நாலாயிரம் என்று ஆகிவிடுகிறது" என்றார் அவர்.

"பாண்டிச்சேரி வாசிகளின் அன்றாட வாழ்க்கையில் இன்னமும் பிரெஞ்சுக் கலாசாரத்தின் பாதிப்பு இருக்கிறதா?"

"வீட்டிற்கு வருபவர்களை, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் வந்தால் கூட இன்முகம் காட்டி வரவேற்பது அந்தக் கலாசாரத்தின் ஒரு பகுதிதான்!" என்கிறார் ராமலிங்கம். "சாலையில் யாருடைய இறுதி ஊர்வலம் சென்றாலும், காரில் சென்றாலும் இறங்கி நின்று தலையைக் குனிந்து மரியாதை செலுத்துவது பிரெஞ்சுக்காரர்களின் வழக்கம். இன்னமும் பாண்டியில் அந்த வழக்கத்தைக் காணலாம்" என்கிறார் முதல்வர் வைத்தியலிங்கம். (அட்டையில்)

"இது மட்டுமல்ல; நேரந் தவறாமை,

ஜன்னல்!”

சுத்தம் ஆகியவைகளிலும் எங்களிடம் அவர்கள் தாக்கம் இருக்கிறது'' என்று சொல்கிறார் மதாம் (Madam) உபகாரமேரி பிரெடரிக். (அட்டைப் படம்) இவரது கணவர் பிரெடரிக் இருபது வருடங்களுக்கு மேல் பிரெஞ்சு ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். சென்ற வருடம் தான் காலமானார். உபகார மேரிக்கு மூவாயிரம் பிராங்க் (சுமார் 15,000 ரூபாய்) குடும்பப் பென்ஷனாக வழங்குகிறது பிரெஞ்சு அரசு. மூன்று மகன்கள் பிரான்ஸில் இருக்கிறார்கள். ஒரு மகளும், இந்தியக் குடியுரிமை பெற்றவரைக் கல்யாணம் செய்து கொண்டு பிரான்சுக்கே சென்று விட்டார்.

''எங்களால் தான் பாண்டிச்சேரியில் விலைவாசி உயர்கிறதென்று சிலர் சொல்கிறார்கள். அதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். புடவைக் கடைக்கு, அல்லது நகைக் கடைக்கு நாம் போகிறோம். அங்கு பிரெஞ்சுப் பணம் பெறுகிறவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தனித்தனி விலையா வைத்திருக்கிறார்கள்? அவர்கள் சொன்ன விலைக்கு எல்லோரும் வாங்கி வரவில்லையா? ஆனால் ஏழை வியாபாரிகளிடம் மட்டும் அவர்கள் பேரம் பேசுகிறார்கள். நாங்கள் பேரம் பேசாமல் வாங்கி வருகிறோம். ஏழை மக்கள் மேல் எங்களுக்கு இரக்க உணர்வு இருப்பதே இதற்குக் காரணம். ஆனால் அதை டாம்பீகம் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு'' என்று சொல்லும் உபகார மேரி, வீட்டிலேயே இரண்டு ஏழைப் பெண்களை வைத்துக் காப்பாற்றுவது மட்டுமல்லாமல் பல ஏழைக் குழந்தைகளின் கல்விக்கும் உதவி செய்து வருகிறார்.

பிரெஞ்சுக் குடியுரிமையுள்ளவர்கள் கையில் ஏகப்பட்ட பணம் இருப்பதால், இங்கு வீடு, நிலம் என்று முதலீடு செய்கிறார்கள். இதனால் நிலத்தின் மதிப்பும் ஏகமாக உயர்ந்து விட்டது. ''நான் பிரான்ஸ் சென்றபோது, தொழிற்சாலைகளில் முதலீடு செய்யுங்கள் என்று அங்குள்ள பாண்டி மக்களிடம் சொல்லிவிட்டு வந்தேன்'' என்றார் முதல்வர் வைத்தியலிங்கம்.

ஆனால், ''எங்கள் சொத்துக்கே இங்கு பாதுகாப்பில்லை!



✱ நீதிபதி ராமலிங்கம்



✱ வீபோன்ஹர் கோவிந்தசாமி

நாங்கள் எதை நம்பி முதலீடு செய்வது?'' என்று குரல் கொடுக்கிறார் வீபோன்ஹர் கோவிந்தசாமி. சுமார் பதினேழு ஆண்டுக் காலம் பிரெஞ்சு ராணுவத்தில் பணிபுரிந்தவர் இவர். நான்கு மகன்களும், இரண்டு மகள்களும் பிரான்ஸில் இருக்கிறார்கள். மாதம் 5,000 பிராங்க் (25,000 ரூபாய்) பென்ஷன் வாங்கிக் கொண்டு மனைவியோடு இங்கு வசித்து வருகிறார் இவர்.

''எனக்குச் சொந்தமான நிலத்தைக் கபளீகரம் செய்து விட்டார்கள். போலீஸ், கோர்ட்டு என்று போனாலும் பிரயோஜனமில்லை, 'இவனுக்கு ஏகப்பட்ட பணம் இருக்கிறதே' என்று அகப்பட்டதைச் சுருட்டுபவர்கள் இங்கு அதிகமாகி விட்டார்கள்!'' என்று கூறி வருத்தப்படுகிறார் கோவிந்தசாமி. இரு கண்களிலும் பார்வை இழந்து விட்டவர் இவர். மிகவும் பயந்த நிலையில் இந்தத் தம்பதிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சிறிது நேரம் வாசல் கேட்டைத்

✱ பெதாங் விளையாட்டு....



திறக்காமலே அவர்கள் பேசியதில் புரிந்தது. ''ஏமாற்றுக்காரர்கள் இருக்கும் இடத்தில் எப்படி முதலீடு செய்வது?'' என்று மகன்கள் கேட்கிறார்களாம்.

''பெரும்பாலோர் நிலம், வீடு முதலிய வற்றை நெருங்கிய நண்பர்கள், சொந்தக் காரர்கள் பாதுகாப்பில் விட்டு விட்டு பிரான்ஸ் சென்றார்கள். அப்படி பாது காப்புப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் கள் ஏமாற்ற நினைப்பது தான் இது போன்ற பிரச்னைகளுக்குக் காரணம்'' என்கிறார் முதல்வர் வைத்தியலிங்கம்.

ஸோல்தாக்கள் என்று சொல்லப் படும் ஓய்வு பெற்ற பிரெஞ்சு ராணுவ வீரர்கள் வாழ்க்கையை நன்றாகவே அனுப வித்துக் கொண்டிருக்கிறார்கள். காலையி லும் மாலையிலும் 'பெதாங்' (Pethanque) என்ற விளையாட்டில் பிஸியாக இருக் கிறார்கள். பெதாங் விளையாட்டு, பிரெஞ்சு ஆதிக்கத்தின் தாக்கம்தான். ஐரோப்பா விலேயே பிரான்ஸில் மட்டும்தான் இந்த விளையாட்டு ஆடப்படுகிறது. அடுத்தபடி யாக பாண்டிச்சேரியில்தான்.

''புஷ்ஷோந்' என்ற சிறிய மர உருண்டை ஒன்றை முதலில் தூக்கிப் போடு கிறார்கள். பின்னர் ஆட்டக்காரர்கள் ஒவ் வொருவராக 'பூல்' என்று சொல்லப்படும் இரும்புக் குண்டை (இதன் எடை 650 கிராமிலிருந்து 800 கிராம் வரை இருக்கும்) மர உருண்டையை நோக்கி எறிகிறார்கள். ஆட்டக்காரர்கள் எல்லோரும் இரும்புக் குண்டை வீசியவுடன், ஒவ்வொருவரும் வீசிய இரும்புக் குண்டுக்கும், முன்பே வீசிய மரக் குண்டுக்கும் இடையே உள்ள இடைவெளியை அளந்து பார்க்கிறார்கள். குறைவான தூரத்தில் குண்டை வீசிய வருக்கு அதிக பாயிண்ட்.

''பாண்டிச்சேரியில் மட்டும் பன்னி ரண்டு பெதாங் கிளப்புகள் உள்ளன. வருடந் தோறும் இவற்றிடையே போட்டிகளும் உண்டு'' என்கிறார், விளையாட்டில் பிஸி யாக இருந்த சிவலிங்கம்! மர உருண் டையும், இரும்புக் குண்டுகளும் பிரான்ஸி லிருந்துதான் வருகின்றனவாம்.

பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றவர் களுக்கு இந்தியாவில் வாக்குரிமை கிடை யாது. ஆனால் ரேஷன் கார்டு உண்டு. ஐந்து வருடத்துக்கொருமுறை, தொடர்ந்து தங்கு வதற்கு இந்திய அரசிடம் அனுமதி பெற வேண்டும். பிரான்ஸ் தேசத்துப் பாராளு மன்றத்தில், பிரான்ஸுக்கு வெளியே உள்ள குடியுரிமை பெற்றவர்களுக்குப் பிரதிநிதி கள் இருக்கிறார்கள். அதன்படி பாண்டிச் சேரியிலிருந்தும் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப் படுகிறார்.

''நீங்கள் ஏன் மகன்களோடு பிரான் ஸிலேயே இருக்கக் கூடாது என்று உபகார மேரியிடம் கேட்டதற்கு, ''என்ன இருந்தா லும் நம்ப மனுசங்களோடு வாழ்வது போல இருக்குமா?'' என்கிறார் உபகாரமேரி.

இத்தகைய நோக்கு ஒருபுறமிருந் தாலும் பாண்டிச்சேரியிலுள்ள ஒரு பெட்டிக் கடைக்காரரிடம் மழை நிலவரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது, அவர் ''ஸார், பிரான்ஸில் ஒரு வாரமா நல்ல மழையாம்'' என்று இயல்பாகவே சொன்னபோது முந் நூறு ஆண்டு காலம் ஆண்ட பிரெஞ்சுக் காரர் களின் தாக்கம் பாண்டிச்சேரி மக்களை விட்டு இன்னும் அகலவில்லை என்பது புரிந்தது.

– ப்ரியன்

அட்டை வண்ணப் படங்களும்
பாண்டிச்சேரி தொடர்பான
மற்றபடங்களும் : கோபிநாத்

''கச்சேரிக்கு வந்ததிலிருந்து பயங் கரமா பசிக்குதுங்க....''

''அடடா, ஏன் அப்படி?''

''ஜுகல் பந்தின்னு ஏதோ ஒரு பந்தி இருக்குதுன்னு சொன்னாங்க. அத னால சாப்பிடாமலேயே வந்துட் டேன்!''





''நேத்திக்கு கச்சேரியிலே பாடினீங் களே அது என்ன ராகம்ன்னு என்னால கண்டுபிடிக்கவே முடியலை...''

''ரெண்டு வருசமா சாதகம் பண்ணின என்னாலேயே கண்டுபிடிக்க முடியலை... ஒரு நாள் மட்டும் கேட்டுட்டு நீங்க என்ன பண்ணுவீங்க பாவம்!''

ரூ. 6000x10 = ரூ. 1,23,000*

நம்பமுடியாத கணக்கு அல்லவா?
யூலிப்பினால் இது எப்படி சாத்தியம் என்று பாருங்கள்.



ஆச்சரியம் ஆனால் உண்மை.

யூனிட் ட்ரஸ்டின் யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேருங்கள். இலக்கு ரூ. 60,000, கால அவதி 10 வருடங்கள். அதாவது பத்து வருடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் ரூ. 6000 முதலீடு செய்யுங்கள்.

உங்கள் முதலீடு ஒவ்வொரு வருடமும் டிவிடெண்ட் பெறுகிறது. வருடாவருடம் டிவிடெண்ட் வளர்ந்து வருகிறது. கடந்த வருடத்திய டிவிடெண்ட் 16% இந்த டிவிடெண்ட் திட்டத்தில் திரும்பவும் முதலீடு செய்யப்படுகிறது. ஆகவே உங்கள் முதலீடு வளர்ந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு வருடமும், 10 வது வருட முடிவில் உங்களுக்கு 5% முதிர்ச்சி போனஸும் அளிக்கப்படுகிறது.

ஆகவே 10 வருட கால அவதியில் நீங்கள் ரூ. 60,000 மட்டுமே முதலீடு செய்யும்போது உங்களுக்கு கிட்டத் தட்ட ரூ. 1,23,000* கிடைக்கிறது.

வரி அனுகூலத்தைப் பாருங்கள். புன்னகை இன்னும் கூடட்டும்!

உங்கள் பங்கீட்டு தொகையான ரூ. 6000 ற்கு இந்த கவர்ச்சிகர லாபத்தைத் தவிர வருடா வருடம் பிரிவு 88ன் கீழ் வரிக்கழிப்பும் உண்டு. அதாவது வருடாவருடம் உங்கள் சேமிப்பு ரூ. 1200.

மறவாதீர்கள் உங்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக்காப்பும் உண்டு.

இவற்றைத் தவிர உங்களுக்கு ரூ. 60,000 ற்கு ஆயுள் காப்பும் உண்டு. அதுவும் மருத்துவ பரிசோதனை இல்லாமலேயே மற்றும் இலவச விபத்துக் காப்பும் உண்டு ரூ. 15,000 வரை.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

24 மில்லியன் யூனிட்தாரர்களின் சேவையில்.

* முதலீட்டாளரின் வயது 25 என்ற ஊகத்தின் ஆதாரப்படி யூனிட்டுகளின் வாங்கும் மற்றும் விற்கும் விலை வரிசைப்படி ரூ. 12.20 மற்றும் ரூ. 11.80 என்று மற்றும் டிவிடெண்ட் 16% என்ற விகிதத்தில் இருக்கும்.

யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்.

எல்லா செக்யூரிட்டியின் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவையாகும். முதலீடு செய்வதற்கு முன் முதலீட்டு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

Sista's UTI 3029/92 TM C

Branch Offices: • Madras Ph: 517101, 517178 • Coimbatore Ph: 210399
• Madurai Ph: 34597 • Trichy Ph: 27774

அனாதை

பிரபஞ்சன்

கை ஏந்தி நிற்கிற லாசரைக் கண்ணுற்றார், சீமோன் தேவகிருபை நாதர். ஒரு தட்டத்தை ஏந்தி நிற்பது போலக் கைகளை ஏந்திக் கொண்டு நின்றான், அவன்.

"அடேய், லாசர், எவ்வளவு கூலியடா வேணும்?" என்று மீண்டும் கேட்டார், சீமோன்.

அவன் ஒரு பிள்ளையைப் போலச் சிரித்தான்.

"எவ்வளவு கூலி வேணும் என்று நியாயமாகக் கேளடா."

அவன், ஒரு கொளுத்தாத மெழுகு வர்த்தி மாதிரி, எதனாலும் பாதிக்கப்படாதவன் மாதிரியும், ஒரு ஞானி மாதிரியும் கை ஏந்தியபடி நின்றான். சீமோன், தன் ஜேபியிலிருந்து, ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவன் கையில் போட்டார். பரம திருப்தி முகத்தில் தோன்ற, அவன் அவரை ஸ்தோத்திரம் செய்தான். அப்புறம் அகன்றான்.



"இரடா, லாசர். என்ன இப்படி ஒரு மனுஷனாக இருக்கிறாயே. ஒரு அம்பாரம் செங்கல்லை, மாடிக்கும், தோட்டத்துக்கும் எடுத்துப் போய்ப் போட்டிருக்கிறாய். காலை எட்டு மணிக்குத் தொடங்கி, சாயங் காலம் ஆறு மணி வரைக்கும் மெய்யாக உழைச்சிருக்கிறாய். நான் அஞ்சு ரூபாய் கொடுத்தால் சந்தோஷப்பட்டுக் கொண்டு வாங்கிக் கொள்கிறாயே.. என்ன பிள்ளை, நீ?"

சீமோனின் மனைவி சந்தனப்பூ உபகார மரி, சீமோனின் அண்டைக்கு வந்து, "என்ன?" என்றாள், லாசரைப் பார்த்தபடி. சீமோன், தன் சட்டையின் கீழ்ப் பையிலிருந்து ஒரு சுருட்டை எடுத்து, கையில் இருந்த தீப்பெட்டியின் உதவியால் பற்ற வைத்துக் கொண்டார். சுருட்டைச் சுவைத்து, முதல் உமிழ்நீரைத் தரையில் துப்பினார். அப்புறம் சொன்னார்.

"இந்தப் பையன், வேலை கேட்டுக் கொண்டு, காலமே வந்து நின்றான், சந்தனம். பாவப்பட்ட ஜீவனாக இருந்தான். இங்கிருந்த லாரி செங்கல்லையும் தோட்டத்திலேயும், மெத்தை மேலும் போடச் சொன்னேன். நாலு ஆள்கள், ரெண்டு நாளையிலே செய்கிற வேலை இதுவாச்சதே. இவன், தனி மனுஷனாய், இதைச் செய்து முடித்துப் போட்டிருக்கிறான். கூலி என்னடாவென்றால் சிரிக்கிறான். விளையாட்டுக்கு அஞ்சு ரூபாய் கொடுத்தால், முணுமுணுப்பும் இல்லாமல், போகிறான். மனசுக்குச் சங்கடமாய் இருக்கிறதே. மற்றவனானால் நாற்பது ரூபாய் கூலி கேழ்ப்பான்களே... இந்தப் பிள்ளை இப்படி ரெண்டுங்கெட்டானாய் இருக்கிறானே," என்ற சீமோனின் குரலில் இரக்கம் தொனித்தது. சந்தனம் அம்மாளும், மிகவும் கஸ்தியுடனேயே அந்த லாசரைப் பார்த்தாள்.

கூலியைக் கொடுத்த பிறகும், இந்த எசமானர்கள் தன்னைக் காக்க வைக்கும் காரணத்தைப் புரியாமல் குழம்பினான், லாசர். சீமோன், அவனிடத்தில் கேட்டார்.

"லாசர், என்னிடத்திலே, என் வீட்டிலே வேலை செய்து கொண்டு இருக்கிறாயா? சாப்பாடு, துணி, சம்பளம் தருகிறேன்."

"சரி" என்பதாகத் தலையசைத்தான், லாசர்.

லாசர் என்கிறவன் இப்படியானவன்.

ஜென்மராக்கினி மாதா கோவில் பக்கத்திலே, குப்பைத் தொட்டிக்கு அருகாமையிலே கிடந்த ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு, ஒருத்தர், அனாதை ஆஸ்ரமத்துக்குக் கொண்டு போய்க் கொடுத்தார். அழுக்கும் கிழிசலாயும் இருந்த துணியில், அந்தத் தூய குழந்தை சுற்றிக் கிடந்தது. காலையும் கைகளையும் அசைத்துக் கொண்டு, பசிக்கு அழுதது. அதைப் பார்த்த, அனாதைக் குழந்தைகள் மடத்து கன்னிகாஸ்திரி அம்மாவின் மனசிலே ஈரம் கசிந்தது. அந்தக் குழந்தைக்கு லாசர் என்கிற பெயரைச் சூட்டித் தம்முடன் இருக்கிற பிள்ளைகளுடன் சேர்த்துக் கொண்டார்.

லாசர், அனாதை மடத்திலே பன்னிரண்டு வயது வரைக்கும் வளர்ந்தான். அது, பெண் குழந்தைகளுக்கான மடமானபடியால், அந்த வயசுக்கு மேலும், ஆண் பிள்ளையை வைத்துக் கொள்ளுதல் தகாது என்கிற காரணத்தால், அம்மாள், அவனை, ஓர் அச்சுக் கூடத்திலே விட்டாள். மிஷன் தெருவும், வண்ணாரத் தெருவும் சந்திக்கிற ஓர் இடத்தில், அச்சுக் கூடம் இருந்தது. முன்பகுதி,

அச்சகமும் பின்பகுதி வீடுமாக இருந்தது அது. அச்சுக் கோப்பவர்க்கு டீ வாங்கி வந்து தந்தும், அடித்த காலியை மண்ணெண்ணெய் விட்டுக் கழுவுவது, அச்சகத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்வது முதலான வேலைகளைச் செய்து கொண்டும், அச்சு கோக்கக் கற்றுக் கொண்டும் இருந்தான் லாசர்.

ஓர்துசாமிக்கு லாசரைப் பிடித்திருந்தது. எனினும், அவனிடத்தில் ஒரு குணம் அவரைச் சங்கடப்படுத்தியது.

லாசர், மடத்தில் வளர்ந்த பிள்ளை. காலையில், எக் காலமானாலும், ஸ்நானம் செய்தல், ஏழு மணிக்குப் பலகாரம், மதியம் சரியாகப் பன்னிரண்டு மணிக்குச் சாப்பாடு, ஆறு மணிக்கு ஜெபம், இரவு ஏழு மணிக்குச் சரியாகச் சாப்பாடு, ஞாயிற்றுக்கிழமை காலைப் பூசைக்கு உடுத்திக் கொண்டு போதல் என்கிற, கடமை தவறாத கடிகாரம் மாதிரி, அவன் வாழ்ந்திருந்தவன். ஜீவிதம் என்பது, இவ்வாறான மணி பிசகாத நடப்பு என்று லாசர் நம்பினான். பழக்கம், அப்படி அவனைப் பயிற்றுவித்தது. வேலைக்குச் சேர்ந்த முதல் நாள், சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு, அச்சுக் கூடத்துக்குள்ளேயிருக்கும் வீட்டுக்குள் நுழைந்து ஓர்துசாமியின் பெண் சாதி சமைத்து வைத்திருக்கும் சோற்றையும், குழம்பையும் எடுத்துப் போட்டுக் கொண்டு, வயிறு கொண்ட மட்டுக்கும் சாப்பிட்டு விட்டு, அச்சகத்துக்குத் திரும்பினான். அந்த அம்மாள் திகைத்துப் போனாள். ஓர்துசாமியும் கூட பெரும் திகைப்புக்கு ஆளானார்.

''என்னடா.. லாசர், இப்படிச் சாப்பிட்டு வருகிறாயே...'' என்றார் ஓர்துசாமி.

''பசிச்சது. சாப்பிட்டேன்'' என்றான். அவன் நியாயம் அது. எவன் நியாயமும் அதுவாகத்தான் இருக்க முடியும். பன்னிரண்டு வருஷ மடத்து வாழ்க்கை அவனுக்குக் கற்றுத் தந்திருந்த நெறியும் அது. ஆனால், ஓர்துசாமிக்கு அன்று மதியம் சாப்பாடு இருக்கவில்லை. இதை அவரால் ரசிக்க முடியவில்லை. அதை விடவும், அவர் மனைவியால் இந்தப் பழக்கத்தை அங்கீகரிக்க முடியவில்லை. ஆனால், தன் செயலில் எந்த பேதத்தையும் லாசரால் காணக் கூடவில்லை.



அதைப் புரிய வைக்க ஓர்துசாமி முயன்றார்.

''தோ பார், லாசர், மணி அடிக்கிறது மாதிரி சரியாகப் பன்னிரண்டு மணிக்கு, ஒருத்தர் வீட்டுக் குசினிக்குள் (அடுப்பறை) நுழைந்து, நீயே சோறு போட்டுக் கொண்டு உண்பது நல்லது இல்லையே...''

அதற்கு லாசர் சொன்னான்.

''எனக்குப் பசிக்குது. அப்படிச் சாப்பிட்டுப் பழக்கமாச்சது.''

இந்தப் பிள்ளைக்கு என்ன சொல்லிப் புரியவைக்கிறது? சம்பளமாக ஏதோ பணத்தைக் கொடுத்தார். எண்ணியும் கூடப் பார்க்காமல், தன் ஜேபிக்குள் அதை வாங்கி வைத்துக் கொண்டான்.

''எண்ணிப் பாரடா.''

அவனுக்கு எண்ணத் தெரிந்திருந்தது. ஆனால், தன் உழைப்புக்கு என்ன கூலி என்பது அவனுக்குத் தெரியாமல் இருந்தது. அவனுக்குப் பசி எடுப்பது தெரிந்தது. பசிக்குச் சோறு தின்ன வேண்டும். சோறு தின்ன ஏதானும் வேலை செய்ய வேண்டும். வேலைக்கு எசமானர் தரும் கூலி, அவர் அவனுக்கு இரக்கப்பட்டு அளிக்கும் தானம் என்பதாகத் தெரிந்தது.

லாசரைத் தாக்குப்பிடிக்க முடியாமல், ஓர்துசாமி அவனை விரட்டிவிட்டார். அங்கங்கே சில்லறை வேலைகள், கொளுத்து



வேலை செய்து கொண்டிருந்த போதுதான், லாசர், சீமோன் வீடு கட்டும் இடத்தை அடைய நேர்ந்தது.

ஆக, லாசர், சீமோன் வீட்டை வந்தடைந்தான்.

சீமோன், தாம் குடியிருந்த வீட்டைக் கோயிலாக மாற்றி விட்டிருந்தார். சுவரில், மாடம். மாடத்தில் குழந்தை ஏசுவைத் தாங்கி நிற்கும் அன்னை மரியாள். சொரூபத்துக்குக் கீழே, ஒரு பெரிய பீடம். பீடத்தில், புத்தகம் தாங்கியில் விரித்து வைக்கப்பட்ட புனித பைபிள். அருகே, காலம் பண்ணிப் போன குடும்பத்து மூதாதையர் படம் இருந்தது. சொரூபங்களுக்குக் காலையும் மாலையும் மல்லிகை மாலையிட்டு வைத்திருந்தார். சொரூப மாடத்துக்கு எதிரே வரவேற்புப் பகுதி. அதில் சௌகர்யமான இருக்கை. இருக்கைகளின் முதுகில், பின்னல் வேலை செய்த அழகான விரிப்புகள். பித்தளையில், பறவை ஒன்று சிறகு விரித்திருப்பது போல, வேலைப்பாடுமிக்க சாம்பல் கிண்ணம். வேலைப்பாடு மிக்க முக்காலி.

லாசர், ஆச்சரியத்தால் நிரம்பிப் போனான். மநுசர்களின் வாழ் இடங்கள், இவ்வளவு அழகும், அடர்த்தியும் கொண்டிருப்பது அவனுக்குப் புதிய சங்கதி. மூக்கு நுனியில், உலகப் பந்தைத் தாங்கி நிற்கும் பறவையின் சிற்பம், துலாக்கோலைக் கையில் பிடித்திருக்கும், கண்ணை இழந்த ஒரு பெண் என்று பார்க்கும் இடம் எங்கும் கண்களைச் சிறை பிடிக்க எத்தனைச் சிற்பங்கள். அகலமாகக் கண்களைத் திறந்து கொண்டு அத்தனை பொம்மைகளையும் அவன் பார்த்துக் கொண்டு நின்றான். சீமோன் அவனிடத்தில் சொன்னார்.

''அடே... லாசர்... பார்த்தாயா இதுகளையெல்லாம். என் சம்பாத்யமே இந்தப் பொருள்கள்தாம். இதுகளையெல்லாம் தினம் ஒழுங்காகச் சுத்தம் பண்ணித் துடைக்கும் பொறுப்பு உனக்கு. வீட்டுக்குள் ஒரு தும்பு தூசு இருக்கக் கூடாது.''

சீமோனின் வீடு இரண்டு அடுக்குகளைக் கொண்டது. தரைப் பகுதி, வரவேற்பறை, மற்றும் முக்கியஸ்தர்கள் அமர்ந்து பானம் பண்ணுகிற அறையாகவும் இருந்தது. அதிலே, ஓர் அறை எழுதும், வாசிக்கும் அறை. ஒன்று உணவு அறை. ஒன்று விருந்தினர் படுக்கும் அறை. முதல் மாடிப் பகுதியை தமது ஏகாந்தத்துக்கும் படுக்கைக்கும் வைத்துக் கொண்டார். இரண்டாம் மாடி தான் ரொம்ப விசேஷம். மாடி முழுக்க ஒரு தோட்டமே இருந்தது. செடி வர்க்கத்தில் என்னென்ன உண்டோ அத்தனையும் அங்கு இருந்தது. எல்லாமே வேடிக்கையாய் இருந்தது, லாசருக்கு. வீட்டில், சீமோனின் மனைவி மதாம் சந்தனம் அம்மாள், மகள் தேவமலர் இருந்தார்கள். மற்ற இரண்டு பெண்களும், இரண்டு பையன்களும் பிரான்சிலே வேலையில் இருந்தார்கள்.

காலை உறங்கி எழுந்ததும், லாசர் ஸ்நானம் முடித்துக் கொள்வான். அதன்பின், பொருட்களைச் சுத்தம் செய்யும் வேலை. அதற்குள், தேவமலரின் சைக்கிளைத் துடைத்துச் சுத்தம் செய்தல், பிரான்ஸ் சைக்கிளான அதற்குத் தினம் தினம் தேங்காய் எண்ணெய் இட்டுச் சுத்தம் செய்யும் பொறுப்பு அவனுக்கு முக்கியம். அப்புறம் ஐயாவுடன் கடைக்குப் போய், மீன், எறா, நண்டு, கோழி என்று ஏதேனும் இரண்டு, பிராந்திக் கடைக்குச் சென்று, பிராந்தியோ, ரம்மோ வாங்கிக் கொள்வது, வீடு திரும்புவது என்பது பகல் வேலையாக இருந்தது. மாலை, சீமோனுடன் உலாவப் போக வேண்டியது, லாசரின் கடமையாயிற்று. சீமோன், புஸ்ஸி தெருப் பக்கம் இருக்கிற கோவிந்து பிராந்திக் கடைக்குச் சாயங்காலம் போய்ச் சேர்வார். மேசை மேல் வெள்ளை வெளேரென்று விரிப்பு விரித்திருக்கும். விரித்திருக்க வேண்டும் அவருக்கு. ஒரு புள்ளிக் கறை அவர் காணக் கூடாது. அதன் மேலேதான் அவர் சாப்பிடுவார். விஸ்கியோ, ஜின்னோ சாப்பிடுவார்.

''லாசர்... கொஞ்சம் சாப்பிடடா'' என்று சில சமயங்களில் சீமோன், லாசரிடம் மன்றாடுவார்.

''ஐயோ... எசமானே... எனக்கு அது வேணாம்'' என்று பதிலுக்கு மன்றாடுவான் லாசர். குடித்து விட்டால் சீமோனுக்கு, சுருட்டுப் பற்றவைப்பது சிரமமாகி விடும். ஆகவே, சுருட்டை அவர் இதழ்களில் வைத்துப் பற்றவைக்க வேண்டியது லாசரின் பொறுப்பாகும். அவரைப் பத்திரமாக வீடு கொண்டு சேர்க்க வேண்டியது, லாசரின் அடுத்த பொறுப்பு. சீமோனின் சட்டையில் நாலு பைகள் இருக்கும். ஒவ்வொன்றிலும், நிறைய ரூபாய்கள் இருக்கும். ஆயிரத்துக்கும் குறைவாகப் பணம் வைத்திருப்பதில்லை, சீமோன். கடையை விட்டுப் புறப்படும் போது, கோவிந்து எச்சரிக்கையுடன் சொல்வார்.

''முசியே சீமோன். பணம் பத்திரம்.''

அதுக்குச் சீமோன் சொல்வார்.

''கவலையில்லை, முசியே கோவிந்து. லாசர் இருக்கிறானே என்னிடம். என் மனைவி, மக்களை விடவும் எனக்கு நம்பிக்கையானவன்.''

ஒருநாள் சீமோன் லாசரிடம் சொன்னார்.

''லாசர்... இனியும் நீ சின்னப் பையன், அல்லவே. முக்கிய இடங்களுக்கு நீ முழுக்கால் சட்டை அணிய வேணும். முகத்தில், மரவட்டை மாதிரி மீசை வந்து விட்டது. தொடை, கால் எல்லாம், பார், எவ்வளவு முடி.''

கடைக்கு அழைத்துச் சென்று ஆறு

சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு இதுவரை கிடைத்திராத ஓர் அரிய வாய்ப்பு!

ஸ்ரீபெட் வாட்டர் பாட்டில் மற்றும் சபரிமலை பிரசாதம் கொண்டுவர உடையாத, அழகான 220 மி.லி. பெட் ஜார் - இரண்டும் சேர்ந்து விசேஷ சலுகை விலையில்.

ரு 25/- மட்டுமே!

சிறப்புத் தள்ளுபடி விலையில்



ஸ்ரீபெட்

ஜார்கள்-பாட்டில்கள்

சபரிமலை பக்தர்களுக்கு ஒரு உற்ற துணை!

உடையாதது – உணவுத் தரம் வாய்ந்தது

சுகாதாரமானது.

இச்சலுகை ஸ்டாக் உள்ளவரை மட்டுமே. இச்சலுகையில்லாமலும் மேற்கண்ட பொருள்கள் கிடைக்கும்.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீபெட்

ஸ்ரீராம் நிறுவனத்தின் தரமான தயாரிப்பு

விநியோகஸ்தர்கள் : ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்.

AAA/SSI/92/21

●● மிகக் குறுகிய நிலப்பரப்பில் 55 மொழிகள் பேசப்படுவதும், ஓர் இந்திய மாநிலத்திற்கு 5 அரசுத் தொடர்பு மொழிகள் (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சு) என்பதும் புதுவைக்கே உரிய தனிச் சிறப்புகளாகும்.

– நா. சுந்தரம்

சட்டைகளும், ஆறு பேண்ட்களும், அதற்கான உள்ளாடைகளும், எடுத்துத் தந்தார் சிமோன். அவனுக்கென்று தனியாக ஓர் அறையும் ஒதுக்கித் தந்தார். அதிலே, கட்டிலும், மெத்தையும், மின்விசிறியும், ரேடியோவும் கூட இருந்தன. அவன் உடைமைகள் வைத்துக் கொள்ள ஓர் அலமாரியும் கூட அதிலே இருந்தது.

முதன் முதலில், அவன் பேண்ட்டும் சட்டையும், செருப்பும் அணிந்து கொண்டு, தன் அறையை விட்டு வெளி வருகையில், சிமோனும், மகள் தேவமலரும் அதி ஆச்சர்யம் அடைந்தார்கள்.

''அடேய் லாசர்... என்ன ஆளே மாறி விட்டாய். பிரான்சுக்குப் போய் வந்த சொல்தா (சோல்ஜர்) மாதிரி அல்லவா இருக்கிறாய், நீ! அடேயப்பா, என்ன எடுப்பு. என்ன மேட்டிமை?'' என்று புகழ்ந்துரைத்தார்.

''லாசர்! உன் உயரத்துக்கும், உடம்புக்கும் இந்த டிரஸ் ரொம்ப அழகாக இருக்கிறது. உண்மையிலேயே ரொம்ப நன்றாக, அழகாக இருக்கிறாய்'' என்று சிலாகித்து உரைத்தாள், தேவமலர்.

லாசர் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைக் கண்டு திடுக்கிட்டார், சிமோன்.

''என்ன, லாசர்? ஏன் கஸ்திப்படுகிறாய்?''

''ஒன்றும் இல்லை, முசே சிமோன். அனாதை நான். எனக்கு மனுஷ அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் எந்தவிதம் நன்றி சொல்வது.''

''சே. இதுமாதிரி பேசாதே. நீ என்னண்டைக்கு வந்து பத்து வருஷமாச்சு, தெரியுமோ? பத்து வருஷம் எனக்காக நீ உழைச்சிருக்காய். அதுக்காக நான் அல்லவா உன் அண்டைக்கு மெர்சி (நன்றி) சொல்ல வேணும்.''

தேவமலர், பிரஞ்சுக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். தினம், சாயங்கால வேளைகளில் அவளுடைய சினேகிதர்களும், சினேகிதிகளும் அவளுடன் சல்லாபிக்க வருவார்கள். அவர்களுக்கு, சாப்பிட, குடிக்க, கவனிக்கவும் ஆன பொறுப்பு லாசரிடம் அளிக்கப்பட்டது. தேவமலர், லாசரைத் தன் நண்பர்களிடம் இவ்வாறு அறிமுகப்படுத்துவாள்.

''முசே லாசர். என் அப்பாவுக்கு செக்ரதேர். (செக்ரட்டரி). என் தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பு இப்போ இவரிடம் தான்.''

தேவமலர் சினேகிதர்களும், சினேகிதிகளும் அவனுக்கு 'ஹலோ' சொல்வார்கள். தேவாவின் நெருங்கின சினேகிதியான, செல்வமரி சொன்னாள்.

''அடடா. என்ன அழகான செக்ரதேர்டி. அதிருஷ்டக்காரி.''

சிரிப்பு, அந்த அறையை நிரப்பியது. லாசருக்கே கூட வெட்கமாகிப் போய் விட்டது. சினேகிதர்களும் சினேகிதிகளும் போய் விட்ட பிறகும், அன்த்துவான் மட்டும், இரவு பதினோரு மணி வரைக்கும் கூட இருந்து விட்டுப் போவான். அன்த்துவானுக்கு, விஸ்கி மட்டும்தான் பிடிக்கும் என்று சொல்லியிருந்தாள், தேவமலர். ஆகவே, ரொம்ப உசத்தியான ஒரு பாட்டில் எப்போதும் வீட்டில் இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும் லாசர். அன்த்துவானை லாசருக்கும் பிடித்திருந்தது. அவனையும், அவனை விடவும், தேவமலரையும் லாசருக்குப் பிடித்திருந்தது.

தேவமலருக்கு எல்லா விஷயங்களிலும் ஆலோசனை சொல்பவனாக, லாசர் மாறிப் போய் இருந்தான்.

''லாசர்... இரவு நேரங்களில் எனக்கு லேசான பலகாரம் போதும். சாப்பாடு வேணாம். இரவு கண்விழித்து என்னால் படிக்க முடியவில்லை.''

''அதுதான் நல்லது. இன்றைக்கு இருந்தே பலகாரத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்பான் லாசர்.

''லாசர். அன்த்துவானை ரெண்டு நாள் காண முடியவில்லையே...''

''மத்மசேல்! (மத்மசேல் - மிஸ்) அன்த்துவான் வீட்டுக்குப் போய் நான் அவரை அழைத்து வருகிறேன்.''

''முசியே லாசர். நான் அன்த்துவானைக் கல்யாணம் கட்டிக் கொள்ள ஆசை. அவர் எனக்குச் சரியான ஜோடிதானே?''

''அதிலென்ன சந்தேகம்? நீங்கள் பொருத்தமான சோடிதான்.''

தேவன் பிறக்கிற மாதம். அற்புதமான மாதமாக இருக்கிறது. சிலுசிலுவென்கிற குளிர், காலையிலும், மாலையிலுமாக, மனசுக்கு சந்துஷ்டியைத் தருகிறதே. அன்று காலை தேவமலரும் லாசரும் கோயிலுக்குக் கிளம்பினார்கள். பனி, ஈரத் துண்டை உதறினாற்போல விரவியிருந்தது. செல்லும் வழியில், தேவமலர் லாசரிடம் சொன்னாள்.

''லாசர், எனக்கொரு உபகாரம் செய்வாயா?''

''உபகாரம் என்று நீ சொல்லலாமா? என்ன என்று சொல்.''

''எனக்கும், அன்த்துவானுக்கும் இருக்கிற சிநேகத்தை அப்பாவிடம் சொல்லி...''

''சொல்லி...?''

''கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல். அம்மாவிடம் கூட, ஏன், என் அம்மாச்சியிடம் கூட என்னால் இதைச் சொல்ல முடியாது.''

''எதைச் சொல்ல முடியாது, தேவா?''

அவள் தலை கவிழ்ந்து கொண்டு வந்தாள். கைக் குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளிடமிருந்து, ஓடிகோலான் வாசனை ரம்மியமாக வந்து கொண்டிருந்தது.

''ஏன், என்ன தேவா.. ஏன் கஸ்திப்படுகிறாய்? எனக்குப் புரியவில்லை.''

அவள் பெருமூச்செறிந்து கொண்டு சொன்னாள்.

''புரியவில்லையா? நீ ரொம்ப நல்லவன், லாசர்.''

சற்று நேரம் பொறுத்து அவள் சொன்னாள்.

''அப்பாவிடம் சொல். அவசரம். கல்யாணம் அவசரம் என்று சொல்.''

''சொல்கிறேன்.''

மூசியே சீமோனிடம், லாசர் சொன்னான்.

சீமோன், கோவிந்து கடையில், மூன்றாவது வட்டத்தைத் தொடங்க ஆயத்தம் பண்ணிக் கொண்டிருந்தார். அவர் முன், வறுத்த ஆட்டிறைச்சியும், வறுத்த பட்டாணியும் இருந்தது. புருவம் உயர, சீமோன் கேட்டார்.

''அவசரம் என்றா சொன்னாள்?''

''ஆமாம், ஐயாவே.''

''அவர், பிராந்தியை ஒருமுறை விழுங்கினார். ஆப்பிள் தோல் நிறத்தில் இருந்தது அந்தத் திரவம். அவர் கருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் யோசனையை லாசர் கலைத்தான்.

''ஐயாவே...''

''என்னை மூசே சீமோன் என்றே அழை. நமக்குள் என்ன உயர்ச்சி, தாழ்ச்சி?''

''மூசே சீமோன். தேவாவுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?''

அவர் சொன்னார்.

''அவசரம் இல்லை. இன்னும் மூன்று மாசம் பொறுத்துக் கொள்ளச் சொல். எனக்கு நிலவரம் புரிகிறது என்று சொல். கர்த்தர் வேறு விதமாக நினைக்கிறதாக எனக்குத் தோன்றுது. அதுக்குத்தான் மூணு மாசம். நான் கர்த்தருடன் சண்டை போட வேணும்.''

சீமோன் சிரித்தார். அது, லாசருக்குப் பயத்தையும், யோசனையையும் தந்தது.

கிறிஸ்தவர் அல்லாதவர்கள், புது வருஷத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். கோடை ஆரம்பமானது, வெயில் உஷ்ணத்தில் தெரிந்தது. தேவமலரின் போக்கு லாசருக்கு மனவருத்தத்தைத் தந்தது. நீனியிலோ, உடுத்திக் கொள்வதிலோ, உல்லாசத்திலோ ஈடுபாடு அற்றவளாகிப் போனாள், அவள். அந்த வாரத்தில், சீமோன் இந்த விஷயத்தை ஆரம்பித்தார். கோவிந்துவும், அன்றைக்கு அபூர்வமாக, சீமோனுடன் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார். சீமோன், லாசரிடத்திலே கேட்டார்.

''லாசர், தேவமலரைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?''

''மூசியே சீமோன்! தேவமலர், தேவமலர் மாதிரி பெண்மணி. அருமையான மனுஷி. அதுக்கென்ன?''

''கேட்டேன்.''

''மூசியே அன்த்துவானைக் கொஞ்ச நாளாகக் காணோமே. பிரான்சுக்குப் போய் விட்டதாகச் சொல்கிறார்களே, நிசம் தானா?''

''அந்த சாத்தானைப் பற்றி என்ன பேச்சு? கிடக்கிறது, விடு.''

சீமோன், ஒரு முழு கிளாசைக் குடித்துக் காலி பண்ணி விட்டுச் சொன்னார்.

''லாசர், தேவாவைக் கட்டிக் கொள்ள உனக்கு இஷ்டமா?''

லாசர் முகம் எப்படியோ மாறிற்று.

''நான், அனாதை, ஐயா.''

''முட்டாள்தனமாகப் பேசாதே. உலகத்தில் கடைசி மனுஷன்தான் அனாதை.''

சீமோன், மீண்டும் குடித்து விட்டுச் சொன்னார்.

''உனக்குத் தேவமலரைக் கட்டிக்க இஷ்டமா?''

''ஐயா. தேவாவுக்கு இது இஷ்டமாக இருக்குமா?''

சீமோன் சிரித்தார். சொன்னார்.

''அவளேதான் கேட்கச் சொன்னாள்.''

லாசருக்கு ஆச்சர்யமாக இருந்தது. அப்புறம் சந்தோஷமாக இருந்தது.



எட்டு மணி வேலை

ஆசியாவிலேயே முதன் முதலாகப் பஞ்சாலைகளில் தான் எட்டு மணிநேர வேலை தொழிற்சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதற்காகப் போராடிய தலைவர் யார் தெரியுமா? இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தலைவர் வ. சுப்பையா.

– நா. சுந்தரம்

10

தெருக்கதவில் சைக்கிள் மோதியதுமே முகம் பூராவும் சிரித்துக் கொண்டு வாசலுக்கு வந்து விடுகிற விஜயலக்ஷ்மியைக் காணவில்லை. எதுவோ சரியில்லை என்பது மாதிரி காற்றில் ஓர் உணர்வு. சைக்கிள் மணி அடிக்கிறது. அப்புறமும் நிசப்தமாகவேயிருக்கிறது. வரவேற்பறையில் ஆளில்லாமல் மின்விசிறி சுழல்கிறதில் செய்தித்தாள் பிரிந்து பறந்து நுழைகிறபோதே லக்ஷ்மிநாராயணன் முகத்தில் அடிக்கிறது. அலங்கோலமாய் சரசரத்துக் கிடக்கிற மற்ற தாள்களை மிதித்துக் கொண்டு எல்லா அறைகளிலும் தேடியாயிற்று. பாத்ரூமிலும் இல்லை.

''விஜயலக்ஷ்மி...''

கொல்லைப்புறத்தில் லக்ஷ்மிநாராயணன் குரல் எதிரொலிக்கிறது. கிணற்றடியில் இல்லை. கிட்டத்தில் கடைகளுக்கும் போகிறவள் இல்லை. மாடியில் நவகோடி அம்மாள் வீடு பூட்டியிருக்கிறது. ஜன்னலில் லக்ஷ்மிநாராயணன் எட்டிப் பார்க்கிறான். கட்டிலில் விபத்துக்குப் பின் நவகோடி அம்மாளின் கணவர் கவிழ்ந்த க்ளுகோஸ் பாட்டிலில் அசைவில்லாமல் உயிர்த்திருக்கிற அமைதி.

''வியஜலக்ஷ்மி...''

மாடிப் படியிறங்கி லக்ஷ்மிநாராயணன் மீண்டும் உரக்கக் கூவுகிறான். தெருவில் சைக்கிளில் இருவர் பார்த்துக் கொண்டே போகிறார்கள்.

''விஜயலக்ஷ்மி...''

படுக்கையறையில் முனகல் சப்தம் கேட்கிறது. குளிருக்கு நடுங்கிக் கொண்டு போர்வைக்குள் விஜயலக்ஷ்மி மூலையில் சுருண்டிருக்கிறாள். ஜுரவேகத்தில் முனகல் சப்தம் இமைகள் மூடி ஒலிக்கிறது.

''விஜயலக்ஷ்மி...''

போர்வைக் குவியலை மெல்ல உலுக்குகிறான்.

''விஜயலக்ஷ்மி....''

லக்ஷ்மிநாராயணன் குரல் சப்தமாய் வருகிறது.

''விஜி.''

மெல்ல அவன் கன்னத்தில் தட்டுகிறான். காதருகில் குனிந்த அவன் குரல் காதலில் குழைகிறது. எப்போதும் அந்த அன்புக்குக் கட்டுப் பட்ட விஜயலக்ஷ்மியின் கண்கள் திறந்து அவனைக் கண்டதில் மின்னுகின்றன. உடன் எழமுடியாமல் போன ஜுரநிலை இயலாமையில், விஜயலக்ஷ்மி அவன் மேல் சாய்ந்து அழத் தொடங்குகிறாள். அவள் தணிகிற வரைக்கும் அணைத்திருந்து அலமாரியில் விபூதி தேடியெடுத்துப் பூசி, நெற்றியில் முத்தமிட்டு ஆசுவாசப் படுத்தி ஒரு தைரியத்துக்குச் சொல்லுகிறான்.

''நான் இருக்கேன். பயப்படாதே!''

போர்வைக்குள் புன்னகை பூக்கிறது.

''காப்பி சாப்பிடறியா?''

''உம்....''

சமையலறையில் லக்ஷ்மிநாராயணன் காப்பி கலந்து எடுத்து வருகிறான். காலையிலிருந்தே அவள் உடல்நிலை ஒரு மாதிரிதான் இருந்தது. மூன்று மணிக்கே ரிக்ஷா வந்து, அவள் பெற்றோர்கள் புறப்பட்டுப் போன பிறகு குளிர் தொடங்கியது. போர்வைக்குள் அவள் சுருண்டிருக்கிறதைப் பார்த்து நவகோடி அம்மாளுக்குப் பக்கென்றாகி விட்டது. வெளிச்சத்தில் ஒரு தடவை பார்த்து, வேப்பிலை எடுத்து வரப் போயிருக்கிறாள். வந்தது விளையாட்டாகவே போய்விட வேண்டுமென்று பூஜையில் அவள் முடிந்து வைத்த மஞ்சள் துணி முறுக்காய் நிற்கிறது.

வேப்பிலையுடன் நவகோடி அம்மாள் திரும்புகிறாள். வழியில் அம்மன் கோவில் வரைக்கும் போயிருந்தாள். உள்ளங்கையில் ஏந்தி வந்து அவள் பங்கிற்கு விஜயலக்ஷ்மியின் நெற்றியிலும், வயிற்றிலும் பூசி விடுகிறாள். விதிமுறைகள் பற்றி லக்ஷ்மிநாராயணனை எச்சரிக்கிறாள். தேவைப்பட்ட எந்த உதவியும் செய்ய அவள் காத்திருக்கிறாள். லக்ஷ்மிநாராயணனுக்காக அல்ல; எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கிற அவள் மகளே போன்ற விஜயலக்ஷ்மிக்காக.

ஆறுதல் வார்த்தைகளில் அன்று இரவு கழிகிறது. லக்ஷ்மிநாராயணன் அலுவலகத்திற்கு விடுமுறை. சமையலறையில் வெங்கலக் கடையில் புகுந்த யானை காரியம் ஆற்றுகிற அவன் செயல் நேர்த்தியைக் கவனித்த விஜயலக்ஷ்மி மிகவும் வற்புறுத்தியதின் பேரில் கே.கே. நகருக்குத் தகவல் சொல்லப் புறப்படுகிறான். பெரிய மாமனார் வீட்டில் சூடிதார் பெண் கதவு திறக்கிறாள்.

''விஜயலக்ஷ்மியின் பெற்றோர் காலையிலேயே புறப்பட்டு திருச்சி போயாயிற்று. ஒரு நிமிஷம், பாட்டி இருக்கிறாள். அவள் ஏதேனும் உபாயம் வைத்திருக்கக் கூடும்!''

பிரஸ்தாபிக்கப்பட்ட பாட்டி இருக்கிற அறைக்கு லக்ஷ்மிநாராயணன் அழைத்துச் செல்லப்படுகிறான். அவன் சொல்லுகிறதைக் காதருகில் கைவைத்துக் கேட்டு விட்டு பாட்டி கணீர்க் குரலில் சொல்லுகிறாள்.

''பஸ், டிரெய்னெல்லாம் முடியலை.

ம.வே.சிவகுமார்




பங்கார்ன் கனவுகள்

என்னை ஓர் ஆட்டோ விலே கூட்டிண்டு போனா முடிஞ்ச வரைக்கும் ஒத்தா சையாயிருப்பேன்.''

வில்லிவாக்கம் வீடு. செம்மண் மேடு ஏறி ஆட்டோ நிற்கிறது. இறங்கியதும் தடியை ஊன்றிய பாட்டி, சூழலில் கேமிரா திருப்புகிறாள். பரவாயில்லை, பேத்திக்கு வாய்த்த இடம் நல்ல இடம் தான். மெல்ல அடியெடுத்துக் கையில் பத்து நாள் தங்குகிற உத்தேச மூட்டையுடன் வாயிற்படிக்கு அவள் ஆடி அசைந்து வந்து சேர்ந்த வேகத் தைப் பார்க்கிற யாருக்கும் அவள் செய்யக் கூடிய உதவிகள் பற்றிச் சந்தேகம் வரும். ஆனால் விஜயலக்ஷ்மிக்குத் தன் பாட்டி யைப் பார்த்ததுமே பாதி உடம்பு சரியாகி விட்டது. சமையலறையின் அமைப்பு பிடி பட்டதும் பாட்டியின் அனுபவம் பேசத் தொடங்கியது.

வீட்டில் இருக்கிறதில் லக்ஷ்மிநாரா யணன் ஒரு கற்று பருத்து விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். அவன் ரொம் பவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாட்டி மத்தியானங்களில் தன் வாழ்க்கை அனு பவங்களை விவரிக்கத் தொடங்கினாள். எண்பது வருடங்களில் அவள் பார்த்த மனி தர்கள், மகான்கள், மஹரிஷிகள். போய் வந்த திருத்தலங்கள். பங்கேற்ற கும்ப மேளாக்கள். இளம் வயதில் அவளைக் காத லித்த ஆண்கள், பின்னாளில் அவர்கள் வகித்த உயர் பதவிகள். மிகக் குறுகிய காலத் தில் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள்



இந்தியாவிலேயே முதலாவதாக அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியா வசியப் பொருட்கள் தட்டுப்பாடு நேரத்திலும் தவறாமல் மக்களுக்குக் கிடைக்க ரேஷன் முறை அமலானது புதுவையில்தான். 1945 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஆட்சியில்.

- நாகசுந்தரம்.

கொடுத்து சொற்ப வயதில் இறந்து போன அவள் கணவர். நிர்க்கதியாய் நின்ற குடும்பம். மேற்கொண்ட வைராக்கியம். எதிர் வந்த சோதனைகள். நிகழ்கால வெற்றிகள் என்று கலகல வென்று கல்யாண மனுஷி போல் பாட்டி இருந்ததில் பத்து நாட்கள் போனது தெரியவில்லை. கொல்லைப் புறம். பித்தளை அண்டாவில் வெந்நீர் வைத்து வேப்பிலை மிதக்க பேத்தி விஜய லக்ஷ்மி தலையில் நீர் ஊற்றிய சந்தோஷத்தில், மறுநாள் மாலை கே.கே. நகருக்கு பாட்டி ஆட்டோவில் புறப்பட்டுப் போகிறாள்.

பீச் ஸ்டேஷன் அலுவலகம். பாலக்காடு அக்கவுண்டண்ட் வேறு கிளைக்கு மாற்றலாகிப் போய்விட்டார். நாடு நல்ல தலைவரை இழந்து விட்டது. கரண்ட் அக்கவுண்ட் வனஜா, டெஸ்பாட்சில் வேலை செய்து கொண்டிருக்கிறாள். உலகம் சன்னமான மாற்றங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. கேஷ் டிபார்ட்மெண்ட் கதவு திறந்து லக்ஷ்மிநாராயணன் நுழைகிறான். ஓர் இடைவெளிக்குப் பிறகு அவனைப் பார்க்கிற சந்தோஷத்தில் அவன் நண்பர்கள் 'ஹோ' என்று கூச்சலிடுகிறார்கள்.

''லக்ஷ்மிநாராயணன்...''

அக்கவுண்டண்ட் அழைக்கிறதாக பியூன் வந்து சொல்கிறான்.

''உட்காருங்க.''

புதிய அக்கவுண்டண்ட் எதிரே லக்ஷ்மி நாராயணன் உட்காருகிறான்.

''வாட் ஈஸ் திஸ்?''

''எது சார்?''

லக்ஷ்மிநாராயணன் திரும்பிப் பார்க்கிறான்.

''ப்ச். கேஷ் டிப்பார்ட்மெண்ட் சப்தம்.''

''ஓ அதுவா சார். பசங்க ரொம்ப நாள் கழிச்சு என்னைப் பார்த்த சந்தோஷத்துலே குஷியாயிட்டாங்க.''

''லுக் மிஸ்டர் லக்ஷ்மிநாராயணன். திஸ் ஈஸ் ஆபிஸ். நாம்பல்லாம் வேலை செய்ய வந்துருக்கோம். அதுக்கு ஒரு ஒழுங்கு வேணும்.''

''என்ன சார் பெரிய ஒழுங்கைக் கண்டுட்டீங்க? மேகத்தைப் பார்த்து மயில் ஆடவில்லையா? சந்திரனைக் கண்டு அல்லி அரும்புவதில்லையா? என்னமோ பசங்க ஒரு குஷியிலே கத்திட்டாங்கன்னா அதுக்கு இந்த மிரட்டு மிரட்டறீங்களே.''

''இது உங்களுக்குக் கடைசி வார்னிங். எனக்கு டிஸிப்ளின் முக்கியம். எனக்கு சப்போர்ட் பண்ண டாப் லெவல் வரைக்கும் ஆளுங்க இருக்கு.''

கட்டபொம்மன் நாற்காலி பின்னால் போகிறது. சவாலை ஏற்கிற தோரணையில் லக்ஷ்மிநாராயணன் எழுந்து கொள்கிறான். அவன் கடந்து வந்த பாதையிலே இது போல் எத்தனையோ நிர்வாகிகளைப் பார்த்தாயிற்று. அவனும் தயார்தான். அவன் கேவலம் குமாஸ்தாதானே என்கிற அழிவு காலச் சிந்தனை வேண்டாம். பின்னால் வலுவான தொழிற்சங்கம் இருக்கிறது. கடைசிச் சொட்டு இரத்தம் வரை சிந்த பல்லாயிரக் கணக்கான தோழர்கள் இருக்கிறார்கள். வேலை செய்யத்தான் வந்திருக்கிறோம். யாரும் மறுக்கப் போவதில்லை. அதற்காக அடிப்படை மனித குணங்களைக் கழற்றி விட முடியாது. போர்ச் சங்கம் முழங்கட்டும். போர் முரசு ஒலிக்கட்டும். வெற்றி வேல், வீரவேல். மானேஜர் அறையை நோக்கி நமது படைகள் புறப்படட்டும். போர், போர்.

தட தட என்று மொத்த அலுவலகமும் மானேஜர் அறையில் நுழைகிறது. புதிய நிர்வாகியின் சார்பாக அனைவரிடமும் மன்னிப்பு கேட்கிற தொனியில் சமாளித்துப் பேசி மானேஜர் கொதி நிலையைச் சமன் படுத்துகிறார். அதற்குத்தான் அவருக்கு அத்தனை சம்பளமும்.

''லக்ஷ்மிநாராயணன்...''

''உம்....''

''டெலிபோன்....''


டிப்பார்ட்மெண்ட் டெலிபோனில் ஸ்போர்ட்ஸ் கிளப் செயலாளர். ஒரு முக்கிய விஷயம். அவன் உடனடியாக ராஜாமணியைப் போய்ப் பார்க்க வேண்டும். அலுவலகத்திற்குப் பத்து நாட்களாய் வராததில் கல்கத்தா நாடகப் போட்டிக்கு அவன் பெயர் விடுபடுகிற நிலையில் இருக்கிறது. விஷயம் அவசரம். உடன் செயல்பட வேண்டியது அவசியம்.

''அய்யய்யோ. ராஜாமணி எங்கே?''

டெலிபோனில் லக்ஷ்மிநாராயணன் பதறுகிறான்.

''அடப் பாவி. உனக்கு அதுவே தெரியாதா? மாம்பலம் வெங்கடேசா கல்யாண மண்டபம். பனகல் பார்க் பக்கத்துலே. சீக்கிரம் போ. ஏழெட்டு நாளா அங்கதான் ரிகர்சல் நடக்கிறது.''

(தொடரும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க,உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருத்த முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடை க்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I

1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. ஸாமவேத ஸம்ஹிதா - க்ரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
3. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
4. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - க்ரந்தாக்ஷரம் - ரூ. 80/-

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III

1. மனாசே ச்லோக - ராமரக்ஷா ஸ்தோத்ர ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருதமூலம் - தமிழ் பதவுரை)
3. தர்மோதத்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 8 தரங்கங்கள் வரை, முதல் தரங்கம் நீங்கலாக - ரூ. 70/-)
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுஸ், ஸாம - ரூ. 25/-

V.P.P. யில் அனுப்பமுடியவில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. சமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும். ராஜா வேதகாவ்ய பாடசாலை, யாகசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001.

Surya Estate Finance

ACCEPTS FIXED DEPOSITS

SCHEME I – FIXED DEPOSITS

PERIOD (Years) Rate of Interest (per annum)	ONE	TWO	THREE
	21%	22%	23%

- ★ Amount of Deposit Rs. 1,000/- and above.
- ★ Interest payable : Monthly/Quarterly/ Half yearly/Yearly

SCHEME II – CUMULATIVE DEPOSITS

★ GROSS AMOUNT REPAYABLE ON MATURITY

PERIOD (Years)	FOR MINIMUM INVESTMENT OF Rs. 1,000/-
ONE	Rs. 1221
TWO	Rs. 1491
THREE	Rs. 1821

YOUR INVESTMENT BECOMES DOUBLE IN JUST 3½ YEARS

ATTRACTIVE GIFTS FOR DEPOSITS OF Rs. 5000/- AND ABOVE

SEF

For Further details, contact :

Surya Estate Finance
No. 72, Usman Road, II Floor,
T.Nagar, Madras – 600 017
Phone : 446258 & 446954

JOHN

அன்புள்ள அருண் கண்மணி,



உன்னோட ஃப்ரெண்ட் பிரகாஷ் கஷ்டமான கேள்வி தான் கேட்டிருக்கான். அவனுக்கும் பதில் தெரியலை போலிருக்கு - அதனால் தான் உன்னையே கண்டு பிடிக்கச் சொல்லிட்டான்!


விஷயம் இதுதான் :

நீ படத்துல வரைஞ்ச மாதிரி ராக்கெட் இருக்கும்போது அது அனுப்பக் கூடிய மின் காந்த அலைகளை, (electro magnetic waves) சந்திரனே தடுத்து நிறுத்திடறது! அவ்வளவு பெரிய திடப் பொருளைத் துளைச்சுக்கிட்டு அந்த அலைகளாலே போக முடியாது.

- இந்த பதிலைச் சொன்னால் பிரகாஷ் நிச்சயம் இன்னொரு கேள்வி கேட்பான் :

'பூமியும் சந்திரன் மாதிரி உருண்டையான திடப்பொருள்தானே. ஆனால் பூமியோட ஒரு பக்கத்தில் இருக்கும் அமெரிக்காவிலிருந்து இன்னொரு பக்கம் இருக்கும் இந்தியாவுக்கு ரேடியோ அலைகள் - அதுதான் மின்காந்த அலைகள் - அனுப்ப முடியறதே... அது எப்படி?

- பிரகாஷ் இப்படிக் கேட்டால் நீ இந்தப் படத்தைக் காட்டி, சுலபமா புரிய வைக்கலாம்.





அம்புக்குறி போட்டிருக்கிற பாதையில மின் காந்த அலைகள் போகும். சாடிலைட் உதவியோட இந்தியாவுக்கு வந்து சேரும். Geo synchronous satellites - அப்படிங்கற ஒரு வகை சாடிலைட்கள் இதுக்குப் பயன்படும். இந்த வகை சாடிலைட்கள் பூமிக்கு மேலே எந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்படுதோ அதே இடத்திலிருந்து கொண்டு பூமியோடு சேர்ந்து சுத்தும். அதாவது பூமி தன்னைத் தானே சுற்றி வர வேகத்திலேயே இந்த சாடிலைட்டுகள் பூமியைச் சுற்றி வருகின்றன.

இதைப் பற்றித் தெரிஞ்சுக்க இன்னும் நிறைய - ஆகாசம் அளவுக்கு விஷயம் இருக்கு! பெரியவனாக ஆக ஆக கொஞ்சம் கொஞ்சமாக நீயே படிச்சுத் தெரிஞ்சுக்கலாம்.

அப்போ அலமு அத்தைக்கு வர சந்தேகங்களை அருமை மரு  அருண்  மணி தீர்த்து வைப்பான் இல்லையா!?

உன் அன்புத் தங்  பப்லுவைத் திட்டாமல் இரு. அவனை நீதானே பார்த்துக்கணும்!

பிரியமுடன்,



சக்கரவர்த்தித் திருமகன்

14. அகலிகை

எல்லாரும் விசாலா நகரத்தில் ஒரு நாள் தங்கி அடுத்த நாள் விடியற்காலை மிதிலை நோக்கிச் சென்றார்கள்.

ஜனக ராஜனுடைய நகரத்துக்கு இன்னும் கொஞ்ச தூரம் இருக்க, மிக ரம்மியமான ஒரு ஆசிரமத்தைக் கண்டார்கள். ராமன், ''முனிவர் யாரும் இல்லாததாகக் காணப்படும் இந்தப் புராதன ஆசிரமம் யாருடையது? ஏன் இந்த அழகான ஆசிரமம் யாரும் வாசம் இல்லாமல் கிடக்கிறது?'' என்று வினவினான்.

முனிவர் சொன்னார் : ''இதை நீ தெரிந்து கொள்வது அவசியம். இந்த ஆசிரமம் ஒரு சாபத்துக்கு உட்பட்டிருக்கிறது. இது கௌதம மகா முனிவருடைய ஆசிரமம். முன்னாள் அவர் இங்கே இருந்து வந்தார்.

''நீண்ட காலம் அவரும் அவர் மனைவி அகலிகையும் இங்கே இருந்து வந்தார்கள். இடையூறின்றி அவர்களுடைய தவமும் கழிந்தது. ஒருநாள் இந்திரன், சமயம் பார்த்து, ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில் கௌதமருடைய உருவத்தையும் முனி வேஷத்தையும் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்தான். அகலிகையின் உலகப் பிரசித்தமான அழகை நினைத்து அவளையடையும் கெட்ட எண்ணத்துடன் வந்தான். இவ்வாறு திருட்டுத்தனமாக வந்த தேவராஜன் அகல்யா தேவியைப் பார்த்து, 'அழகியே! எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப் பொருத்தம் பார்க்கலாகாது. நாம் கூடுவோம்' என்று முனிவர் சொல்லுவது போல் சொன்னான்.

''ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். இவன் தன் புருஷன் அல்ல, இந்திரன் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆயினும் தேவராஜனே தன்னைத் தேடி வந்தான் என்று தன் அழகைப் பற்றிக் கர்வப்பட்டு மனநிலையிழந்து விட்டாள். தேவராஜனுடைய விருப்பத்துக்குடன்பட்டு விட்டாள்.

''பிறகு, 'தேவராஜனே! சீக்கிரம் புறப்பட்டுப் போ. பெரும் அபாயத்தினின்று எப்படியாவது காப்பாற்றிக் கொள்' என்று எச்சரித்தாள். இந்திரனும், 'உனக்கு நன்றி!' என்று சொல்லி விட்டு வேகமாகத் திரும்பிப் போனான்.

''வெளியில் சென்றிருந்த கௌதமர் ஸ்நான ஜபங்கள் முடித்துக் கொண்டு ஆசிரமத்துக்கு வந்து கொண்டிருந்தார். தேவ தானவர்களும் பயப்படும்படியான தபோபலம் அடைந்த முனிவர், ஸ்நானம் செய்த ஈரத் துணியோடு முகத்தில் அக்னி பகவானைப் போல் காந்தி ஜொலிக்க, அன்று ஓமத்துக்கு வேண்டிய தர்ப்பையும் ஸமித்துகளும் கையில் எடுத்துக் கொண்டு வந்தார். அவரைக் கண்டதும் அதுவரையில் மிக தைரியமாக இருந்த இந்திரன் மிக நடுங்கினான். முகம் வாடி அவர் எதிரில் வணங்கி நின்றான். 'மூடனே! என் வேஷத்தைத் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்து தகாததைச் செய்தாய்! நீ நபும்சகனாய்ப் போவாய்!' என்று கோபம் மேலிட்டுச் சொன்னார்.

''சினங் கொண்ட முனிவர் இவ்வாறு சொன்ன அக்கணமே இந்திரன் தன் ஆண்மையை இழந்தான். தேவர்கள் பரிதபித்தார்கள்.

ராஜாஜி

"முனிவர் தம் மனைவிக்கும் பிராயச்சித்தம் விதித்தார். 'அகலிகையே! நீ இங்கே நீண்ட காலம் காற்றே உணவாக ஏதொரு ஆகாரமுமின்றிச் சாம்பல் மேல் படுத்து யார் கண்ணுக்கும் தென்படாமல் மறைந்து வசிப்பாயாக. பல காலம் கழித்து இவ்விடம் தசரதன் மகன் ஒரு நாள் வருவான். அந்த வீரன் இந்த ஆசிரமத்தில் கால் வைக்கும் போது உன் பாபம் நீங்கும். நீ அவனை அதிதியாக வரவேற்று உபசரிப்பாய். அப்போது உன்னுடைய இயற்கை குணத்தையும் காந்தியையும் மறுபடி அடைந்து என்னுடன் வாழ்வாய்.'

இவ்வாறு சொல்லி விட்டு கௌதமர் நெறி தவறிய மனைவியை விட்டு விலகி, இமயமலை சென்று விட்டார். அங்கே தவமிருக்கிறார்.

"ஆசிரமத்திற்குள் நாம் செல்வோம். திக்கற்ற இந்த அகலிகைக்கு முனிவர் சொல்லியபடி நீ விமோசனம் தருவாய்" என்றார் விசுவாமித்திர முனிவர்.

அவ்வாறே ஆசிரமத்திற்குள் சென்றனர். ராமன் உள்ளே கால் வைத்ததும் அகலிகையின் பாவம் தீர்ந்தது. பாவம் தீர்ந்து காந்தியுடன் விளங்கிய அகலிகையைக் கண்டான் ராமன். அகலிகை உலகத்திலுள்ள எல்லா ஸ்திரீகளுடைய அழகையும் ஒன்று சேர்த்து பிரம்மாவால் ஆக்கப்பட்ட தனி அழகைப் பெற்றவள். இலைகளிலும் கொடிகளிலும் மறைந்து யாருக்கும் தென்படாமல் பல



லாண்டுகள் விரதம் காத்து வந்த அவள் அன்று பனியால் மூடப்பட்ட சந்திரனைப் போலும் புகையால் மறைக்கப்பட்ட அக்கினி ஜ்வாலையைப் போலும் அசையும் ஜலத்தில் காணப்படும் சூரிய பிம்பம் போலும் ராமன் ஆசிரமத்திற்குள் சென்றதும் காணப் பட்டாள்.

ராமனும் லக்ஷ்மணனும் அவளுடைய பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தார்கள். நெடுங்காலம் காத்திருந்த அகலிகை தன்னுடைய விமோசன காலம் வந்து விட்டதென்று மகிழ்ந்து சக்கரவர்த்தித் திருமகனுக்கு அர்க்கியம் பாத்தியம் முதலியன தந்து உபசாரம் செய்தாள். ராமனும் அங்கீகரித்தான். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்ய அவளுடைய கொடிய பாவம் தீர்ந்து, தேவகன்னி போல் பிரகாசித்தாள். கௌதமரும் அச்சமயம் அங்கே வந்து சேர்ந்தார்.

இது வால்மீகி ராமாயணத்தில் உள்ள அகலிகைக் கதை. மற்ற புராணங்களிலும் கதைகளிலும் சில விஷயங்கள் பேதப்பட்டு வழங்கி வருகின்றன. அதனால் குழப்பம் வேண்டியதில்லை.

இவ்விடத்தில் கொஞ்சம் நின்று ராமாயணம், பாரதம் முதலிய புராணங்களைப் படிக்கும் இக் காலத்தவர்களுக்குப் பொதுவாகச் சில வார்த்தைகள்.

புராணங்களில் தேவர்களும் ராக்ஷசர்களும் அடிக்கடி வருவார்கள். ராக்ஷசர்கள் என்பவர்கள் அதருமத்துக்குக் கொஞ்சமும் பயப்படாத துஷ்டர்கள் குலம். சர்வசாதாரணமாகத் தீய காரியங்களைச் செய்வார்கள்.

இரக்கமென்(று) ஒருபொருள்
இலாத நெஞ்சினர்
அரக்கர்என்று உளர்பலர்
அறத்தின் நீங்கினார்

என்று கம்பர் விளக்கியிருக்கும் கூட்டம். அசுரர்களும் ராக்ஷசர்களைப் போன்றவர்களே.

ராக்ஷசர்களிலுங் கூட ஒரு சிலர் அறிவாளிகளும் நல்லவர்களும் இருந்தார்கள். எந்த நல்ல குலத்திலும் சில தீயவர்கள் உண்டாவார்கள். அப்படியே எந்தக் கெட்ட குலத்திலும் சில சமயம் நல்லவர்களும் இருப்பதுண்டு. ஆனால் மொத்தத்தில் ராக்ஷசர்களும் அசுரர்களும் கம்பர் சொல்லியிருக்கிறபடி தீய கருமங்களிலேயே ஈடுபட்டுச் சந்தோஷப்பட்ட கூட்டம். அவர்களைத் தமிழர்கள் என்றும் தம் முன்னோர்கள் என்றும் சிலர் இக்காலத்தில் அறிவீனமாக எண்ணியும் பேசியும் வருவது பரிதாபம். எந்தத் தமிழ் பழைய நூலிலாவது சரித்திரத்திலாவது தனிப் பாட்டிலாவது கிராமப் பாட்டிலாவது இப்படிச் சொன்னதில்லை. தமிழர்களுக்கு, ''நீங்கள்தான் புராணத்தில் அரக்கர் என்று சொல்லப் பட்டவர்கள்'' என்கிற புதுப்பட்டம் அளிப்பதற்குப் பழைய தமிழ் நூல்களில் ஆதாரம் எங்கும் இல்லை.

தேவர்கள் என்கிற கூட்டம் சாதாரணமாகத் தருமத்துக்கு அனுகூல சுபாவம் கொண்ட கூட்டம். ராக்ஷசர்களை ஒழிப்பதே தேவர்களுடைய வேலையாக இருந்தது. இந்தக் காரியத்தில் புராணங்களின்படி சிலசமயம் தருமத்துக்கு விரோதமான முறைகளிலும் தேவர்கள் இறங்குவதுண்டு. இதற்குக் காரணம் ராக்ஷசர்கள் தவம் செய்து பெற்ற வரங்களேயாகும். தவம் செய்து பெற்று விட்ட வரங்களின் பலத்தினால் உலகத்தைத் துன்புறுத்தும் அசுரர்களைத் தேவர்களால் எதிர்க்க முடியாமல் போகும். அச் சமயங்களில் தேவர்களும் ஏதோ வழி தேடி முறை தவறியும் நடக்க வேண்டியதாகும். ஆனால் மொத்தத்தில் தேவர்கள் நல்ல சுபாவம் கொண்டவர்கள். அவர்களிலும் சிலர் தீய காரியங்களைச் செய்து அதனால் கஷ்டமும் படுவார்கள். அப்படிச் செய்த அதருமங்களின் பலனைத் தேவர்களும் அனுபவிப்பார்கள். தேவர்களாயிற்றே என்று அவர்களுக்கு வேறு நியதியில்லை. கரும விதிக்கு இவர்களும் உட்பட்டவர்களேயாவர்.

தேவர்கள் மொத்தத்தில் நல்வழியில் நிற்பவர்களானபடியால் அவர்களில் யாரேனும் பிழை செய்தால், அந்தப் பிழை இப்போது படிக்கும் போது நம் கருத்தில் பெரும் பிழையாகத் தோன்றும். இது இயற்கை. வெள்ளைத் துணியில் பட்ட கறையானது கண்ணைக் குத்துவது போல்.

எப்போதுமே தீய காரியங்களில் ஈடுபட்டிருக்கும் ராக்ஷசர்களுடைய பிழைகள் படிக்கும் போது நமக்கு அவ்வளவு பெரிதாகக் காணப்படாது - கருப்புத் துணியில் பட்ட அழுக்கைப் போல் மறைந்து நிற்கும்.

யோக்கியர்கள் நல்ல வழியிலிருந்து

அடுத்த இதழில்....

●● மனம் ஒன்றுபட மதம் தடையில்லை!

- கவர் ஸ்டோரி

வழுவினால் அது நம்மை மிகவும் புண்படுத்துகிறது. எப்போதுமே தீய எண்ணமும் துஷ்ட காரியமுமாக இருப்பவர்களை ஐயோ பாவம் என்று விட்டுவிட்டு, தரும சங்கடத்தில் சிக்கிக் கொண்டு ஏதேனும் பிழை செய்கிறவர்களை அதிகக் கடுமையாகக் கண்டித்து விமர்சனம் செய்வதும் பேசுவதும் இயற்கை. ஆனால் இது நியாயமாகாது.

புராண கர்த்தாக்களே தேவர்களை அவ்வப்போது அநீதியிலும் பாபத்திலும் சிக்கிக் கொள்ளச் செய்திருப்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதனுள் அடங்கி நிற்கும் பாடத்தைக் கற்க வேண்டும். புராண கர்த்தாக்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு இந்திரன் முதலிய தேவர்களைச் சில சமயம் மகா பயங்கர பாபங்களைச் செய்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்? தரும சங்கடங்களையும் சிக்கல்களையும் தாமே ஏன் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்? இதையெல்லாம் நாம் சாவதானமாக ஆராய வேண்டும். இவற்றின் நோக்கம் மக்களுக்கு விவேகமும் அடக்கமும் பயபக்தியும் உண்டாக்கித் தரவே என்பது வெளிப்படை. இல்லாவிடில் முனிவர்கள் தாமாகவே தங்கள் கருத்துக்கும் நோக்கத்துக்கும் முற்றிலும் விரோதமாக நல்லவர்களுக்குச் சங்கடங்களை உண்டாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.

இத்தகைய தரும சங்கட நிகழ்ச்சிகளை வைத்துச் சிலர் மூர்க்கமாகத் தவறான முடிவுகளைக் கட்டிக் கொண்டு சந்தோஷப்படுகிறார்கள். 'ராவணன் மிக நல்லவன்; அவனுடைய காரியங்களைப் பற்றி வால்மீகி இல்லாததைச் சொல்லி அவதூறு செய்திருக்கிறார். ராமன் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் அநீதி செய்தான் அல்லவா? சீதை ஒரு சமயம் பொய்யே சொல்லி விட்டாள் அல்லவா?' என்று இவ்வாறு வாதம் செய்து பேசுவதைக் கேட்டிருக்கிறோம்.

எதை எப்படியேனும் எழுதும் அவகாசம் பெற்றிருந்த வால்மீகி முனிவர் ஏன் இவ்வாறு தம் கருத்துக்கே விரோதமாகவும் தம் கதாநாயகனுக்கே இகழ்தரும்படியானதுமான நிகழ்ச்சிகளைக் கற்பித்துக் கொண்டு அலைய வேண்டும்? முற்றிலும் வால்மீகியே கொடுத்த பாத்திரம் அல்லவா ராமனும் ராவணனும்? ராவணனைப் பற்றி வேறு கதையோ சரித்திரமோ இருந்ததா? இல்லை. வால்மீகிக்கும் முன்னதாக யாரேனும் ஒரு புராணமோ பாட்டோ சரித்திரமோ அல்லது கல் சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறு விதமாக எழுதி வைத்திருப்பதைக் காண்கிறோமா? இல்லை. அப்படி ஏதேனுமிருந்திருக்கும் பட்சத்தில் வால்மீகி முனிவரானவர் ராமனுக்கும் சீதைக்கும் தேவர்களுக்கும் பட்சபாதமாக மாற்றியும், விஷயங்களை மூடியும் மறைத்தும் சொல்லி, சமாதானங்களைக் காட்டி நம்மை ஏமாற்றுகிறார் என்று ஒருவேளை வாதாடலாம்.

ராம கதையைப் பற்றிய விஷயங்களைப் பெற்றது வால்மீகி நூல் வழியேதான்; வேறு எங்கிருந்தும் அல்ல. தரும சங்கடங்களைக் காட்டுவதும் அந்நூலே. பிழைகளாகத் தோன்றும் நிகழ்ச்சிகளும் அந்நூலிலேதான் கண்டோம். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று, மூளையில் குழப்பமாவது அருவையாவது இன்றி, ஆழ்ந்து ஆராய்ந்தால் அவற்றிலெல்லாம் சாதாரண மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களின் சித்திரத்தைக் காண்போம். நம்மால் பின்பற்றக்கூடிய நல்ல உபதேசத்தை அவற்றினின்று பெறலாம். நாம் உணர்ந்து நடக்கக்கூடிய நெறியைக் கண்டு பயன் அடையலாம்.

எவ்வளவு பெரிய பாபத்தைச் செய்து விட்டாலும், பச்சாத்தாபப்பட்டு, தண்டனையைப் பொறுத்துத் தவமிருந்தால் விடுதலை அடையலாம் என்பது அகலிகை நிகழ்ச்சியின் பாடம். பாபம் செய்த மற்றவர்களை இகழாமல் அவரவர் தந்தம் உள்ளங்களிலுண்டாகும் தோஷங்களை அகற்றுவதில் முயற்சி செலுத்த வேண்டும்; எவ்வளவு சுத்தமான நிலையிலிருந்தாலும் சதா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது பாடம்.

(தொடரும்)

சங்கீதா வெளியீடுகள்..

இசை கேசட்டுகள்

கர்நாடக சங்கீதம் — வாய்ப்பாட்டு

வாய்ப்பாட்டு – Dr. M. பாலமுரளி கிருஷ்ணா – நின்னு ஜூசி – ஆனந்த நடனு – மகாலக்ஷ்மி – மீனாக்ஷி – 6ECDB 477. **அருணாசலக் கவிராயரின் ராம நாடகக்கீர்த்தனைகள்** – மதுரை T.N.சேஷகோபாலன் – அண்டர் தம் துயரம் – அவதாரம் – பரப்ரம்ம ஸ்வரூபமே – ராமனை தருவாயே – யாரோ இவர் யாரோ – ஆர் என்றென்றுமிலே – ராமசாமி கொண்ட கோலம் – சோபனம் – ராமனுக்கு மன்னர் முடி – எப்படி மனம் இங்கே இரும் – அறிவார் ஆர் – இருந்தானே ராமசந்திரன் – காண வேண்டும். 6 ECDB 468. **வர்ணங்கள்** – **பம்பாய் சகோதரிகள்** – சரசீருஹாபா – ஜலஜாக்ஷா – சாமிதயா – கனகாங்கி – இந்த மோடி – சரகதா – சலமேலா – வனஜாக்ஷி – நின்னே கோரி – சாமி நின்னே – வனஜாக்ஷா – ஸ்ரீ ராஜ மாதங்கி – சாமி நின்னே. 6 ECDB 453. **ரக்ஷமாம்** – T.V. கோபால்கிருஷ்ணன் – ரக்ஷமாம் சரணாகதம் – வாடேரா தெய்வமு – நடமாடி திரிந்த – சரஸ்வதி – மாயம்மா – வந்தே சதா. 6 ECDB 484. **தியாகராஜர் கீர்த்தனைகள்** – **பிரியா சகோதரிகள்** – சீதம்மா – மூந்து வெனுக – ஞானமோசக ராதா – சீரசாகரா – சதாமதிம் – எந்துகோ நீ மனசு – இந்த சௌக்யமனி 6 ECDB 489. **புரந்தர தாசரின் கீர்த்தனைகள்** – Dr.M. பாலமுரளிகிருஷ்ணா – ஹரிவதன – வரமனகே – தானபேறு – யாதவ நீபா – ஆரு பதுகிதரய்யா 6ECDB 451. **ஸ்வாதி திருநாளின் ஸ்ரீ பத்மநாப கீர்த்தனைகள்** – Dr.M. பாலமுரளி கிருஷ்ணா – பாஹி சரசஜநாப – வசந்தரா – தேவம்மவி – சர சீருஹநாபா – பரிபாலய – கமலநாபா. 6 ECDB 482. **ஜெயதேவா அஷ்டபதிகள்** – Dr.M. பாலமுரளி கிருஷ்ணா – ஜெயஜெகதீச ஹரே – நாதஹரே – சாவிரஹே தவதீனா – பிரியே சாருசீலே – காபிமாதுரி 4 ECDB 7773 **பத்ராத்ரி ராமதாஸ் சங்கீர்த்தனைகள்** – Dr.M. பாலமுரளி கிருஷ்ணா – தீன தயாளோ – கருட கமன ராரா – ஹரி ஹரி ராம – ஸ்ரீ ராம நீ நாம – நீ சங்கல்பம் – ஸ்ரீ ராம நாமம் – எந்தோ மகானுபாவுலு – ராம தெய்வசிகாமணி – பஜரே. 4 ECDB 7771. **வாய்ப்பாட்டு** – **மைசூர் நாகமணி ஸ்ரீநாத்** – மருகேலரா – நாதுபை – நன்னுப்ரோவா – சுஜராஜா – கண்டு கண்டு. 6 ECDB 469. **ஜுகல் பந்தி** – **ஷியாமளா G.பாவே & மைசூர் நாகமணி ஸ்ரீநாத்**. 6ECDB 472.

கர்நாடக வாத்திய இசை

நாதஸ்வரம் – **பத்மஸ்ரீ Dr. நாமகிரிபேட்டை K.கிருஷ்ணன்** – மல்லாரி – தாமதமேன் ஸ்வாமி – நகுமோமு – மரிவேரே – சக்கனி ராஜா – சாமகானலோலே – வள்ளி கணவன் பேரை. 6 ECDB 479. **மாண்டோலின்** – **U.ஸ்ரீநிவாஸ்** – ஸ்ரீ மகாகணபதிம் – சரசமுகி – தெலியலேரு – நின்னுவினா – சத்தம் தலை – திருப்புகழ். 6ECDB 463. **புல்லாங்குழல்** – **சிக்கில் சகோதரிகள்** – வர்ணம் – தத்வமறிய – மரகதமணி – ஜலந்தரா – ஸ்ரீவல்லி. 6ECDB 475. **லயசுதா – மிருதங்கம் (Solo)** – **T.V.கோபால கிருஷ்ணன்** – மிருதங்கம் சோலோ – மிருதங்கம் & கடம். 6ECDB 486. **புல்லாங்குழல்** – **T.R. ஸ்ரீநாத்** – ஸ்ரீ மகாகணபதிம் – பிராணவாலிசி – எவரனி – ரகுவம்ச சுதா – பாரோ கிருஷ்ணய்யா – சின்னஞ்சிறு கிளியே – கோவர்த்தன கிரிதரா – தில்லானா. 6 ECDB 495.

நடன இசை

தில்லானா – **பம்பாய சகோதரிகள்** – பராஸ் – சிந்து பைரவி – யதுகுல காம்போதி – தனஸ்ரீ – பிலஹரி – ஹம்ச நந்தி – கல்யாணி – கானடா காபி – பேஹாக் – கேதாரம். 6 ECDB 474. **நாட்டிய மஞ்சரி** – **உஷா வசந்த் குமார், ஷியாமளா வெங்கடேஸ்வரன், கீதா சுந்தரேசன், சுதா ராஜா & T.V. சுந்தரவல்லி** – **ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்** – அலாரிப்பு – விநாயகர் கவுத்துவம் – நடேசர் கவுத்துவம் – சொக்கநாதர் கவுத்துவம் – ஜதிஸ்வரம் – முருகன் கவுத்துவம் – சப்தம் – தாருவர்ணம். 6 ECDB 483. **நாட்டிய கீதாமிருதம்** – **ஸ்வாமி மலை S.K. ராஜரத்தினம்** – கஜவதன – – வர்ணம் – பதரி வருகுது – ஆசை முகம் – சின்னஞ்சிறு – தில்லானா – 6 ECDB 488.

எமது அங்கீகாரம் பெற்ற எல்லா டீலர்களிடமும் கிடைக்கும்

BINLOOP DUPLICATION WITH DOLBY HXPRO

தயாரித்து வெளியிடுபவர்கள்

தி மாஸ்டர் ரிக்கார்டிங் கம்பெனி

த.பெ.எண்: 5348, வடபழனி, சென்னை-600026 ☎ 420801/420802



✱ ஆயி மண்டபம்

ஆடல் மகளுக்கு ஓர் அழகிய மண்டபம்!

புதுவை நகரத்தின் சின்னம் போல் விளங்கும் ஆயி மண்டபம் அமைக்கப்பட்ட கதை சுவையானது. விஜயநகரப் பேரரசரான கிருஷ்ண தேவராயர் அவ்வப்போது தமது ஆளுகைக்கு உட்பட்டிருந்த தென்னாட்டுப் பகுதிகளுக்கும் விஜயம் செய்வாராம். அப்படியொரு முறை புதுவைப் பகுதிக்கு வந்திருந்த போது, முத்திரைப்பாளையம் என்ற ஊர் வழியாகத் தமது பரிவாரங்களுடன் சென்று கொண்டிருந்தார்.

அப்போது மாலை மயங்கிய அந்தி நேரம். வீடுகளிலெல்லாம் விளக்கேற்றப்பட்டிருந்தன. மன்னரின் விஜயம் என்பதால் வீதிகளில் கூடுதல் பிரகாசம். மன்னர் ரசித்த படியே சென்று கொண்டிருந்தபோது, வழியில் ஒரு வீடு மட்டும் தனி கலை நயத்தோடும், பிரகாசத்தோடும் காட்சியளிப்பதைப் பார்த்தார். அதன் கதவுகள் அகலத் திறந்து வைக்கப்பட்டிருந்தன. உள்ளிருந்து ஒரு சுகமான வாசனை பிறந்து வர, மன்னர் அது ஏதோ ஆண்டவன் வாழும் ஆலயம் போலும் என்று கருதிக் கைகூப்பித் தொழுது நின்றார். மன்னரைப் பின்பற்றிப் பரிவாரங்களும் தொழுதனர்.

இச்சமயத்தில் அவ்வழியே வந்த ஒருவன், மன்னரின் நிலை கண்டு ஆச்சரியப்பட்டு, "மன்னர் மன்னவ! இது தாங்கள் கருதுவதுபோல் ஆண்டவன் வாழும் ஆலயம் அல்ல; அனுதினமும் ஆண்களை மயக்குவதையே தொழிலாகக் கொண்டு வாழும் ஆடல் மகள் ஆயி என்பவள் வீடுதான் இது!" என்று சொன்னான்.

மன்னருக்கு அவமானமாகப் போய் விட்டது. ஆண்டவனை மட்டுமே தொழுதறிந்த தமது கைகள் கேவலம் ஒரு தாசி வீட்டையும் தொழ நேர்ந்து விட்டதே என்கிற கோபத்தில், "உடனே இந்த வீட்டை இடித்துத் தரை மட்டமாக்கிவிட்டு இங்கு ஒரு குளமும் கிணறும் அமைத்துப் பொது மக்களுக்குப் பயன்படுமாறு செய்யுங்கள்!" என்று தமது பரிவாரங்களுக்கு உத்தரவிட்டார்.

மன்னரின் உத்தரவு வீட்டுக்குள் இருந்த ஆயிக்கு எட்ட, உடனடியாக அவள் ஓடி வந்து மன்னரைப் பணிந்து, மன்னிப்புக் கோரினாள். தன் மீது தவறேதுமில்லையென்று எடுத்துரைத்தாள். ஆயினும் மன்னரின் கோபம் தணியவில்லை. எனவே, மன்னரின் உத்தரவுப்படி தானே தனது வீட்டை இடித்து விட்டுக் குளமும் கிணறும் அமைத்துத் தருவதற்காவது மாமன்னர் கருணை காட்ட வேண்டுமென்று மன்றாடினாள். இதற்குள் மன்னரின் கோபமும் சற்றுத் தணியவே, ஆயி தனது விருப்பப்படியே செய்ய இசைவு தந்தார். அப்படி அவள் வெட்டிய குளமே ஆயிகுளம் என்று அழைக்கப்படலாயிற்று.

பிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியன் காலத்தில்தான் ஆயிகுளத்திலிருந்து புதுச்சேரிக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட்டதென்பதால் ஆயி கதையைக் கேட்ட மூன்றாம் நெப்போலியனும் அப்போது புதுச்சேரியின் ஆளுனராக இருந்த போன்தான் என்பருக்கு இந்த ஆயி மண்டபத்தை அமைக்க அனுமதி வழங்கினார்.

இதுதான் ஆயிமண்டபம் கட்டப்பட்டதற்குக் கூறப்படும் வரலாறு. ஆயினும், "இது செவிவழிச் செய்திதானே தவிர, உண்மை என்று உறுதியாகச் சொல்வதற்கு இதுவரை சரித்திரச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை!" என்கிறார் புதுவை அருங்காட்சியகத்தின் காப்பாளரான ராஜாராம்.

எப்படியானாலும் கதை சுவையாகத்தான் இருக்கிறது. மன்னர் தவறு செய்து விட்டாலும் தண்டனை என்னவோ மக்களுக்குத்தான் என்பதையும் அற்புதமாகப் புரிய வைக்கிறது!

– சார்ல்ஸ்

வட்டமேஜை

இந்த வாரம் பொக்கிஷம்!

◆ கல்கி அட்டையில் நடிகர் திலகம். உள்ளே பெரியத் தேவர் பேட்டி. என்னைப் போன்ற சிவாஜி ரசிகர்களைப் பொருத்தவரை இந்த வாரக் கல்கி ஒரு பொக்கிஷம்.

திருச்சி - 2, சிவாஜி ப்ரியா.

அசத்திய பேட்டி!

◆ பெரியத் தேவரின் 'நான் எங்கே நடித் தேன்' என்ற உணர்ச்சி பூர்வமான விளக்கம் எங்களை அசத்தி விட்டது! சிவாஜியிடம் அருமையாகப் பேட்டி கண்ட 'கல்கி'க்கு எங்கள் பாராட்டுகள்!

சி.என். கிராமம், வி. ரஜினி பாலாஜி.

தன்னடக்கத்திலும் சிகரம்!

சூப்பர் கிண்டல்!

◆ "இன்னிக்கு நடிக்க வரும் பெண்கள் சில பேர்கிட்டே, 'பொம்பளை மாதிரி நடிம்மா'ன்னு சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது" என்ற சிவாஜியின் கிண்டல் சூப்பரோ சூப்பர்!

மூடிகண்டநல்லூர், க. ராஜேந்திரன்.

தன்னடக்கத்திலும் சிகரம்!

◆ "நான் எங்கே நடித்தேன்; கம்மாவந்து போனேன்!" என்று நடிகர் திலகம் சொன்னது அவரது தன்னடக்கத்தைப் புலப்படுத்தியது. சின்னத் திருத்தம்: காக்கா ராதா கிருஷ்ணன், படத்தில் சிவாஜிக்கு அண்ணன் அல்ல; தம்பி.

விருத்தாசலம், பணையூர் ராஜன்.

எல்லாமே அப்படியல்ல!

◆ எல்லா இண்டர்வியூவும் கண்துடைப் பல்ல என்பதை மிக நன்றாக எடுத்துரைத் திருந்த நடாசி அவர்களுக்கு என் இதயம் கனிந்த பாராட்டுகள்.

அருகந்தம்பூண்டி, மலை அரசன்.

சிரித்துச் சிரித்து...

◆ இந்த வாரம் இடம் பெற்ற அனைத்து ஜோக்குகளும் ரசித்துச் சிரிக்கும்படி இருந்தன. அதுவும் அந்த கடைசி ஜோக்...யப்பா! சிரிப்பை அடக்க முடியவில்லை. பாராட்டுகள்!

தூத்துக்குடி - 2, எஸ். ராமசுப்பிரமணியன்.

தன்னம்பிக்கை ஊட்டியது!

◆ நறுக்கென்ற தலையங்கம். அதன் ஒவ்வொரு வார்த்தையும் முதல்வருக்கு மட்டுமல்ல; பெண்ணினத்திற்கே தன்னம் பிக்கை ஊட்டுபவை.

திருச்சி - 8, உ.ர. சங்கர்.

உறைக்கச் சொன்னீர்கள்!

◆ 'அற்ப விஷயங்களை ஒதுக்க ஒரு முதல் வருக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்; பேச்சில் பொருந்தன்மையும் கம்பீரமும் வேண் டும்' என்ற தலையங்க வரிகள் மூலம் முதல் வருக்கு நன்றாக உறைப்பது போல் சொன்னீர் கள். இனியாவது முதல்வர் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

திருச்சி - 17, தென்னூர் எம். யாதவன்.



நியாயமான வாதம்!

◆ டாக்டர்களின் அஜாக் கிரதை கேஸ்களை நீதி மன்றங் களுக்கு எடுத்துப் போகலாமே என்று கூறும் டாக்டர் கோவிந்த ராஜன், மேற்படி அஜாக்கிரதை கேஸ்களை கன்ஸ்யூமர் கோர்ட் டிற்கு கொண்டு செல்ல எதிர்ப் பது புரிய வில்லை. புஷ்ப வனத்தின் வாதம் நியாய மானதே.

மேட்டுப்பாளையம், பி.ஏ. வதூத்.

தொடரும் இலக்கியத் தரம்

◆ குடும்பம், பாசம், உறவுகள், கோபதாபங்கள் என்று பல்வேறுபட்ட குணநலன்களுடன், உயிரோட்டமான பல இலக்கியத் தரமான சிறு கதைகளைத் தொடர்ந்து தந்து வருகிறது கல்கி. அவற்றில் ஒன்றுதான் மதுமிதாவின் 'கோப முடிச்சுகள்'.

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

நல்லதொரு தலைப்பில் நாட்டு நடப்பு!

◆ 'கனவுக் குதிரைகள்' கவிதை படிக்கப் படிக்கக் கருத்தாழம் மிகுந்து கொண்டே சென் றது. நாட்டு நடப்பை நல்லதொரு தலைப்புக் கொடுத்து நயம்பட விளக்கி விட்டார் மு. மேத்தா.

தக்கோலம், அ. முஸ்தபா.

நீங்கள் கேட்டவை - தராசு

"திட்டமிட்ட தாக்குதல்" - சு.சுவாமி புகார் பற்றி?

✱ தலைவி புகழ்...





✱ தப்பான கேள்வி!



✱ மசூதிக்கு எதிர்ப்பு!



✱ நஷ்டமில்லை...



✱ மனம் புழுங்கி...



✱ பிறந்த நாள் எது?

● பி. கவின்முகில், காட்டுக்கானூர்.

? வரிவிலக்கு கொடுத்தும் 90 லட்சம் செலவில் தயாரான "நீங்க நல்லா இருக்கணும்" எங்கள் ஊரில் (வேலூர்) ஒன்பது நாட்கள் ஓடியுள்ளதே?

! பண நஷ்டம் ஜி.வி. ஃபிலிம்ஸுக்கு அல்ல; அரசுக்குத்தான்; அதாவது மக்களுக்குத்தான். அரசின் மது(விலக்கு)க் கொள்கை ஒயின் ஷாப் - பார்களில் அமோக வெற்றி பெற்று வரும் போது வியாபார ரீதியில் எடுக்கப்பட்டதுதான் என்றாலும் மது விலக்குப் பிரசாரப் படம் எப்படி வெற்றி பெறும்?

● ஆங்கரை ஆனந். திருச்சி.

? என்னங்கவே, நம்மவங்களை இனிமே கிட்டிப்புள் ஆட அனுப்ப வேண்டியது தான் போலிருக்கே?

! வே, நம்மவங்களுக்கு கிரிக்கெட்டில் மட்டும்தான் தோற்கத் தெரியுமா என்ன? கிட்டிப்புள் ஆட்டத்தையும் கோட்டை விட்டுத்தான் திரும்புவாங்க, எழுக்கு ஒண்ணு - ரெண்டு கணக்குல.

● நெல்லை. வி. சிவா. அரசரடி.

? ஹைதராபாத்தில் நடந்த மத்திய மீன் வள வாரியக் கூட்டத்தில் தமிழக அமைச்சர் டி. ஜெயக்குமார் புரட்சித் தலைவி புகழ் பாடியது பற்றி?

! 'புரட்சித் தலைவி என்பது ஒரு மீன் வகையா?' என்று அங்குள்ளவர் கேட்க, இவர் வழிந்த அசடில் ஹைதராபாத்தே மூழ்கித் தவித்ததாமே!

● கி. ராமதாஸ், சென்னை. ❐

? முன்பு கஜினி முகமது இந்துக் கோயில்களை இடித்ததற்கும் இப்போது "கரசேவகர்கள்" பாபர் மசூதியை இடித்ததற்கும் என்ன வேறுபாடு?

! பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. அன்று நடந்தது செல்வத்தைக் கொள்ளையடிப்பதற்காக, இன்று நடந்தது வோட்டுக் கொள்ளை நோக்கில்.

● கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? "ஒரு மசூதியைக் காக்க முடியாத ராணுவம் நாளை பாரத நாட்டை எப்படி காப்பாற்றப் போகிறது?" என்று கேட்கிறாரே கருணாநிதி?

! ராணுவம் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது, கூடாது. ராணுவம் உ.பி.க்கு அனுப்பப்பட்டதேயன்றி, பாபர் மசூதியைக் காக்க அழைக்கப்படவில்லை. அதற்குக் குறுக்கே நின்றது கல்யாண்சிங் அமைச்சரவை. அவ்வாறிருக்கக் கையாலாகாத ராணுவம் எனக் குறை கூறுவது அபாண்டம். கருணாநிதி, மத்திய, மாநில ஆட்சிகளைக் குறைகூறட்டும். ராணுவத்தை அல்ல.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? ஒரு மசூதி இந்தியாவில் இடிக்கப்பட்டதற்காக உலகின் பல்வேறு நாடுகளில் நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டுள்ளது எதைக் காட்டுகிறது?

! 'கம்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி.' என்ற பழமொழிக்கு ஏற்ப,



● தப்பே இல்லை!



● புகார் பற்றி...

அத்வானி அண்டு கம்பெனி முன்யோசனை இன்றியும் செருக்குடனும் நடந்து கொள்ள, அன்புச் சோலை துவேஷப் பாலையாக மாறி வருவதைத்தான்.

● கே. கோபிநாத், ஈரோடு.

? ஒரு அழகான பெண், கழுத்து நிறைய நகைகளோடு இரவில் தன்னந்தனியாகத் தைரியமாக நடக்கும் காலம் எப்போது வரும்?

! கழுத்து நிறைய நகைகள் என்ன, நள்ளிரவு என்ன? ஒரே ஒரு மாங்கல்யச் சரடுடன் பட்டப் பகலில் ஜேஜே என்றிருக்கும் மயிலாப்பூர் மாட வீதியில் கூட நடக்க முடியவில்லையே!

● எச். சுப்பிரமணியன், மதுரை.

? ஜோதி வெங்கடாசலத்தின் மறைவு குறித்து...?

! ராஜாஜியால் கண்டெடுக்கப்பட்டு, அவரது மந்திரி சபையில் மதுவிலக்கு அமைச்சராக அசாதாரணத் துணிச்சலுடன் வெற்றிகரமாகப் பணியாற்றியவர், இன்றைய மதுவிலக்கின் நிலை கண்டு மனம் புழுங்கிய படிதான் இறந்திருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வு, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றில் அவர் காட்டிய அக்கறை காமராஜரைக் கவர்ந்ததால், அடுத்து அவர் அமைச்சரவையிலும் இடம் பெற்றார் ஜோதி. சுகாதார அமைச்சராகப் பணியாற்றி, நான்கு நகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் உருவாக வழிவகுத்தார். பின்னர் கேரள ஆளுனர் பதவியும் அவரை வந்தடைந்தது. எல்லோருக்குமே என்றாவது ஒருநாள் உயிர்ச் சுடர் அணையத்தான் செய்கிறது. ஆயினும் திருமதி வெங்கடாசலம் போன்ற சாதனையாளர்களின் ஜோதி மறைவதில்லை.

● பா. நாராயணன், சென்னை - 40.

? "மூதறிஞர் ராஜாஜியின் பிறந்த நாளை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 8, 9, 10 தேதிகளில் கொண்டாடலாம். மூன்று தேதிகளுமே அவர் பிறந்த நாட்கள்தான்" என்று கூறப்படுவது பற்றி...?

! ஏழைக் குடும்பத்தில், குக்கிராமத்தில் பிறந்த ராஜகோபாலனுக்கு ஜாதகம் கணிக்கப்படவில்லை. பிறந்த நாள் கொண்டாடுவதில் அக்கறை காட்டாத ராஜாஜியும் அது பற்றி கவலைப்படவில்லை. அவரது சீடர்கள் பின்னாட்களில் அவர் பிறந்த நாளை உத்தேசமாக டிசம்பர் 8 என்று நிர்ணயித்துக் கொண்டாடி வந்தார்கள். அண்மைக் காலத்தில், அவர் மகள் நாமகிரி கொடுத்த ஒரு செவி வழிக் குறிப்பை வைத்து, அவரது பிறந்த நாள் டிசம்பர் 10, 1878 என்பதாக சதாசிவம் ஆய்ந்தறிந்து நிர்ணயித்தார். டிசம்பர் 10 என்பது சர்வதேச மனித உரிமைகள் தினம்! அவர் மறைந்ததோ கிறிஸ்துமஸ் தினம்! பிறந்த நாள் எதுவானால் என்ன? அம் மகானின் அறிவுரைகளின்படியும் வாழ்ந்து காட்டிய வகையிலும் நாம் வாழ்க்கை நடத்துகிறோமா என்பதுதான் முக்கியம். இந்த கிறிஸ்துமஸ் தினத்தில் கொஞ்சம் ஆத்ம பரிசோதனை செய்து கொள்வோமே!

● மா. பழனிச்சாமி, கோவை.

? சென்னை குடிநீர் வாரியம் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் அசுத்தம் நிறைந்ததாக உள்ளது குறித்து...?

! அதான் "காய்ச்சிக் குடியுங்கள்" என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்களே! சமையல் காஸ் விற்கிற விலை பற்றி அவர்களுக்கு என்ன கவலை! என்னமோ நுகர்வோர் பாதுகாப்பு இயக்கமாமே, இதற்கெல்லாம் ஒரு கேஸ் போடக் கூடாதோ?

● எம். தேன்மொழி, மேட்டுப்பாளையம்.

? சமீபத்தில் உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம்?

! அந்துலே மீது ஒரு தப்பும் இல்லையாமே! நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டதே!

● ரு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? அயோத்தியில் பாபர் மசூதியைத் திரும்பக் கட்டுவதற்கு சங்கராச்சாரியார் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறாரே?

! இங்குள்ள முஸ்லிம் லீக் தலைவர்கள், பாகிஸ்தானில் அயோத்தி சம்பவம் தொடர்பாக இடிக்கப்பட்ட ஹிந்து கோயில்களை பாக் அரசு திரும்பக் கட்டித் தர வேண்டும் என்று பெருந்தன்மையுடன் கூறியிருக்கிறார்களே, அந்த நல்லெண்ணத்தை நினைத்து ஆறுதல் அடைய வேண்டியதுதான்!

● நா. பாலசுப்பிரமணியன், சென்னை.

? "இட்டலிட்ட தாக்குதல்" - சு. சுவாமி புகார் பற்றி?

! நீதிமன்றத்திலேயே நல்லாட்சி இயக்கத்தினர் தாக்கப்படுவதும், ஜனதா தலைவர் அவர் வீட்டிலேயே அத்துமீறி நுழைந்தவர்களால் தாக்கப்படுவதும், ஆசிட் கேஸில் கைதாகி ஜாமீனில் இருந்த மூவர் துணிந்து தலைமறைவாவதும் பார்க்க, நல்லாட்சி என்ன, ஆட்சி என்ற ஒன்று இங்கு இருக்கிறதா என்ற ஐயப்பாடே தோன்றுகிறது!

☐ ரூ 25 பரிசு பெறுபவர் :
கி. ராமதாஸ்,
4/1, மேற்கு மாட வீதி,
அயன்புரம்,
சென்னை - 23.

நீங்கள் ''ஜீவன் சுரபி'' பாலிசியை எடுத்து உங்கள் குடும்பத்திற்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பை அளியுங்கள்



ஜீவன் சுரபி

அதிகரிக்கும் ஆயுள் பாதுகாப்புடன் குறுகிய கால இடைவெளிகளில் உங்களுக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

இது பல்வேறு பயன்களை அளிக்கும் ஒரு புதிய இன்ஷ்யூரன்ஸ் பாலிசி திட்டமாகும்.

- ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பை 50%லிருந்து 200% வரை உயர்த்துதல் (இது, ஆறு வருடங்கள் மற்றும் அதற்குமேல் எவ்வளவு காலம் வரை பாலிசி அமலில் இருந்ததைப் பொருத்ததாகும்).
- 15-வருட பாலிசிக்கு 12 வருடங்கள் கழிந்த பின்பு, 20-வருட பாலிசிக்கு 15 வருடங்கள் கழிந்த பின்பு மற்றும் 25-வருட பாலிசிக்கு 18 வருடங்கள் கழிந்த பின்பு யாதொரு ப்ரீமியம் தொகையை செலுத்த தேவையில்லை. இருப்பினும், இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பு பாலிசியின் முழுமையான காலம் வரை அமலில் இருக்கும்.
- பாலிசி தொகையைப் பெற நீங்கள் பாலிசி காலவரையின் இறுதி வரை காக்க வேண்டாம்.

கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட இடை வெளிகளில் தவணை முறையில் உங்களுக்கு வந்து சேரும்.

	பாலிசிதாரருக்கு கொடுக்கப்படும் இன்ஷ்யூர் செய்யப்பட்ட தொகையின் %				
பாலிசியின் காலவரை	4 வருட இறுதியில்	8 வருட இறுதியில்	12 வருட இறுதியில்	15 வருட இறுதியில்	18 வருட இறுதியில்
15 வருடங்கள்	30%	30%	40%	–	–
20 வருடங்கள்	25%	25%	25%	25%	–
25 வருடங்கள்	20%	20%	20%	20%	20%

உயிருடன் இருக்கையில் கொடுக்கப்பட்ட தொகைகள், பாலிசிதாரர் இறந்த பின் அவருக்குரித்தான இன்ஷ்யூர் செய்யப்பட்ட தொகையிலிருந்து கழிக்கப்பட மாட்டாது.

ஆம், உண்மையில் இது ஒரு பல்வேறு பயன்தரும் இன்ஷ்யூரன்ஸ் திட்டமாகும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எல் ஐ சி அலுவலகத்தையோ அல்லது எல் ஐ சி முகவரையோ அணுகவும்.

இன்ஷ்யூர் செய்யுங்கள் பத்திரமாக இருங்கள்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

பாண்டிச்சேரி முதல்வர் வி. வைத்தியலிங்கம் முகத்தில் 'அக்மார்க்' புன்னகை ஒன்று எப்போதுமே தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சங்கடமான கேள்விகளையும் அந்தப் புன்சிரிப்புடன் எளிதாகச் சமாளிக்கிறார். அவரைச் சந்தித்தோம்.

''சமீபத்தில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வாசுதேவராஜ், 'சமுதாயத்தில் பின்தங்கிய மக்களான கைத்தறி நெசவாளர்கள், செருப்புத் தைக்கும் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு நல்வாழ்வுத் திட்டங்கள் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறாரே?''

கான துணிகளை வாங்காமல், அரசு, தனியார் ஒருவரிடம் துணி வாங்கியதில் லஞ்சப் பணம், கைமாறியுள்ளது என்பது தான்!''

''முற்றிலும் தவறு. பாண்டிச்சேரி அரசைப் பொறுத்தவரை அடிப்படையான கொள்கை, எந்தவிதமான பொருளை வாங்குவது என்றாலும் டெண்டர் விடுவது என்பதுதான். அரசு நிறுவனங்களும் இதில் பங்கு பெறலாம். அரசுத் துறைக்குச் சப்ளை செய்வதற்குத்தான் அதன் சார்பு நிறுவனங்கள் உள்ளன என்ற எண்ணம் தவறானது. இந்தக் கருத்து தரம் அடிபட்டுப் போய் விடவே உதவும்.''

"கோவா போல் இங்கும் முழு அதிகாரங்கள் வேண்டும்!"

- பாண்டிச்சேரி முதல்வர் வைத்தியலிங்கம்

''எங்களுக்கு மத்திய அரசிடமிருந்து தேவையான பணம் கிடைக்கிறது. நல்வாழ்வுத் திட்டங்கள் பல இருக்கின்றன. நீங்கள் சொல்லும் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குக் கடன், மான்யம் போன்ற சலுகைகள் இருக்கின்றன.''

''ஆங்கிலோ - பிரெஞ்சு ஆலையில் அரசு கோடி கோடியாக முதலீடு செய்வதற்குப் பதிலாகச் சிறிய அளவில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களை ஆதரித்து இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறதே?''

''நலிந்து போன அந்த ஆலையை மீட்க 18 கோடிதான் செலவு செய்தோம். அது பயனுள்ள முதலீடு. காரணம் மீண்டும் துவங்கிய இரண்டாம் வருஷத்திலிருந்து லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது அரசு உதவியில் அது இயங்கவில்லை. சுயமாக இயங்கும் அளவில் வெற்றிகரமாகச் செயல்படுகிறது.''

''பாண்டியில் தற்போது பரபரப்பாகப் பேசப்படும் விஷயம், அரசு நிறுவனமான ஆங்கிலோ ஃபிரெஞ்சு ஆலையில் சீருடைக்

''மத்திய அரசு பாண்டிச்சேரிக்குக் கொடுக்கும் பணத்தில், சாலைகளைத் தாரால் அல்ல; செம்பில் கூடப் போடலாம் என்றும், பொதுப் பணித்துறையினர்தான் சரியாகச் செயல்படுவதில்லை என்றும் சொல்லப்படுகிறதே?''

''பாண்டிச்சேரியில்தான் எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல தார் ரோடு வசதி செய்யப்பட்டிருக்கிறது. சில சாலைகள் மோசமாக இருக்கலாம். நிதி வசதிக்கேற்பவும், முன்னுரிமைப்படியும் செய்து கொண்டுதான் வருகிறோம். நாங்கள் பதவியேற்ற போது 300 கி.மீ. தார் ரோடுதான். இப்போது அதை 450 கி.மீ.யாக அதிகரித்திருக்கிறோம்.''

''மத்திய அரசு கொடுக்கிற பணத்தை முற்றிலுமாகச் செலவழிக்காமல், மார்ச் மாதத்தில், மீதியுள்ள பணத்தை, அரசு நிறுவனங்களுக்குத் திருப்பி விடுகிறீர்களாமே! இது முறைகேடு அல்லவா?''

''திட்டச் செலவாக 400 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுக்கிறது. அதில் 99.5 சத



வீதம் செலவழித்து விடுகிறோம். மீதப் பணத்தை அரசு நிறுவனங்களுக்குத் திருப்பி விடுவதற்கு ஒரு காரணம் உள்ளது. குறிப்பிட்ட திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம், அந்த நிதியாண்டுக்குள் அத் திட்டம் முடிவடையாவிட்டால் காலாவதியாகி விடுகிறது. அப்படிக் காலாவதியாகி விட்டால் மீண்டும் அத் திட்டத்தைத் தீட்டி மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்ப வேண்டும். இது மேலும் மேலும் காலவிரயங்களுக்கே வழிவகுக்கும் என்பதால், சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் அத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தாற்காலிகமாக அரசுத் துறை நிறுவனங்களுக்குத் திருப்பி விடுகிறோம். பிறகு திரும்பப் பெற்றுக் கொள்கிறோம். இதில் முறைகேடு ஏதும் இல்லை!''

''பாண்டிச்சேரிக்குள், தொழில் முன்னேற்றத்தில் சற்று பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்களே?''

''சிறு தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும் முன்னுரிமை தர நினைக்கிறோம். தனியார் துறையில் 200 கோடிக்கும் அதிகமாகத் தொழில் துறையில் முதலீடு செய்திருக்கிறார்கள். அதற்கு உதவியாக, அரசுத் துறையில் 22 மெகா வாட் திறனுடைய எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிறோம்.''

''சத்யா நகர்ப் பகுதியில் உள்ள மரவாடி ஒன்றால் அந்தப் பகுதி மக்களுக்குப் பெருந் தொல்லை. மரம் அறுக்கும் போதும், பெரிய மரங்களை இறக்கும் போதும், அந்தப் பகுதியில் வீடுகள் அதிர்கின்றன...''

''நீங்கள் சொல்லும் இடம் எனக்குத் தெரியும். ஒரு குடியிருப்புப் பகுதியில் திடீரென்று மரவாடி போட முடியாது. அதற்கு லைசென்ஸூம் கிடைக்காது. எனக்குத் தெரிந்து அந்த மரவாடி துவங்கப்பட்டுப் பல வருடங்களுக்குப் பின்னரே சுற்றிலும் குடியிருப்புகள் தோன்றின. இப்போது மரவாடியைக் காலி செய்யச் சொன்னால் அது எப்படிச் சரியாகும்?''

''ஒரு லெப்டினென்ட் கவர்னர், முதல்வர், மந்திரி சபை என்று இங்கு இயங்கும் அரசைச் சற்றும் மதிக்காமல், மத்திய அரசின் உள்துறை அதிகாரிகள் செயல்படுகிறார்களாமே?''

''மத்திய அரசு பணம் கொடுப்பதால், இங்கு இயங்கும் மாநில அரசின் முடிவுகளில் தங்களுக்கும் ஒரு பங்கு இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதனால், கோவா போல் எங்களையும் முழு அதிகாரம் பெற்ற மாநிலமாக்குங்கள் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டுதானிருக்கிறோம். அதே போல் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி அதிகமாகக் கிடைக்க பாண்டிச்சேரி நகரத்துக்கு B-2 தகுதி கொடுக்க வேண்டும் என்றும் தொடர்ந்து சொல்லிக் கொண்டுதானிருக்கிறோம்.''

''பாண்டியில் உள்ள ஏ.ஸி. தியேட்டர்களில் ஏ. ஸி. போடுவதில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் இருக்க, ரவுடித்தனங்களும் அதிகமாகி விட்டன என்று எங்கள் வாசகர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள்....''

''ரவுடித்தனத்தை அடக்க நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் அதே சமயத்தில் மக்களுக்கும் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். தியேட்டரில் ஏ.ஸி. போடவில்லையானால் ஒட்டுமொத்தமாக எழுந்து வெளியே வந்து எதிர்ப்புத் தெரிவியுங்கள். அப்படிப்பட்ட தியேட்டர்களுக்கு யாரும் படம் பார்க்கப் போகாமல் சில நாட்கள் பகிஷ்கரியுங்கள். ஒருமுறை அப்படிச் செய்தால் பின்னர் எல்லாம் சரியாகும். அரசு நடவடிக்கை எடுத்து, தியேட்டர்காரர் நீதிமன்றத்துக்குச் சென்று, இழுக்கடித்துக் கொண்டிருப்பதை விட இது எளிய, நல்ல பலன் தருகிற வழி.''

பேட்டி : **தில்லப்பா**

வரலாறு படைத்தவரின் வரலாறு!



நம் நாட்டில் மிகப் பெரிய கலைஞர்கள் வாழ்ந்து நமது கலாசார வளர்ச்சிக்கு ஏராளமாக உதவியிருக்கிறார்கள் என்றாலும் அவர்களுள் அனேகம் பேர் குறித்து ஆதார பூர்வமான தகவல்கள் நமக்குக் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆனால் மேலை நாடுகளில் இத்தகைய ஆவணத் தயாரிப்பு முயற்சிகள் ஆர்வத் துடன் மேற்கொள்ளப்படுகின்றன. இந் தியக் கலைஞர்கள் பற்றி - ஏன் இந்தியா பற்றியே கூட - தெரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் அமெரிக்க பல்கலைக் கழகங்களின் உதவியை நாட வேண்டியுள்ளது! இந்த நிலை மாறும் என இப்போது ஒரு நம்பிக்கை பிறந்திருக்கிறது.

பன்னிரண்டு வயதில் முதன் முதலில் மேடையேறினார் லால்குடி ஜயராமன். அன்று முதல் இன்று (அறுபது வயதைக் கடந்துவிட்டார்) வரை அவரது வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக இருந்து வந்திருக்கிறது. அந்த வளர்ச்சி லால்குடி ஜயராமன் என்ற வயலின் கலைஞரின் தனிப்பட்ட வளர்ச்சி மட்டுமல்ல - கர்நாடக இசையின் கணிசமான வளர்ச்சியுமாகும். காரணம் :

- லால்குடி பாணி என்ற ஓர் அப்பழுக்கற்ற இனிமையான சிறப்பு அம்சத்தைக் கர்நாடக இசையின் மரபு மீறாமல் அவர் முத்திரை பதித்துள்ளார்.
- தமது குழந்தைகளுக்கு மட்டுமின்றி ஏராளமான பிற சிஷ்யர்களுக்கும் தமது இசைச் செல்வத்தை அவர் குறைவின்றி வழங்கியிருப்பவர். வயலின் கலைஞர்களை மட்டுமின்றி வாய்ப்பாட்டிலும் சிஷ்யர்களை உருவாக்கியிருக்கிறார்.
- ஏராளமான தில்லானாக்கள், வர்ணங்கள் இயற்றியிருக்கிறார். எண்ணிக்கையில் மட்டுமின்றி இசைச் செறிவிலும் புதுமைப் பொலிவிலும் இவை முக்கியத்துவமும் தனித்தன்மையும் வாய்ந்தவை.
- இவையெல்லாவற்றுக்கும் மேலாக - இசை மயமான வாழ்க்கை வாழ்பவர் அவர். சதா சர்வ காலமும் இசையைப் பற்றிய சிந்தனையும், அதை வளப்படுத்தவும் போஷிக்கவும் மேற்கொள்ளும் முயற்சிகளும் இவர் வாழ்வை ஆக்கிரமித்துள்ளன.

இத்தகைய ஒரு நபர் - சரித்திரம் படைத்துள்ள ஒரு நபர் - பற்றிய பூரணமான வரலாற்றுப் பதிவு ஒன்றை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது Indian Foundation for Performing Arts (IFPA) என்ற அமைப்பு.


இந்திய மேடைக் கலைகளின் அடிப்படை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள இவ்வமைப்பின் பிள்ளையார் சுழி முயற்சிதான் லால்குடி பற்றிய இந்த வரலாற்றுப் பதிவு. முத்திரை பதித்துள்ள இதர கலைஞர்கள் பற்றியும் இத்தகைய முயற்சிகள் செய்யப்பட்டால் அற்புதமாக இருக்கும்.

லால்குடி என்ற மனிதர், கலைஞரின் சகல அம்சங்களையும் அலசி, தகுந்த டேப்புகள், புகைப்படங்கள், வீடியோ படங்கள், எழுத்துத் தொகுப்புகள், பேட்டிகள் போன்றவற்றின் உதவியுடன் சுவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில வீடியோ, ஆடியோ பதிவுகளும் லால்குடியுடன் நேர்முகமும் இணைந்த நிகழ்ச்சி இம்மாதம் 23, 24, 25 ஆம் தேதிகளில் சென்னை நாரத கான சபா அரங்கில் காலை நேரத்தில் நடைபெறும்.

- எஸ்ஸார்

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் எஸ். முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

வீட்டிற்கு அழகான கதவு
மனதிற்கு இதமான அமைதி



மாயூரம் டிம்பர்
கதவுகள்

- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
- ★ ஈரப்பதம் குறைக்கப்பட்டது.
- ★ ரசாயன கலவை பாதுகாப்பு
- ★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு

Avoid Spending Time & Money to achieve a substitute. Come, Select & Place Your Order at:

MAYURAM TIMBER

& General Trading Corpn.

Show Room: 13, Rameswaram Road, T.Nagar, Madras – 600 017. Phone: 445207

H.O. 83, G.S.T. Road, Tambaram – 600 045. Ph: 465297

MAYAVARAM TIMBER DEPOT

No. 4, Post Office Road, Mayiladuthurai, Quaid-e-Milleth Dist. Phone: 3216

Future Ads

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

இவர்கள் அனைவரும் உங்கள் இல்லத்திற்கு வந்தால்,
அவர்கள் பருக எதை வழங்குவீர்கள்...



ஒவ்வொரு சாகர் ஸ்கிம்ட் மில்க் பவுடர் பேக் உங்களுக்கு வளமான புரதச் சத்துள்ள 5¼ லிட்டர் பாலைத் தருகிறது ஆம்! இத்தனை எளிதாக இவ்வளவு பாலை நீங்கள் இதுவரை தயாரித்தது இல்லை. அபரிமிதமான பாலைப் பெற, இன்றே வாங்குங்கள் சாகர்.

குஜராத் கோ-ஆபரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388001.

ASP-SSMP-107/92 TAM R